## அல்லாஹ்வின் கட்டளை

وَكُلُوا مِمَّا رَزَقَكُمُ اللّٰهُ
حَلٰلًا طَيِّبًا ۖ وَّاتَّقُوا اللّٰهَ
الَّذِيْٓ اَنْتُمْ بِهٖ مُؤْمِنُوْنَ

அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய, அனுமதிக்கப்பட்டுள்ளதும், நல்லதும் ஆகியவற்றை உண்ணுங்கள். நீங்கள் நம்பிக்கை கொண்டுள்ள அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (5:89)

بسم الله الرحمن الرحيم نحمده ونصلّى على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ


தொகுதி 6

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-


# பதர்


வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 41

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

07 ரபீவுல் அவ்வல் 1443 ஹிஜ்ரி கமரி 14 இஹா 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 14 அக்டோபர் 2021


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## நபிமார்கள் அனைத்து வகையான சீர்திருத்தம் செய்வதற்காக தோன்றுகின்றனர். அவர்கள் மனைவி மற்றும் பிள்ளைகளை பெறாமல் இருந்திருந்தால் அந்த அம்சத்தின் சீர்திருத்தம் எவ்வாறு முழுமை பெறும்

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...**

நபிமார்கள் அல்லாஹ்விடம் தம்மை மாய்த்துக் கொள்பவர்களாக இருக்கின்றனர். மேலும் உலகம் மற்றும் அதன் இன்பங்களிலிருந்து விலகி ஒடுகின்றனர். அவ்வாறிருக்க அவர்கள் மனைவி மக்களை பெற்றிருப்பதன் காரணம் என்ன? என்று சில அறிவிலிகள் ஐயம் கொள்கின்றனர். இந்த மக்கள் இந்த அளவு கூட புரிவதில்லை. அதாவது ஒரு நபர் இந்த விஷயங்களின் கைதியாகவும், அழியக்கூடிய இன்பங்களில் தம்மை மாய்த்துக் கொள்பவராகவும் ஆகிவிடுகின்றார். ஆனால் நபிமார்களின் இந்தக் கூட்டம் இந்த விஷயங்களிலிருந்து தூய்மையானதாக இருக்கின்றது. இந்த விஷயங்கள் அவர்களைப் பொறுத்தவரை வெறும் தொண்டாற்றுவதற்காகவே உள்ளன. அதுமட்டுமின்றி நபிமார்கள் எல்லா வகையான சீர்திருத்தத்திற்காகவும் வருகின்றனர். எனவே அவர்கள் மனைவி, மக்களை பெறாமல் இருந்திருந்தால் அந்நிலையில் அந்த அம்சத்தில் சீர்திருத்தம் எவ்வாறு முழுமை பெறும்?

எனவே நான் கூறுகின்றேன். கிறிஸ்துவ மக்கள் இல்ஹாம் குறித்து மஸீஹின் என்ன முன்னுதாரணத்தை எடுத்துரைக்க முடியும்? எதையும் எடுத்து வைக்க முடியாது. இந்த வழியை அவர்கள் அறியாதவர்களாக உள்ளனர். மேலும் அந்த படித்தரங்களை அறியாதவர்களாக உள்ளனர். அவ்வாறிருக்க அவர்கள் என்ன சீர்திருத்தம் செய்வார்கள்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்பு என்னவென்றால், அவர்கள் எல்லா அம்சங்களிலும் முழுமையான முன்னுதாரணமாக உள்ளார்கள். உலகம் மற்றும் அதன் பொருட்கள் நபிமார்கள் மீது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. அவர்கள் அழியக்கூடிய இன்பங்களை சற்றும் பொருட்படுத்துவதில்லை. மாறாக, அவர்களின் உள்ளம் இறைவனின் பக்கம் மலையிலிருந்து பாயும் ஓர் அருவியைப் போன்று பாய்கின்றது. சுருக்கமாக, நபிமார்கள் இந்த (உலக) விஷயங்களுக்கு அடிமையாக இருப்பதில்லை. மாறாக இந்த விஷயங்கள் அவர்களுக்கு தொண்டாற்றக்கூடியதாக அமைகின்றன.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 328 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## திருக்குர்ஆனை ஏற்றுக் கொண்டவர்களில் அல்லாஹ்விடமிருந்து நேரடியாக இல்ஹாம் பெறுவதற்கான வாதம் செய்யக்கூடிய மக்கள் எல்லா காலத்திலும் இருந்து வந்துள்ளனர். தற்போது இந்த பாதுகாப்பு திருக்குர்ஆனுக்கு மட்டுமே கிடைத்துள்ளது

اِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَاِنَّا لَهٗ لَحٰفِظُوْنَ

பொருள்: (குர்ஆனாகிய) இந்த அறிவுரையை நாமே இறக்கினோம். மேலும் நிச்சயமாக இதனை நாமே பாதுகாப்போம். (15:10)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனின் பாதுகாப்பிற்கான ஒரு மாபெரும் வழிமுறையாக இது அமைந்துள்ளது. அதாவது திருக்குர்ஆன் இறங்கிய பிறகு அரபி மொழியின் அறிவில் மாற்றங்கள் தடைபட்டு விட்டன. அரபியைத் தவிர்த்து உலகில் வேறு எந்த மொழியும் இவ்வாறு காணக் கிடைக்கவில்லை. அதாவது 1300 வருடங்களுக்கு முன்பு இருந்த அதே நிலை இன்றும் உள்ளது. சாசர் மற்றும் ஷேக்பியரின் 300 ஆண்டுகளுக்கு முன்பிருந்த ஆங்கிலத்தின் விளக்கத்திற்கு அவசியம் உள்ளது. ஏனென்றால் நிறைய மாற்றத்திற்கு உள்ளாகி விட்டது. ஆனால் திருக்குர்ஆனைப் புரிந்து கொள்வதற்கு பழைய அகராதிகளின் அவசியம் இல்லை. ஏனென்றால் இன்று எந்த நபர் அரபி கல்வியை படிக்கின்றாரோ அவர் திருக்குர்ஆனையும் எவருடைய உதவியின்றியும் புரிந்து கொள்ள முடியும். இந்த வெளிப்படையான ஏற்பாடுகள் மட்டுமின்றி அல்லாஹ் திருக்குர்ஆனின் பாதுகாப்பிற்கு மற்றொரு வழிமுறையையும் நியமித்துள்ளான். அதில் வானவர்களின் தலையீடு இருப்பதில்லை. அந்த வழிமுறை இல்ஹாம் ஆகும். இல்ஹாமில் சில நேரத்தில் வானவர்கள் எட்ட வைக்கக்கூடியவர்களாக மட்டுமே இருக்கின்றனர். ஆயினும் அதற்கு காரணிகளாக நாம் அவர்களை ஆக்கிவிட முடியாது. உண்மை என்னவென்றால், இறைவனின் கூற்று நேரடியாக அடியாருடன் இருக்கின்றது. வானவர்கள் வெறும் ஊடகமாக மட்டுமே இருக்கின்றனர்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 19 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

**யாசிப்பதிலிருந்து விலக கட்டளை**

1469: அபூஸயீத் அல் குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அன்ஸாரில் சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் யாசித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களுக்குக் கொடுத்தார்கள். பிறகும் நபியவர்களிடம் அவர்கள் யாசித்தார்கள். அப்போதும் அவர்களுக்குக் கொடுத்தார்கள். பிறகும் அவர்கள் கேட்க, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீண்டும் அவர்களுக்குக் கொடுத்தார்கள். எந்த அளவுக்கென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்த அனைத்தும் தீர்ந்து போனது.

“என்னிடமுள்ள செல்வத்தை நான் ஒருபோதும் உங்களிடமிருந்து பதுக்கி வைக்க மாட்டேன். (ஆயினும்) எவர் யாசிப்பதிலிருந்து விலகி இருப்பாரோ அல்லாஹ்வும் அவரை காப்பாற்றி விடுவான். எவர் தனது நஃப்ஸின் மீது அழுத்தம் கொடுத்து பொறுமை செய்வாரோ அல்லாஹ்வும் அவருக்கு பொறுமையை வழங்குவான். மேலும் பொறுமையை விடச் சிறந்த, விசாலமான எந்த அருட்கொடையும் எவருக்கும் கொடுக்கப்படவில்லை” என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(புகாரி தொகுதி 3 கிதாபுஸ் ஸகாத் – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*குத்பா பேருரை 27 ஆகஸ்ட் 2021 (முழுவதுமாக)*

*குத்பா பேருரை 03 செப்டம்பர் 2021 (முழுவதுமாக)*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 27 ஆகஸ்ட் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஸஹுர்** மாதம் **27 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய சம்பவங்களின் நற்குறிப்புகள் எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ரே போர் என்று கூறப்படும் ஒரு போர் நிகழ்ந்தது. ரே என்பது மலைகளில் அமைந்துள்ள நிலப்பரப்பைக் கொண்ட ஒரு பிரபலமான நகரத்தின் பெயராகும். இது நேஷாபூர் என்ற இடத்திலிருந்து 480 மைல் தொலைவிலும், கஸ்வீனிலிருந்து 51 மைல் தொலைவிலும் உள்ளது. ரேயில் வசிக்கக் கூடியவர்களை ராஸி என்று கூறுவார்கள். மிகவும் பிரபலமான திருக்குர்ஆன் விரிவுரையாளர் ஹஸ்ரத் இமாம் ஃபக்ருத்தீன் ராஸி (ரஹ்) அவர்கள் ரே என்ற ஊரைச் சார்ந்தவராக இருந்தார்கள். ஸியாவஹஷ் பின் மிஹ்ரான் பின் பஹ்ராம் ஷூபீன் என்பவர் ரேயின்ஆட்சியாளனாக இருந்தான். அவன் தும்பாவந்த், தபரிஸ்தான், கவ்மிஸ் மற்றும் ஜுர்ஜான் வாசிகளை தனது உதவிக்காக அழைத்தான். முஸ்லிம்கள் ரேயின் மீது தாக்குதல் நடத்துகின்றனர். நீங்கள் அவர்களுக்கெதிராக போரிட ஒன்றுகூடுங்கள். இல்லையென்றால் நீங்கள் தனித்தனியாக அவர்களுக்கு முன்னால் நிற்க முடியாது என்று அவர்களிடம் அவன் கூறினான். எனவே அந்தப் பகுதிகளிலிருந்த உதவிப் படைகளும் ரே என்ற இடத்தில் ஒன்றுகூடின. அப்போது முஸ்லிம்கள் ரேவுக்கு செல்லும் வழிப்பாதையிலேயே இருந்தனர்.

ஓர் ஈரானிய தலைவரான அபூ அல்ஃபர்ஹான் ஸைனபி சமாதான முறையில் முஸ்லிம்களை சந்தித்தான். அதற்குரிய காரணம் அநேகமாக அவருக்கு ரேயின் ஆட்சியாளர்களுடன் தொடர்பு இருந்தது. படை ரேயை அடைந்தபோது எதிரி படையின் எண்ணிக்கையிலும், இஸ்லாமிய படையின் எண்ணிக்கையிலும் எந்த சம்பந்தமும் இல்லாமல் இருந்தது. இந்த நிலையைப் பார்த்தபோது ஸைனபி நுயைம் என்பவரிடத்தில், நீங்கள் என்னுடன் சில வீரர்களை அனுப்புங்கள். நான் இரகசியமாக நகரத்தினுள் நுழைந்து விடுவேன். நீங்கள் வெளியிலிருந்து தாக்குதல் தொடுங்கள். மேலும் நகரம் வெற்றி கொள்ளப்பட்டு விடும். எனவே இரவு நேரத்தில் நுயைம் பின் முகர்ரன் அவர்கள் தனது அண்ணன் மகனான முன்ஸிர் பின் அம்ர் அவர்களின் தலைமையில் படையின் ஒரு பகுதியை ஸைனபியுடன் அனுப்பி வைத்தார். மேலும் அங்கு சென்று வெளியிலிருந்து படையை அழைத்துக் கொண்டு சுயமே நகரத்தின் மீது தாக்குதல் தொடுத்தார். போர் ஆரம்பமானது. எதிரி மிகவும் உறுதிப்பாட்டுடன் தாக்குதலுக்கு பதிலடி கொடுத்தான். ஆயினும் அவனது பின்புறத்திலிருந்து ஸைனபியுடன் நகரத்தில் நுழைந்திருந்த முஸ்லிம்களின் முழக்கத்தின் குரலை கேட்டபோது அவன் தைரியம் இழந்து விட்டான். மேலும் நகரத்தை முஸ்லிம்கள் கைப்பற்றிக் கொண்டனர். நகர வாசிகளுக்கு எழுத்துப்பூர்வமாக அடைக்கலம் வழங்கப்பட்டது.

இந்த சொற்களில் அடைக்கலம் வழங்கப்பட்டிருந்தது. அதாவது பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். இது நுயைம் பின் முகர்ரன் ஸைனபிற்கு வழங்கும் கடிதமாகும். ரே மற்றும் வெளியிலுள்ள குடிமக்களுக்கும் அவர்களுடன் இருக்கும் மக்களுக்கும் நாங்கள் இந்த நிபந்தனையின் கீழ் அடைக்கலம் வழங்குகின்றோம். அதாவது ஒவ்வொரு வயதிற்கு வந்தவரும், தனது சக்திக்கேற்ப ஜஸ்யா வரியை செலுத்த வேண்டும். மேலும் அவர்கள் நன்மையை விரும்ப வேண்டும். வழிப்பாதையை கூற வேண்டும். நம்பிக்கை துரோகம் மற்றும் பிறரை ஏமாற்றுதல் ஆகிய பணிகளை செய்யக் கூடாது. மேலும் ஒரு பகலும், இரவும் முஸ்லிம்களுக்கு விருந்து உபசரிப்பு செய்ய வேண்டும். மேலும் அவர்களுக்கு கண்ணியம் வழங்க வேண்டும். முஸ்லிம்களை ஏசிப்பேசுபவர் தண்டனை பெறுவார். அவர் மீது தாக்குதல் தொடுப்பவர் கொலை செய்யப்படுவார். எவ்வாறிருப்பினும் இது எழுதப்பட்டு சாட்சியமும் பதியப்பட்டது.

(செய்யது மீர் மஹ்மூது அஹ்மது சாஹிப் நாஸிர் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஅஹ்தே ஹஸ்ரத் உமர் (ரலி) பக்கம் 170–172 & தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 537 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 511 தொகுதி 3 பக்கம் 132 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து கவ்மீஸ் மற்றும் ஜுர்ஜான் வெற்றி தொடர்பான சம்பவங்களாகும். இது ஹிஜ்ரி 22 ஆம் ஆண்டின் சம்பவமாகும். ரே வெற்றி கொள்ளப்பட்ட நற்செய்தியை எடுத்துக் கொண்டு தூதுவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்தடைந்தார். அப்போது அன்னார் நயீம் பின் முகர்ரன் அவர்களுக்கு நீங்கள் உங்களது சகோதரரான சுவைத் பின் முகர்ரன் அவர்களை கவ்மீஸை வெற்றி கொள்வதற்காக அனுப்பி விடுங்கள் என்று எழுதினார்கள். இந்த நகரம் ரே மற்றும் நேஷாபூர் ஆகியவற்றிற்கிடையில் தப்ரிஸ்தானின் மலைத் தொடரின் இறுதிப் பகுதியில் அமைந்துள்ளது. கவ்மீஸ் வாசிகள் எந்தப் போரும் செய்யவில்லை. சுவைத் அந்த மக்களுக்கு தேவையான பாதுகாப்பு மற்றும் சமாதான வாக்குறுதியை எழுதிக் கொடுத்து விட்டார்கள். அத்துடன் தபரிஸ்தான் மற்றும் ஹுராஸான் ஆகிய இடங்களுக்கு மத்தியில் ஒரு பெரும் நகரம் இருந்தது. மேலும் தபரிஸ்தான் மக்களும் சுவைதை நோக்கி தமது மக்களை அனுப்பினர். அவர்களும் சமாதான உடன்படிக்கையை ஜஸ்யா வரியை செலுத்துவதாக கூறி சம்மதித்து விட்டார்கள். அனைத்து பகுதிகளின் மக்களுக்காகவும் அடைக்கலம் மற்றும் பாதுகாப்பு வழங்குவதாக சுவைத் எழுதிக் கொடுத்து விட்டார்.

(ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 432 – 2007 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

எந்த மார்க்க விஷயமும் பேசப்படவில்லை. எவர்கள் சமாதானம் செய்து கொண்டார்களோ அவர்களுடன் சமாதானம் செய்து கொள்ளப்பட்டது.

பின்னர் ஆஸர்பாயிஜான் வெற்றி கொள்ளப்பட்ட சம்பவமும் வருகிறது. இந்த சம்பமும் ஹிஜ்ரி 22 ஆம் ஆண்டு நடைபெற்றதாகும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சார்பாக ஆஸர்பாயிஜான் திட்டத்தின் கொடி உத்பா பின் ஃபர்கத் மற்றும் புகீர் பின் அப்தில்லாஹ் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது. இது குறித்து முன்னர் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு வழிகாட்டி இருந்தார்கள். அதாவது இருவரும் தனித்தனி திசைகளிலிருந்து தாக்குதல் நடத்த வேண்டும் என வழிகாட்டி இருந்தார்கள். புகைர் பின் அப்தில்லாஹ் படையை அழைத்துக் கொண்டு முன்னேறினார். ஜர்மீதானிற்கு அருகில் போரில் தோற்று ஓடிய ருஸ்தமின் சகோதரனான இஸ்வந்த்யாஸ் பின் ஃபர்ஹர்ராஸ் தற்போது போருக்கு மீண்டும் வந்திருந்தான். இது புகைர் அவர்களுக்கு ஆஸர்பாயிஜானின் முதல் போராக இருந்தது. எதிரி தோல்வியுற்றான். மேலும் இஸ்வந்த்யாஸ் கைது செய்யப்பட்டார்.

இஸ்வந்த்யாஸ் இஸ்லாமிய படைத்தளபதியான புகைர் அவர்களிடம் நீங்கள் சமாதானத்தை விரும்புகின்றீர்களா? அல்லது போரையா? என்று கேட்டார். புகைர் அவர்கள் சமாதானத்தை என்று பதிலளித்தார்கள். அப்படியென்றால் பின்னர் நீங்கள் என்னை உங்களுடனேயே வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். நீங்கள் என்னை கைது செய்துள்ளீர்கள். எனவே உங்களுடைய சிறையிலேயே வைத்துக் கொள்ளுங்கள். நான் அவர்களின் பிரதிநிதிகளாக இருந்து கொண்டு உங்களுடன் சமாதானம் செய்து கொள்ளாத வரை இந்த மக்கள் ஒருபோதும் சமாதானம் செய்து கொள்ள மாட்டார்கள். போரிட்டுக் கொண்டே இருப்பார்கள். மேலும் அக்கம் பக்கத்திலுள்ள மலைகளில் சிதறுண்டு சென்று விடுவார்கள். அல்லது இந்த மக்கள் கோட்டைகளில் சென்று அமர்ந்து கொள்வார்கள். எனவே புகைர் அவர்கள் இஸ்வந்த்யாஸை தம்முடனேயே வைத்துக் கொண்டார்கள். சிறிது சிறிதாக அந்தப் பகுதி அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்து கொண்டே சென்றது. உத்பா பின் ஃபர்கத் மற்றொரு பக்கத்திலிருந்து தாக்குதல் நடத்தினார். இஸ்வந்த்யாஸின் சகோதரனான ஃபஹ்ராம் அவர்களின் வழிப்பாதையில் வந்து விட்டான். ஆயினும் போரில் தோற்று ஓடிவிட்டான்.

இந்த விஷயத்தை இஸ்வந்த்யாஸ் கேள்விப்பட்டதும் தற்போது போரின் நெருப்பு தணிந்து விட்டது. சமாதானத்திற்கான நேரம் வந்து விட்டது என்று கூறினார். எனவே சமாதானம் செய்து கொண்டார். மேலும் ஆஸர்பாயிஜானின் குடிமக்கள் அவர் பக்கம் நின்றார்கள். மேலும் சமாதான உடன்படிக்கை எழுதப்பட்டது. அதன் வாசகங்கள் இவ்வாறாக இருந்தன. பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்பதிலிருந்து தொடங்கியது. அமீருல் மூமினீன் உமர் பின் கத்தாப் அவர்களின் அதிகாரியான உத்பா பின் ஃபர்கத், ஆஸர்பாயிஜான் குடிமக்களுக்கு எழுதிக் கொடுக்கும் உடன்படிக்கை. ஆஸர்பாயிஜான் மைதானத்தின் பகுதிகளிலும், மலைப்பகுதிகளிலும் மற்றும் எல்லைப் புறங்களிலும் வசிக்கக்கூடிய மக்களுக்கும் மற்றும் அனைத்து மார்க்கத்தைச் சார்ந்தவர்களுக்கும் எழுதிக் கொடுக்கப்படும் மடல் இதுவாகும்.

அவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு உள்ளது. அதாவது அவர்களின் உயிர்களுக்கும், அவர்களின் செல்வங்களுக்கும், அவர்களின் மார்க்கங்களுக்கும் இந்த நிபந்தனைகளின் கீழ் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது. அவர்கள் தமது சக்திக்கேற்ப ஜஸ்யா வரியை செலுத்துவார்கள். அவர்களின் ஆற்றலுக்கேற்ப அவர்கள் ஜஸ்யா செலுத்துவார்கள். ஆயினும் குழந்தைகள் மீதும், பெண்கள் மீதும் நீண்ட நாளாக நோய்வாய்ப்பட்டிருப்பவர் மீதும் ஜஸ்யா வரி கிடையாது. மேலும் செல்வம் இல்லாதவருக்கும், முழுமையாக தம்மை இறைவணக்கத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டவருக்கும் ஜஸ்யா வரி கிடையாது. இங்குள்ள குடிமக்களுக்கும் இது பொருந்தும். மேலும் வெளியிலிருந்து வந்து அவர்களுடன் குடியேறிய மக்களுக்கும் இது பொருந்தும். எதிர்காலத்தில் வர இருப்பவர்களுக்கும் அங்கு குடியேறுபவர்களுக்கும் இது பொருந்தும். ஒரு நாள் பகலும், இரவும் இஸ்லாமிய படைக்கு விருந்து உபசரிப்பு செய்வது அவர்களின் பொறுப்பாகும். மேலும் அவர்களுக்கு வழிப்பாதையை அறிவித்து கொடுப்பதும் அவர்களின் பொறுப்பாகும். ஒருவரிடத்தில் இராணுவ தொண்டு பெறப்பட்டால் அவருக்கு ஜஸ்யா வரி ரத்து செய்யப்படும். எவர் இங்கு வசித்து வருவாரோ அவருக்கு இந்த நிபந்தனைகள் உள்ளன. மேலும் இங்கிருந்து வெளியே செல்ல விரும்புபவர் பாதுகாப்பில் இருப்பார். அதாவது தமது பாதுகாப்பிற்குரிய இடத்தை அவர் சென்றடையும் வரை அவருக்கு பாதுகாப்பு வழங்கப்படும். ஜுன்துப் என்பவர் இந்த கடிதத்தை எழுதினார். மேலும் புகைர் பின் அப்தில்லாஹ் மற்றும் சிமாக் பின் ஹர்ஷா ஆகியோர் இதற்கு சாட்சிகள் ஆவர்.

(செய்யது மீர் மஹ்மூது அஹ்மது சாஹிப் நாஸிர் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஅஹ்தே ஹஸ்ரத் உமர் (ரலி) பக்கம் 179 & தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 539, 540 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆர்மீனியா உடன்படிக்கை பற்றி எழுதப்பட்டுள்ளது. ஆஸர்பாயிஜான் வெற்றி கொள்ளப்பட்ட பிறகு புகைர் பின் அப்தில்லாஹ் ஆர்மீனியாவை நோக்கி முன்னேறினார்கள். அன்னாருக்கு உதவி செய்வதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுராக்கா பின் மாலிக் பின் அம்ர் அவர்களின் தலைமையில் ஒரு படையை அனுப்பி வைத்தார்கள். மேலும் இந்த திட்டத்தில் படையின் உயர் தளபதியாகவும் சுராக்கா அவர்களை நியமித்தார்கள். ஒவ்வொரு முன் படையின் தலைமைப் பொறுப்பை அப்துர் ரஹ்மான் பின் ரபீஆ அவர்களுக்கு வழங்கினார்கள். துணைப் படையின் அதிகாரியாக ஹுஸைஃபா பின் உஸைத் அவர்களை ஆக்கினார்கள்.

ஆர்மீனியாவை நோக்கி புறப்பட்டுள்ள சுராக்கா பின் மாலிக் பின் அம்ர் புகைர் பின் அப்தில்லாஹ் அவர்களுடன் இந்த படை சென்று இணைந்து விடும்போது ஏனைய துணைப் படைகளின் பொறுப்பு புகைர் பின் அப்தில்லாஹ்விடம் ஒப்படைக்கப்படும் என்ற கட்டளையையும் வழங்கினார்கள். இந்த படை புறப்பட்டது. அனைத்து முதன்மை படைகளின் அதிகாரியாக அப்துர் ரஹ்மான் பின் ரபீஆ அவர்கள் வேகத்துடன் பயணம் செய்தவாறு புகைரா பின் அப்தில்லாஹ்வின் படையை விட முன்னேறிச் சென்று கர்பாப் என்ற இடத்திற்கு அருகில் சென்றடைந்தார்கள். அங்கு ஆர்மீனியாவின் ஆட்சியாளரான ஷர்ப் பரார் தங்கியிருந்தான். இந்த நபர் ஈரானியாக இருந்தார். அவர் கடிதம் எழுதி அப்துர் ரஹ்மானிடமிருந்து அடைக்கலம் பெற்றுக் கொண்டார். மேலும் அப்துர் ரஹ்மானின் அவைக்கு வந்தார். அவர் ஈரானியாக இருந்தார். அவருக்கு ஆர்மீனியர்களிடம் கடுமையான வெறுப்பு இருந்தது. அவர் அப்துர் ரஹ்மானிடம் சமாதானத்திற்கான திட்டத்தை முன் வைத்தார். மேலும் என்னிடமிருந்து ஜஸ்யா பெறப்படக்கூடாது. தேவைக்கேற்ப நான் இராணுவ உதவிகளை செய்து வருவேன் என்று கூறினார்.

இங்கு வேறொரு வகையான உடன்படிக்கை நடந்து வந்தது. அவர் சுயமே வந்து விட்டார். சமாதானம் செய்து கொண்டார். ஜஸ்யா வரி வசூலிக்கக் கூடாது. நான் இராணுவ உதவிகளை செய்வேன் என்று கூறினார். சுராக்கா அவர்கள் இந்த திட்டத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள். போர் நடைபெறாமல் ஆர்மீனியா வெற்றி கொள்ளப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இதுபோன்ற அறிக்கையும் அனுப்பப்பட்டது. அவர்கள் இதனை ஒப்புக் கொள்ள மட்டும் செய்யவில்லை. மாறாக, மிகவும் மகிழ்ச்சியையும், திருப்தியையும் வெளிப்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் சுராக்கா அவர்கள் செய்த சமாதான உடன்படிக்கை இவ்வாறாக இருந்தது. பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். இந்த உடன்படிக்கை அமீருல் மூமினீன் உமர் பின் கத்தாப் அவர்களின் கவர்னரான சுராக்கா பின் அம்ர் அவர்கள் ஷர்பா பரார், ஆர்மீனியா மற்றும் அர்மன் நாட்டு குடிமக்களுக்கு வழங்கிய மடலாகும். அவர்களின் செல்வங்களுக்கும், உயிர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது. மேலும் மார்க்கத்தின் காரணமாக அவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தப்படாது. தாக்குதலின் நிலையில் அவர்கள் இராணுவ தொண்டாற்றுவார்கள். ஆட்சியாளர் உகந்ததாக கருதும் ஒவ்வொரு பணியிலும் அவர்கள் உதவி செய்வார்கள். அவர்களுக்கு ஜஸ்யா வரி விதிக்கப்படாது. மாறாக, இராணுவத் தொண்டு ஜஸ்யாவிற்கு பகரமாக பெறப்படும். ஆனால் இராணுவத் தொண்டு வழங்காதவர்கள் மீது ஆஸர்பாயிஜான் வாசிகளைப் போன்று ஜஸ்யா வரி செலுத்த வேண்டும். மேலும் வழிப்பாதையை பற்றி கூற வேண்டும். ஒரு நாள் முழுவதற்குமான விருந்து உபசரிப்பு செய்ய வேண்டும். ஆனால் அவர்களிடமிருந்து இராணுவத் தொண்டு பெறப்பட்டால் ஜஸ்யா வரி வசூலிக்கப்பட மாட்டாது. இராணுவ உதவி பெறப்படவில்லையென்றால் ஜஸ்யா வரி வசூலிக்கப்படும். அப்துர் ரஹ்மான் பின் ரபீஆ மற்றும் சுலைமான் பின் ரபீஆ, புகைர் பின் அப்தில்லாஹ் ஆகியோர் இதற்கு சாட்சிகளாக உள்ளனர். இந்த உடன்படிக்கையை மர்ஸீ பின் முகர்ரன் அவர்கள் எழுதினார்கள். அவரும் சாட்சியாக உள்ளார்.

இதன் பிறகு சுராக்கா அவர்கள் ஆர்மீனியாவிற்கு அக்கம் பக்கத்திலுள்ள மலைகளின் பக்கம் படைகளை அனுப்ப தொடங்கினார்கள். எனவே புகைர் பின் அப்தில்லாஹ், ஹபீப் பின் முஸலமா, ஹுஸைபா பின் உஸைத், சல்மான் பின் ரபீஆ ஆகியோரின் தலைமையில் அந்த மலைகளை நோக்கி படைகள் புறப்பட்டன. புகைர் பின் அப்தில்லாஹ்விடம் தூதுவர் அனுப்பப்பட்டார். ஹபீப் அவர்கள் தக்லீஸ் என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டார்கள். ஹுஸைஃபா அவர்கள் லஅன் என்ற மலைகளில் வசிக்கக் கூடியவர்களிடம் போரிடுவதற்காக அனுப்பப்பட்டார்கள். சுராக்கா அவர்களின் இந்தப் படைகளில் புகைர் பின் அப்தில்லாஹ் அவர்களுக்கு பெரும் வெற்றி கிடைத்தது. அன்னார் மோகான் என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டிருந்தார்கள். அன்னார் மோகான் குடிமக்களிடம் அமைதிக்கான மடலை வழங்கினார்கள். அந்த மடல் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது. பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று மடல் தொடங்கியது. புகைர் பின் அப்தில்லாஹ் வெற்றி கொள்ளப்பட்ட மலைகளில் மோகான் வாசிகளுக்கு வழங்கும் கடிதம் இதுவாகும்: அவர்களின் உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் அவர்களின் மார்க்கத்திற்கும் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது. மேலும் அவர்களின் ஷரீஅத்திற்கும் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. நிபந்தனை என்னவென்றால், அவர்கள் ஜஸ்யா வரி செலுத்த வேண்டும். பருவம் அடைந்த ஒவ்வொரு நபருக்கும் ஒரு தினார் அல்லது அதன் மதிப்பு ஜஸ்யா வரியாகும். எல்லா இடங்களிலும் இந்த உடன்படிக்கை நிகழ்ந்து வந்தன. அங்கு மார்க்க சுதந்திரமும் வழங்கப்பட்டது. ஷரீஅத் சுதந்திரமும் வழங்கப்பட்டது. இஸ்லாம் மார்க்கம் வாளினால் மார்க்கத்தை பரப்பியது என்று குற்றம் சுமத்தப்படுகின்றது. இஸ்லாத்தில் நுழைந்து விடுங்கள் என்று பலவந்தமாக எவரிடமும் கூறப்படவில்லை. நல்லெண்ணம் கொள்ளுங்கள். முஸ்லிம்களுக்கு வழிப்பாதையை காட்டித் தாருங்கள். ஒரு பகல், ஓர் இரவு விருந்து உபசரிப்பு செய்யுங்கள். அப்படிப்பட்ட நபர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும் என்றே கூறப்பட்டது. அவர்கள் இந்த உடன்படிக்கையில் நிலைநிற்கும் வரையிலும், நன்மையை விரும்பும் வரையிலும் அவர்களுடன் நன்றியுடன் நடப்பது எமது பொறுப்பாகும்.

وَاللّٰهُ الْمُسْتَعَانُ அல்லாஹ் உதவியாளன் ஆவான். ஆயினும் அவர்கள் இந்த உடன்படிக்கையை முறித்துக் கொண்டால் மேலும் எந்த நபர் ஏதாவது சதித்திட்டம் தீட்டுவாரோ அவரின் அடைக்கலமும் எஞ்சியிருக்காது. ஆனால் அவ்வாறு ஏமாற்றக்கூடியவர்களை ஆட்சியாளர்களிடம் ஒப்படைத்து விட வேண்டும். இல்லையென்றால் அவர்களும் அதில் பங்கு பெற்றவர்களாக கருதப்படுவார்கள். இதற்கும் சாட்சிகள் நியமிக்கப்பட்டனர். நான்கு, ஐந்து சாட்சிகள் அதில் கையொப்பமிட்டனர்.

(செய்யது மீர் மஹ்மூது அஹ்மது சாஹிப் நாஸிர் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஅஹ்தே ஹஸ்ரத் உமர் (ரலி) பக்கம் 180–184)

அடுத்து ஹுராஸான் வெற்றி, ஹிஜ்ரி 22 ஆம் ஆண்டு நடந்தது. இதன் விவரம் இவ்வாறாகும். ஜலூலா போருக்குப் பிறகு ஈரானிய அரசன் யஸ்ஜ்ஜரத் ரே என்ற இடத்தை அடைந்தான். அங்கிருந்த ஆட்சியாளர் ஆபான்ஜாஸ்வியா யஸ்ஜ்ஜரத் மீது தாக்குதல் நடத்தினார். மேலும் யஸ்ஜ்ஜரதின் முத்திரைகளை கைப்பற்றி தமது விருப்பத்திற்கேற்ப ஆவணங்களை தயார் செய்து கொண்டார். அதன் பிறகு அந்த மோதிரத்தை அவர் திருப்பிக் கொடுத்து விட்டார். பின்னர் ஆபான் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களிடம் வந்தார். மேலும் எழுத்தில் குறிப்பிடப்பட்டிருந்த அந்த அனைத்து பொருட்களையும் திரும்ப ஒப்படைத்து விட்டார். அதாவது ஏற்கனவே தயார் செய்யப்பட்ட ஆவணங்களை திருப்பிக் கொடுத்து விட்டார். யஸ்ஜ்ஜரத் ரே என்ற இடத்திலிருந்து ஸஃப்பான் என்ற இடத்திற்கு புறப்பட்டார். யஸ்ஜ்ஜரத் அங்கு தங்குவது ஆபானிற்கு பிடிக்கவில்லை. எனவே யஸ்ஜ்ஜரத் கர்மானை நோக்கி செல்ல நேரிட்டது. அவனுடன் புனிதமான நெருப்பு இருந்தது. இந்த மக்கள் நெருப்பு வணங்கிகளாக இருந்தனர். எனவே நெருப்பையும் தம்முடன் எடுத்துக் கொண்டு சுற்றி வந்தார்கள். அவர்களின் பார்வையில் புனிதமாக இருந்த நெருப்பு அவர்களுடன் இருந்தது. பின்னர் அவன் ஹுராஸான் செல்வதற்கு திட்டமிட்டான். மேலும் மரூவில் வந்து தங்கி விட்டான். மேலும் புனிதமான நெருப்பை அங்கு ஒளியூட்டினான். அதற்காக நெருப்பை வணங்கும் ஆலயத்தை கட்டினான். மேலும் தோட்டத்தை அமைத்தான். அது மரூ என்ற இடத்திலிருந்து இரண்டு ஃபரீக் அதாவது ஆறு மைல் தொலைவில் இருந்தது. அங்கு சென்று அமைதியுடனும், பாதுகாப்புடனும் வாழத் தொடங்கினான். வெற்றி கொள்ளப்படாத பகுதிகளின்

அரபி அல்லாத மக்களிடமும் கடிதப் போக்குவரத்து நடந்தது. மேலும் பேச்சு வார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டது. எந்த அளவுக்கென்றால் அவர்கள் அனைவரும் கட்டுப்பட்டவர்களாக ஆகிவிட்டனர். மேலும் அவர்கள் வெற்றி கொள்ளப்பட்ட இடங்களின் அதாவது பாரசீகர்கள் மற்றும் புர்முஸாவாசிகள் ஆகியோரை தூண்டி விட்டனர். எனவே இவ்வாறு தூண்டி விட்டதன் விளைவாக அவர்கள் முஸ்லிம்களிடம் தனது நன்றியுணர்வின் தொடர்பை முறித்துக் கொண்டார்கள். மேலும் கிளர்ச்சி செய்து விட்டார்கள். மேலும் ஜிபால்வாசிகளும், ஃபேருஜான் வாசிகளும் அவர்களைக் கண்டு உடன்படிக்கையை முறித்துக் கொண்டார்கள். மேலும் கிளர்ச்சி செய்து விட்டார்கள்.

ஜிபால் என்பது ஈராக்கிலுள்ள ஒரு பிரபல்யமான பகுதியின் பெயராகும். அது அஸ்ஃபஹானிலிருந்து ஸப்ஜான், கர்வீன், ஹம்தான், ரே ஆகிய நகரங்களை உள்ளடக்கியதாகும். ஃபேரோஸான் அஸ்ஹியானின் ஓர் ஊரின் பெயராகும். எவ்வாறிருப்பினும் இந்த காரணங்களின் அடிப்படையில் அமீருல் மூமினீன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஈரானிய பகுதிகளில் இராணுவ முன்னெடுப்பு நடவடிக்கைகளை செய்து நுழைந்து விடுவதற்கு முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்கி இருந்தார்கள். எனவே கூஃபாவாசிகள் மற்றும் பஸ்ராவாசிகள் புறப்பட்டனர். அவர்கள் அந்த மக்களின் நிலத்தை அடைந்து கடுமையான தாக்குதலை தொடங்கி விட்டனர். அஹ்னஃப் பின் கைஸ் ஹுராஸான் இடத்தை நோக்கி புறப்பட்டார்கள். வழியில் அன்னார் மெஹர்ஜான் ஹுத்தக் எனும் இடத்தை கைப்பற்றினார்கள். மெஹர்ஜான் ஹுத்தக் என்பது புல்வானிலிருந்து ஹம்தான் வரை மலைகளுக்கு மத்தியில் அமைந்துள்ள ஒரு பரந்துபட்ட பகுதியாகும். அது பல நகரங்களையும், ஊர்களையும் உள்ளடக்கி இருந்தது. பின்னர் மேலும் தொடர்ந்து முன்னேறியவாறு அஸ்மஹானை நோக்கி புறப்பட்டார்கள். அப்போது கூஃபாவாசிகள் ஜை என்ற இடத்தை சுற்றி வளைத்திருந்தனர்.

ஜை எனும் இடமும் அஸ்மஹானின் சுற்று வட்டாரத்தில் அமைந்திருந்த ஒரு பழைய நகரத்தின் பெயராக இருந்தது. இன்றைய நாட்களில் ஏறக்குறைய வெறுமையாக உள்ளது. அரபி அல்லாத மக்கள் அதனை சுதான் நகரம் என்றும் கூறுகின்றனர். எனவே அது தபஸானிற்கு செல்லும் வழியில் ஹுராஸானில் இணைகின்றது. மேலும் பராஸ் மீது ஆட்சியாளர் தாக்குதல் தொடுத்தார். மேலும் பராஸை வாளின் மூலமாக கைப்பற்றிக் கொண்டார். அது தப்ஸான் சுற்று வட்டாரத்திலிருந்த ஒரு நகரமாகும். மேலும் அது நேஷாபூர் மற்றும் அஸ்ஃபஹானிற்கு மத்தியில் அமைந்துள்ளது. பராஸ், ஹுராஸான் ஆகிய நகரங்கள் புகழ்பெற்ற நகரங்களில் ஒரு மகத்துவமிக்க மற்றும் பிரபலமான நகரமாகும். அவர்கள் அங்கு சுஹார் பின் ஃபலான் அப்தியை தமது பிரதிநிதியாக நியமித்தார்கள். பின்னர் தொடர்ந்து முன்னேறி மர்வ்ஷாஹ் ஜஹான் என்ற இடத்தை நோக்கி புறப்பட்டார்கள். ஹுராஸான் நகரங்கள் மற்றும் ஊர்களில் மர்வ்ஷாஹ் ஜஹான் மிகவும் பிரபலமானதாகும். இது நேஷாபூரிலிருந்து 210 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இதற்கிடையில் யாருடனும் எந்தப் போரும் நிகழவில்லை. எனவே முதர்ரஃப் பின் அப்தில்லாஹ் பின் ஷேஹர் அவர்களை அனுப்பினார்கள். ஸர்ஹஸை நோக்கி ஹாரிஸ் பின் ஹிஸானை அனுப்பி வைத்தார்கள். ஸர்ஹஸ் என்பதும் ஹுராஸான் சுற்று வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு நகரமாகும். அது நேஷாபூர் மற்றும் மர்வா ஆகிய இடங்களுக்கு மத்தியில் அமைந்துள்ளது. எவ்வாறிருப்பினும் அஹ்னஃப் பின் கைஸ் அவர்கள் மர்வஷாஹ் ஜஹான் என்ற இடத்தை அடைந்தபோது யஸவ்ஜரத் மர்வரூத் என்ற இடத்திற்கு சென்று விட்டான். அங்கு வசிக்கத் தொடங்கினான். மர்ஊஸ் என்ற பெயர் இவ்வாறு ஏற்பட்டது. மரு நெருப்பு மூட்டப்படும் ஒரு வெள்ளை கல்லுக்கு கூறப்படும். அது கருப்பாக ஆவதும் இல்லை; சிவப்பாகுவதும் இல்லை. மேலும் ரூஸ் என்பதற்கு பாரசீக மொழியில் நதிக்கு கூறப்படும். எனவே இந்த நதி காமர் ஆகிவிட்டது. இந்த மர்வ்ஷாஹ் ஜஹானிலிருந்து ஐந்து நாள் பயண தொலைவில் ஒரு பெரிய நதி அமைந்துள்ளது. அஹ்னஃப் பின் கைஸ் மர்வ்ஷாஹ் ஜஹானில் தங்கினார்கள். யஸவ்ஜரத் மர்ஊஸ் என்ற இடத்தை அடைந்த பிறகு அச்சத்தின் காரணமாக பல்வேறு ஆட்சியாளர்களிடம் உதவி வேண்டி விண்ணப்பித்தான். அவன் ஹாக்கானிடமும் உதவி வேண்டி விண்ணப்பித்தான். சுகத் அரசரிடமும் உதவி வேண்டி கடிதம் எழுதினான். படையின் மூலமாக தமக்கு உதவி செய்யுமாறு கூறினான்.

சுகத்த என்ற பகுதி சமர்கந்த் மற்றும் புகாரா ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பகுதியாகும். மேலும் அவன் சீன பேரரசரிடமும் உதவி வேண்டினான். அஹ்னப் பின் கைஸ் அவர்கள் மர்வ்ஷாஹ் ஜஹானில் பாபிலி அவர்களை தமது பிரதிநிதியாக நியமனம் செய்தார்கள். இதற்கிடையில் கூஃபா படைகள் தமது நான்கு தலைவர்களின் தலைமையில் அஹ்னஃப் பின் கைஸ் அவர்களிடம் வந்தது. அனைத்து படைகளும் மர்வ்ஷாஹ் ஜஹான் என்ற இடத்திற்கு வந்தவுடன் அஹ்னஃப் பின் கைஸ் அவர்கள் மர்வ்ஷாஹ் ஜஹானிலிருந்து மர்ஊஸ் என்ற இடத்தை நோக்கி படையை அனுப்பி வைத்தார்கள். யஸவ்ஜரதிற்கு இந்த செய்தி கிடைத்த உடன் அவன் பலீக் என்ற இடத்திற்கு புறப்பட்டு விட்டான். பலக் என்பதும் ஜீஜூன் நதிக்கு அருகில் அமைந்துள்ள ஹுராஸானின் ஓர் அழகிய நகரமாக இருந்தது. எனவே அஹ்னஃப் பின் கைஸ் மர்ஊஸில் தங்கி விட்டார்கள். கூஃபாவின் படைகள் நேரடியாக பலஹிற்கு புறப்பட்டவுடன் பின்னர் அஹ்னஃப் பின் கைஸ் அவர்களும் அதனை பின்தொடர்ந்து சென்றார்கள். இறுதியில் பலீக் நகரத்தில் கூஃபாவாசிகளின் படைகளும் யஸவ்ஜரதின் படைகளும் ஒன்றை ஒன்று எதிர்கொண்டன. இரு தரப்புக்கு மத்தியிலும் போர் மூண்டது. விளைவு என்னவாகி விட்டது என்றால் அல்லாஹ் யஸவ்ஜரதை தோல்வியுறச் செய்தான். யஸவ்ஜரத் ஈரானியர்களை அழைத்துக் கொண்டு நதியை நோக்கி முன்னேறினான். மேலும் நதியை கடந்து ஓடி விட்டான். இதற்கிடையில் அஹ்னஃப் பின் கைஸ் அவர்களிடம் கூஃபா படைகள் வந்தடைந்தன. அந்த நேரத்தில் அல்லாஹ் அன்னாரின் கரங்களால் பலஹை வெற்றி கொள்ளச் செய்தான். எனவே கூஃபாவாசிகளின் வெற்றிகளில் பலீஹும் அடங்கும்.

இதன் பிறகு தப்பி ஓடிச்சென்ற ஹுராஸான் வாசிகளும் அல்லது அடைபட்டுக் கிடந்த மக்களும் நேஷாபூரிலிருந்து கமாரிஸ்தான் குடிமக்கள் வரை அனைவரும் சமாதானத்திற்கு இறங்கி வந்தனர். கமாரிஸ்தான் எப்படிப்பட்ட பகுதி என்றால் அது பல நகரங்களை உள்ளடக்கி இருந்தது. இது ஹுராஸானின் சுற்றுவட்டாரப் பகுதியாகும். தாலிகான் என்பது அதன் மாபெரும் நகரமாகும். இதற்குப் பிறகு அஹ்னஃப் பின் கைஸ் மர்ஊருஸிற்கு திரும்பிச் சென்று விட்டார்கள். மேலும் அங்கேயே தங்கினார்கள். ஆயினும் அரேபியர்களில் கண்ணியத்திற்குரியவரான ரபீ பின் ஆமிர் அவர்களை தல்ஹாரிஸ்தானில் தனது பிரதிநிதியாக நியமித்தார்கள்.

அஹ்னஃப் பின் கைஸ் அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹுராஸான் வெற்றியை பற்றிய செய்தியை எழுதி அனுப்பினார்கள். ஹுராஸான் வெற்றி செய்தியைக் கேட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதினார்கள்: அவர்களுக்கு எதிராக எந்தப் படையும் அனுப்பப்படக்கூடாது என்று நான் எண்ணியிருந்தேன். அவர்களுக்கும் நமக்கும் மத்தியில் நெருப்பின் கடல் தடையாக இருக்க வேண்டும் என்பது எனது ஆசையாக இருந்தது. இவர் கூறுகின்றார்: ஜீ எனும் நாட்டின் நிலங்களை கைப்பற்ற விரும்பி இருந்தார்கள். நாடுகளை கைப்பற்ற விரும்பி இருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆசை இவ்வாறாக இருந்தது. அதாவது நான் படையை அங்கு அனுப்ப விரும்பவில்லை என்று அன்னார் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்தக் கூற்றை கேட்டு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அமீருல் மூமினீன் அவர்களே! தாங்கள் இவ்வாறு ஏன் கூறுகின்றீர்கள்? அதற்கு அன்னார் கூறினார்கள். அதற்கு காரணம் என்னவென்றால், இங்குள்ள குடிமக்கள் மூன்று முறை உடன்படிக்கையை முறிப்பார்கள். உடன்படிக்கையை மீறுவார்கள். மூன்றாவது முறை அவர்களை தோல்வியுறச் செய்கின்ற அவசியம் ஏற்படும்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறும் உள்ளது. ஹஸ்ரத் அலி பின் அபி தாலிப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹுராஸான் வெற்றி கொள்ளப்பட்ட செய்தி கிடைத்தபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அதாவது எமக்கும் அவர்களுக்கும் மத்தியில் நெருப்பின் கடல் தடையாக வந்துவிட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: அமீருல் மூமினீன் அவர்களே! இது மகிழ்ச்சிக்குரிய சந்தர்ப்பமாகும். தங்களுக்கு என்ன பிரச்சனை உள்ளது? வெற்றி கிடைத்து விட்டது. ஆனால் தாங்களோ தடை ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கூறுகின்றீர்களே. என்ன விஷயம்? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஆம்! இது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். ஆயினும் கவலைக்குரிய விஷயம் என்னவென்றால், இந்த மக்கள் மூன்று முறை உடன்படிக்கையை மீறி விட்டார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இந்த தகவல் கிடைத்தது. அதாவது அஹ்னஃப் பின் கைஸ் இரண்டு நகரங்களையும் கைப்பற்றி விட்டார். மேலும் அவர் பலஹ் நகரத்தையும் வெற்றி கொண்டு விட்டார் என்ற தகவலும் கிடைத்தது. அப்போது அஹ்னப் பின் கைஸ் கிழக்கு வாசிகளின் தலைவர் ஆவார் என்று அன்னார் கூறினார்கள். பின்னர் அஹ்னப் பின் கைஸிற்கு இவ்வாறு எழுதினார்கள்: நீங்கள் நதியை தாண்டிச் செல்லாதீர்கள். மாறாக, நீங்கள் அதற்கு முந்தைய பகுதிகளிலேயே தங்கி இருங்கள். எந்த சிறப்புகளுடன் நீங்கள் ஹுராஸான் நகரத்தினுள் நுழைந்திருந்தீர்களோ எதிர்காலத்திலும் நீங்கள் அந்த பழக்கங்களில் நிலை நில்லுங்கள். இவ்வாறு வெற்றியும், உதவியும் எப்போதும் உங்களது பாதகங்களை முத்தமிடும். ஆயினும் நீங்கள் நதியை தாண்டுவதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். இல்லையென்றால் பாதிப்பை சந்திப்பீர்கள்.

(தாரீக் தப்ரி முதரஜிம் தொகுதி 3 பாகம் 1 பக்கம் 183–185 – 2003 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது & தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 546, 547 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 26, 105 தொகுதி 3 பக்கம் 451, 250, 37, 191, 252 தொகுதி 4 பக்கம் 347, 471, 253 – பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

யஸவ் ஜரத் முதலில் தமது அக்கம் பக்கத்திலுள்ள நாடுகளை உதவிக்காக அழைத்திருந்தான். அந்த நேரத்தில் அந்த நாடுகள் எந்த சிறப்பான உதவியையும் செய்யவில்லை. ஆனால் தற்போது யஸவ் ஜரத் சுயமே தமது ஆட்சியிலிருந்து தப்பித்து ஓடி அவர்களிடம் சென்று உதவி வேண்டினான். மேலும் அந்த நாடுகளிலிருந்து

உதவிகளை பெற்றுக் கொண்டு மீண்டும் தனது நாட்டை வெற்றி கொள்ள திட்டமிட்டான். துருக்கி நாட்டின் தலைவர் ஹாக்கா அவனுக்கு உதவி செய்தார். பலஹ் என்ற இடத்தில் தமது படையை அழைத்துக் கொண்டு வந்து விட்டான். திழுன் நதிக்கு அருகில் ஹுராஸானில் அமைந்துள்ள ஓர் அழகிய நகரம் பலஹ் ஆகும். முஸ்லிம்கள் 80 ஆயிரம் எண்ணிக்கையில் இருந்தனர். அஹ்னஃப் துருக்கி தளபதிகளின் மூன்று படை வீரர்களை கொலை செய்து விட்டார். அதனால் துருக்கி தலைவர் ஹாகான் அச்சம் கொண்டு திரும்பிச் சென்று விட்டார். சீனாவின் பேரரசர் முஸ்லிம்களின் நிலைமைகள் மற்றும் சம்பவங்களை கேட்ட பிறகு யஸவ் ஸரதிற்கு இவ்வாறு எழுதினார்: உங்களது தூதுவர் முஸ்லிம்களின் பண்புகளை எடுத்துரைத்தார். என்னைப் பொறுத்தவரை அவர்கள் மலைகளுடன் மோதினாலும் அது தூள் தூளாகி விடும். நான் உங்களின் உதவிக்காக வந்தால் முஸ்லிம்கள் அந்த பண்புகளில் நிலைநிற்கும் வரை (ஒன்றும் செய்ய இயலாது). அதாவது உமது தூதுவர் முஸ்லிம்களிடம் இன்ன இன்ன நற்பண்புகள் இருப்பதாக கூறியுள்ளார். எனவே அந்த முஸ்லிம்களுக்கெதிராக நான் போரிட வந்தால் எனது பதவியையும் அவர்கள் பறித்து விடுவார்கள். அவர்களுக்கு எந்த பாதிப்பையும் என்னால் ஏற்படுத்த முடியாது. எனவே நீங்கள் அவர்களுடன் சமாதானம் செய்து கொள்ளுங்கள். அதன் பிறகு யஸவ்ஸரத் பல்வேறு நகரங்களில் சுற்றித் திரிந்து கொண்டிருந்தான். இறுதியில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் கொலையுண்டான்.

(ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 433–435 – 2007 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது & தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 548 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அஹ்னஃப் பின் கைஸ் அவர்கள் வெற்றிக்கான நற்செய்தியை வழங்கினார்கள். மேலும் போர் செல்வங்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஸ்லிம்களை ஒன்றுகூட்டினார்கள். மேலும் அவர்களிடம் உரையாடினார்கள். வெற்றி தொடர்பான கடிதம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வழிகாட்டுதலுக்கேற்ப வாசித்துக் காட்டப்பட்டது. பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது குத்பாவில் இவ்வாறு கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் தமது தூதரைக் குறித்து குறிப்பிட்டுள்ளான். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நேர்வழியுடன் அனுப்பி வைக்கப்பட்டார்களோ அது குறித்தும் எடுத்துக் கூறியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றக்கூடியவர்களுக்கு இம்மையிலும், மறுமையிலும் விரைவாக நற்கூலி கிடைப்பதற்கு அல்லாஹ் வாக்குறுதி அளித்துள்ளான்.

பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த திருக்குர்ஆன் வசனத்தை ஓதினார்கள்:

هُوَ الَّذِیۡۤ اَرۡسَلَ رَسُوۡلَہٗ بِالۡہُدٰی وَ دِیۡنِ الۡحَقِّ لِیُظۡہِرَہٗ عَلَی الدِّیۡنِ کُلِّہٖ وَلَوۡ کَرِہَ الۡمُشۡرِکُوۡنَ

பின்னர் அன்னார் கூறினார்கள்: அனைத்து புகழும் அல்லாஹ்வுக்கே உரியன. அவன் தனது வாக்குறுதியை முழுமை செய்து விட்டான். மேலும் தமது படைக்கு உதவி செய்தான். தேடுங்கள். அல்லாஹ் மஜூஸி அரசாங்கத்தை அழித்து விட்டான். அவர்களின் ஒற்றுமையை துண்டு துண்டாக்கி விட்டான். முஸ்லிம்களுக்கு அவர்கள் பாதிப்பை ஏற்படுத்துவதற்கு அவர்களின் ஆட்சியின் ஒரு அடி மண் கூட அவர்களின் ஆளுமையில் எஞ்சியிருக்கவில்லை. கேளுங்கள்! அல்லாஹ் அவர்களின் நிலங்களுக்கும், அவர்களின் வீடுகளுக்கும், அவர்களின் செல்வங்களுக்கும் மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்கும் உங்களை வாரிசாக்கி விட்டான். ஏனென்றால், இதன் மூலம் நீங்கள் எவ்வாறு அமல் செய்கின்றீர்கள் என்று அவன் பார்க்க விரும்புகின்றான். இந்த விஷயத்தையும் நல்ல முறையில் நினைவில் கொள்ளுங்கள். உங்களைப் போன்று ஏராளமான சமுதாயங்கள் இராணுவ வலிமை பெற்றதாக இருந்தன.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஸ்லிம்களுக்கு அறிவுரை செய்து கொண்டிருந்தார்கள். நன்றாக நினைவில் கொள்ளுங்கள். உங்களைப் போன்று ஏராளமான சமுதாயங்கள் படை பலம் பெற்றிருந்தன. மேலும் கடந்த காலங்களில் ஏராளமான மார்க்க சமுதாயங்கள் தொலைதூர நாடுகளை கைப்பற்றி விட்டன. அல்லாஹ் தனது கட்டளைகளை செயல்படுத்தக்கூடியவன் ஆவான். மேலும் தமது வாக்குறுதிகளை முழுமை செய்பவன் ஆவான். ஒரு சமுதாயத்திற்குப் பிறகு மற்றொரு சமுதாயத்தை அவன் தோன்றச் செய்கின்றான். நீங்கள் அவனது கட்டளைகளை அமல் செய்வதற்காக அந்த நபரை பின்பற்றுங்கள். அதாவது அவர் உங்களுக்காக இந்த வாக்குறுதியை முழுமை செய்பவராக இருக்க வேண்டும். மேலும் உங்களுக்காக இறை வாக்குறுதியை முழுமை செய்து காட்ட வேண்டும். நீங்கள் உங்களது நிலைகளில் எந்த மாற்றங்களையும் செய்யாதீர்கள். இல்லையென்றால் அல்லாஹ் உங்களுக்கு பகரமாக வேறு மக்களை கொண்டு வந்து விடுவான். நீங்கள் மாறி விட்டால் உங்களது மார்க்கத்தை மறந்து விட்டால் மேலும் இறை கட்டளைகளின்படி செயல்படவில்லையென்றால் பின்னர் அல்லாஹ் வேறு மக்களை கொண்டு வருவான்.

பின்னர் அன்னார் கூறினார்கள்: எனக்கு தற்போது முஸ்லிம் சமுதாயத்தின் அழிவு மற்றும் நாசத்தை பற்றிய கவலையே உள்ளது. முஸ்லிம் சமுதாயத்தை எதிரி அழித்து விடுவான் என்ற அச்சம் எனக்கு இல்லை. மாறாக, முஸ்லிம் சமுதாயத்தின் அழிவும், நாசமும் முஸ்லிம்களால் மட்டுமே ஏற்படும் என்ற அச்சம் தான் எனக்கு உள்ளது.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 549 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & தாரீக் தப்ரி முதரஜிம் தொகுதி 3 பாகம் 1 பக்கம் 190 – 2003 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

இன்று நாம் இதனையே பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இந்த விஷயம் உண்மை என நிரூபணம் ஆகி வருகின்றது. முஸ்லிம்களே முஸ்லிம்களின் கழுத்துக்களை வெட்டுகின்றனர். அவர்களை அழிக்கின்றனர். ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் நடத்துகின்றனர். ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது தாக்குதல் நடத்துகின்றது. இது ஜிஹாத் என்று கூறப்படுகின்றது. ஆனால் முஸ்லிம்கள் முஸ்லிம்களையே கொலை செய்கின்றனர்.

இஸ்தஹர் வெற்றி: இஸ்தஹர் என்பது பாரசீகத்தின் தலைநகரமாக இருந்தது. இது ஸாஸானி அரசர்களின் பழம்பெரும் தலைநகரமாகவும், புன்னிய ஸ்தலமாகவும் இருந்தது. அங்கு பழங்கால நெருப்பு ஆலயம் இருந்தது. அதனை ஈரானிய பேரரசரே சுயமே கண்காணித்து வந்தார். ஹஸ்ரத் உஸ்மான் பின் அபுல் ஆஸ் (ரலி) அவர்கள் இஸ்தஹர் என்ற இடத்தை அடைவதற்கு எண்ணம் கொண்டவாறு அதனை நோக்கி முன்னேறினார்கள். மேலும் இஸ்தஹர் வாசிகளுடன் ஜவ்ர் என்ற இடத்தில் போர் நடைபெற்றது. முஸ்லிம்கள் அங்கு எதிரிகளுடன் முழுமையான முறையில் போரிட்டார்கள். பின்னர் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு ஜவ்ர் வாசிகளுக்கு எதிரில் வெற்றியை வழங்கினான். முஸ்லிம்கள் இஸ்தஹர் பகுதியையும் வெற்றி கொண்டனர். ஏராளமான மக்கள் கொல்லப்பட்டனர். ஏராளமான மக்கள் ஓடிவிட்டனர். ஹஸ்ரத் உஸ்மான் பின் அபுல் ஆஸ், ஜிஸ்யா வரி கொடுப்பதற்கும், ஸம்மி குடிமக்களாக ஆகிவிடுவதற்கும் அழைப்பு கொடுத்தார்கள். எனவே அன்னார் அவர்களுடன் கடிதத் தொடர்பை வைத்தார்கள். மேலும் ஹஸ்ரத் உஸ்மான் பின் அபுல் ஆஸ் (ரலி) அவர்களும் கடிதத் தொடர்பு கொண்டார்கள். இறுதியில் அவர்களின் ஆட்சியாளரான புர்மஸ் என்பவர் இந்த திட்டத்தை ஒப்புக் கொண்டார். மேலும் ஜஸ்யா வரி செலுத்துவதற்கு உடன்பட்டார். எனவே எந்த மக்கள் இஸ்தகர் போர் வெற்றியின்போது ஓடி விட்டார்களோ அல்லது விலகி இருந்தார்களோ அனைவரும் ஜஸ்யா வரி கொடுப்போம் என்ற நிபந்தனையுடன் பாதுகாப்பான இடத்திற்கு மீண்டும் திரும்பி விட்டார்கள். எதிரிகளின் தோல்விக்குப் பிறகு ஹஸ்ரத் உஸ்மான் பின் அபுல் ஆஸ் (ரலி) அவர்கள் போர்ச் செல்வங்களை ஒன்றுகூட்டினார்கள். மேலும் அதில் ஐந்தில் ஒரு பங்கை எடுத்து அமீருல் மூமினீன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். மேலும் எஞ்சிய பகுதிகளை முஸ்லிம்களுக்கு மத்தியில் பங்கிடுவதற்காக வைத்து விட்டார்கள். மேலும் அனைத்து முஸ்லிம்களையும் கொள்ளையடிப்பதிலிருந்து தடுத்து விட்டார்கள். மேலும் பறிக்கப்பட்ட பொருட்களை திருப்பி ஒப்படைக்குமாறு கட்டளையிட்டார்கள். மக்களிடமிருந்து என்னவெல்லாம் பறிக்கப்பட்டனவோ அவை அனைத்தையும் திருப்பி ஒப்படைக்கும்படி கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் பின் அபுல் ஆஸ் (ரலி) அவர்கள் வெற்றி பெற்ற நாளன்று இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ் ஒரு சமுதாயத்திற்கு நன்மை செய்ய விரும்புகின்றபோது அவர்களை எல்லா வகையான தீமைகளிலிருந்து காப்பாற்றுகின்றான். அவர்களிடம் அமானிதம் மற்றும் நேர்மைக்கான சிறப்புப் பண்புகளை உருவாக்கி விடுகின்றான். எனவே அனைத்து அமானிதங்களையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் உங்களிடமிருந்து உங்களின் மார்க்க விஷயங்களில் முதன் முதலில் விலகி விடும் விஷயம் அமானிதம் ஆகும். உங்களிடமிருந்து நேர்மை சென்று விடும் என்றால் பின்னர் தினமும் ஏதாவதொரு நன்மை உங்களிடமிருந்து சென்று கொண்டிருக்கும். நேர்மை சென்று விட்டால் அனைத்து நன்மைகளும் முற்றுப் பெற துவங்கி விடும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தின் இறுதி காலத்திலும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தின் முதல் ஆண்டிலும் ஷஹ்ரக் கோத்திரம் கிளர்ச்சி செய்தது. அவர்கள் பாரசீகர்களை தூண்டி விட்டனர். அவர்களை தூண்டி விட்டதன் விளைவாக பாரசீகர்கள் உடன்படிக்கையை மீறினர். அவர்களை கட்டுப்படுத்துவதற்காக ஹஸ்ரத் உஸ்மான் பின் அபுல் ஆஸ் (ரலி) அவர்கள் மீண்டும் அனுப்பப்பட்டார்கள். மேலும் பின்னாலிருந்து ஹஸ்ரத்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

அப்துல்லாஹ் பின் மஃமர் (ரலி) மற்றும் ஷிப்லைன் பிஜ்லி ஆகியோரின் தோழமையில் உதவி படைகளும் அனுப்பி வைக்கப்பட்டன. ஃபாரிஸ் என்ற இடத்தை அடைந்தபோது எதிரியுடன் அவர்களுக்கு கடுமையான போர் நிகழ்ந்தது. அதில் ஷர்ஹக் மற்றும் அவனது மகன் கொல்லப்பட்டான். அதுமட்டுமின்றி ஏராளமான மக்களும் கொல்லப்பட்டனர். ஹஸ்ரத் உஸ்மான் பின் அபுல்ஆஸ் (ரலி) அவர்களின் சகோதரரான ஹகம் பின் அபுல்ஆஸ் ஹர்ஹரகை கொலை செய்தார்கள்.

(தாரீக் தப்ரி முதரஜிம் தொகுதி 3 பாகம் 1 பக்கம் 192, 193 – 2003 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் அலா பின் ஹல்ரி அவர்கள் ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் முதல் முறையாக அஸ்தஹரை வெற்றி கொண்டார்கள். அதன் குடிமக்கள் சமாதானத்திற்குப் பிறகு உடன்படிக்கையை மீறினார்கள். அதன் விளைவாக கிளர்ச்சி பரவியது. அதைக் கட்டுப்படுத்துவதற்காக ஹஸ்ரத் உஸ்மான் பின் அபுல்ஆஸ் (ரலி) அவர்கள் தமது மகனையும், சகோதரரையும் அனுப்பினார்கள். அவர்கள் கிளர்ச்சியை அகற்றினார்கள். மேலும் ஷர்ஹக் என்ற அஸ்தகரின் அமீரை கொன்று விட்டார்கள்.

(ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 436 – 2007 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது & அல்காமில் ஃபித்தாரீக் லி இப்னு அஸீர் தொகுதி 2 பக்கம் 382–383 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது

ஃபஸா மற்றும் தாரா புஜ்ருத்: ஹஸ்ரத் சாரியா பின் ஸுனீம் (ரலி) அவர்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஃபஸா தாரா பஜ்ரித் நகரத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். இது ஹிஜ்ரி 23 ஆம் ஆண்டு நடந்த சம்பவமாகும். ஃபஸா என்பது பாரிசின் ஒரு பழைய நகரமாக இருந்தது. அது சீராஸ் என்ற இடத்திலிருந்து 216 மைல் தொலைவில் அமைந்திருந்தது. தாரா புஜ்ருத் என்பது பாரிசின் ஒரு பரந்துபட்ட பகுதியாக இருந்தது. அதில் ஃபஸா மற்றும் ஏனைய நகரங்கள் இருந்தன.

தலாயிலுன் நுபுவ்வாவில் (நூலின் பெயர்) இந்த அறிவிப்பு வருகின்றது. ஹஸ்ரத் இப்னு உமர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸாரிஆ (ரலி) அவர்களின் தலைமையில் ஒரு படையை அனுப்பி வைத்தார்கள். ஒரு நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குத்பா கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென உரத்த குரலில், ஸாரியா! அல்ஜபல். ஸாரிஆவே! மலையின் பக்கம் செல்லுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

தப்ரி வரலாற்று நூலில் இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸாரிஆ பின் ஜுனீன் (ரலி) அவர்களை ஃபஸா மற்றும் தாரா பஜ்ரிதின் பக்கம் அனுப்பி வைத்தார்கள். அவர்கள் அங்கு சென்றடைந்து மக்களை சுற்றி வளைத்தார்கள். அப்போது அவர்கள் (எதிரிகள்) தமது நட்பு வட்டத்திலுள்ளவர்களை தமது உதவிக்காக அழைத்தார்கள். அப்போது அந்த முஸ்லிம் படையை எதிர்கொள்வதற்காக அவர்கள் ஸுஹ்ராவில் ஒன்று கூடினர். அவர்களின் எண்ணிக்கை அதிகமானதுடன் அவர்கள் எல்லா புறமிருந்தும் முஸ்லிம்களை சுற்றி வளைத்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஜுமுஆ நாளன்று குத்பா கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அன்னார் ஸாரிஆ பின் ஜுனீமே! அல் ஜபல், அல் ஜபல் என்று கூறினார்கள்.அதாவது ஸாரிஆவே! மலை, மலை என்று கூறினார்கள். முஸ்லிம் படை எங்கு தங்கி இருந்ததோ அதற்கு அருகிலேயே ஒரு மலை இருந்தது. அங்கு முஸ்லிம்கள் அடைக்கலம் பெற்று விட்டால் பின்னர் எதிரி ஒரு புறமிருந்து மட்டுமே தாக்குதல் நடத்த முடியும். எனவே அவர்கள் அங்கு சென்று அடைக்கலம் பெற்றுக் கொண்டனர். இதன் பிறகு அவர்கள் போரிட்டனர். எதிரியை தோற்கடித்தனர். ஏராளமான செல்வங்களை போர் செல்வங்களாக பெற்றனர். இந்த போர்ச் செல்வங்களில் ஆபரணங்களின் ஒரு பெரும் பெட்டியும் இருந்தது. அதனை முஸ்லிம் படையினர் தங்களுக்குள் ஆலோசனை செய்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கி விட்டனர். ஹஸ்ரத் ஸாரிஆ (ரலி) அவர்கள் அந்தப் பெட்டியுடனும் வெற்றியின் நற்செய்தியுடனும் ஒரு தூதுவரை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். அந்த தூதுவர் மதீனா வந்தடைந்தபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களுக்கு உணவு வழங்கிக் கொண்டிருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கைகளில் ஒட்டகங்களை மேய்ப்பதற்கான சாட்டை இருந்தது. அந்த தூதுவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் பேசுவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தினார். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரை உணவு உண்ண அமர்த்தி விட்டார்கள். எனவே அவர் உணவு உண்ண அமர்ந்து விட்டார். அவர் உணவு உண்ட பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் செல்ல முற்பட்டார்கள். அப்போது அந்த நபர் மீண்டும் எழுந்து நின்று அன்னாரை பின்தொடர்ந்து செல்லத் தொடங்கினார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த நபர் தமக்குப் பின்னால் வருவதைக் கண்டு இவரின் வயிறு முழுமையாக இன்னும் நிரம்பவில்லை என்று கருதினார்கள். எனவே தனது வீட்டின் கதவருகே வந்தடைந்தவுடன் உள்ளே வாருங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும் உணவுத்தட்டை கொண்டு வாருங்கள் என்று வீட்டு வேலையாட்களிடம் அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். உணவு கொண்டு வரப்பட்டது. அது ரொட்டி, ஆலிவ் எண்ணெய் மற்றும் உப்பை உள்ளடக்கியதாக இருந்தது. பின்னர் உணவை உண்ணுங்கள் என்று அந்த நபரிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். உணவு உண்டு முடித்தவுடன் அமீருல் மூமினீன் அவர்களே! நான் ஸாரிஆ பின் சுனைன் (ரலி) அவர்களின் தூதுவர் ஆவேன் என்று அந்த நபர் கூறினார். அப்போது நல்வரவு என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் அந்த நபர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அருகில் வந்தார். எந்த அளவுக்கென்றால் அவரின் முட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் முட்டை தொட்டது. பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரிடம் முஸ்லிம்களைக் குறித்து கேட்டார்கள். பின்னர் ஸாரிஆ (ரலி) அவர்களைக் குறித்து கேட்டார்கள். அப்போது அவர் அது குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கூறினார். பின்னர் அந்த பெட்டியின் நிலை குறித்து எடுத்துரைத்தார். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த நபரை பார்த்தார்கள். பின்னர் வேண்டாம் என்று உரத்த குரலில் கூறினார்கள். இதில் கண்ணியத்திற்குரிய எந்த விஷயமும் இல்லை. அந்த படையிடம் திரும்பிச் செல்லுங்கள். மேலும் இதனை அவர்களுக்கு மத்தியில் பங்கிட்டு விடுங்கள் என்றும் கூறினார்கள். எனக்கு அனுப்பப்பட்ட இந்த நகைகளை படையினர் மத்தியிலேயே பங்கிட்டு விடுங்கள் என்று கூறினார்கள்.

அமீருல் மூமினீன் அவர்களே! எனது ஒட்டகம் களைத்து விட்டது என்று அந்த நபர் கூறினார். மேலும் பரிசு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் நான் கடன் வாங்கி வந்துள்ளேன். எனவே அந்த கடனை ஈடுகட்டும் அளவிற்கு தாங்கள் எனக்கு வழங்குங்கள் என்று கூறினார். அவர் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தார். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரது ஒட்டகத்திற்கு பகரமாக சதகாவிற்காக வைக்கப்பட்டிருந்த ஒட்டகங்களிலிருந்து ஓர் ஒட்டகத்தை அவருக்கு கொடுத்து விட்டார்கள். மேலும் அவரது ஒட்டகத்தை பெற்றுக் கொண்டு அதனை சதகாவின் ஒட்டகங்களோடு சேர்த்து விட்டார்கள். இவ்வாறு தூதுவர் சோர்வடைந்து இழப்பிற்குரியவராக பஸ்ரா வந்தடைந்தார். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கட்டளையின்படி அமல் செய்தார்.

மேலும் இவ்வாறும் கூறப்படுகின்றது. அதாவது தூதுவர் வெற்றியின் தூதுச் செய்தியை எடுத்துக் கொண்டு மதீனா சென்றடைந்தபோது மதீனாவாசிகள் அவரிடம் ஸாரிஆ (ரலி) அவர்களைப் பற்றி கேட்டனர். மேலும் வெற்றியைக் குறித்தும் போர் நாளன்று முஸ்லிம்கள் ஏதாவது சப்தத்தை கேட்டார்களா? என்றும் விசாரித்தனர். அதற்கு, ஆம்! ஸாரிஆவே! அல்ஜபல் என்ற வார்த்தையை நாங்கள் கேட்டோம் என்று அவர் கூறினார். அதாவது ஸாரிஆவே! மலையின் பக்கம் செல்லும்.

அந்த நேரத்தில் நாங்கள் அழிந்து போவதற்கு அருகில் இருந்தோம். எனவே நாங்கள் மலையின் பக்கம் சென்று அடைக்கலம் பெற்றோம். அப்போது அல்லாஹ் எங்களுக்கு வெற்றியை வழங்கினான்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 553, 554 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & தாரீக் தப்ரி முதரஜிம் தொகுதி 3 பக்கம் 553, 554 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 273 தொகுதி 3 பக்கம் 434 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஒரு சம்பவம் உள்ளது. அன்னாரின் கிலாஃபத்தின் நாட்களில் சொற்பொழிவு மேடையில் நின்று கொண்டு அன்னார் குத்பா கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது திடீரென يَاسَارِيَةُ الْجَبَلَ، يَاسَارِيَةُ الْجَبَلَ என்ற சொற்கள் அன்னாரின் நாவிலிருந்து வெளிப்பட்டன. அதாவது ஸாரிஆவே! மலை மீது ஏறும். ஸாரிஆவே! மலை மீது ஏறும். இந்த வாசகங்கள் தொடர்பற்றதாக இருந்தன. எனவே தாங்கள் இவ்வாறு என்ன கூறினீர்கள் என்று மக்கள் அன்னாரிடம் கேள்வி கேட்டனர். அப்போது அன்னார் கூறினார்கள்: ஓரிடத்தில் இஸ்லாமிய படையின் தளபதியான ஸாரிஆ (ரலி) அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். மேலும் எதிரி அவர்களை பின்தொடர்ந்து தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்தான். இஸ்லாமிய படை அழிந்து விடும்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

அபாயத்தில் இருந்தது. அப்போது நான் பார்த்தேன். அவர்களுக்கு அருகில் ஒரு மலை இருந்தது. அதில் ஏறி அவர்கள் எதிரியின் தாக்குதல்களிலிருந்து தப்பிக்க முடியும் என்பதை நான் கண்டேன். எனவே அவர்கள் அந்த மலையின் மீது ஏறி விடட்டும் என அவர்களுக்கு குரல் கொடுத்தேன். எனவே அவர் மலை மீது ஏறி விடட்டும் என்று நான் அவரிடம் உரத்த குரலில் கூறினேன். அப்போது அதிக நாட்கள் கழிந்திருக்கவில்லை. அப்போது ஸாரிஆ சார்பாக அதேபோன்ற கட்டுரையின் தகவல் வந்தது. அப்போது ஒரு குரல் வந்தது. அது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குரலுக்கு இணையான குரலாக இருந்தது என்று அன்னார் எழுதியிருந்தார்கள். அந்தக் குரல் எங்களுக்கு அபாயத்தை அறிவித்துக் கொடுத்தது. மேலும் நாங்கள் மலை மீது ஏறி தாக்குதலிலிருந்து தப்பித்து விட்டோம்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நாவு அந்த நேரத்தில் அன்னாரின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறி இருந்தது என்பதும், தூரமும், தொலைவும் ஒரு பொருட்டே இல்லாத ஆற்றலும், வல்லமையுமிக்க அந்த இறைவனின் கட்டுப்பாட்டில் அன்னாரின் நாவு இருந்தது என்பதும் இந்த சம்பவத்திலிருந்து தெரிய வருகின்றது.

(தஃப்ஸீரே இலாஹி, அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 575)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இது குறித்து கூறுகின்றார்கள்: சஹாபா பெருமக்களிடமிருந்து இது போன்ற இல்ஹாம் உறுதியாகவில்லை என்று கூறுவது முற்றிலும் தவறாகும் என்பதையும் நாம் கூறுகின்றோம். ஏனென்றால் சஹீஹான ஹதீஸ்களின் அடிப்படையில் சஹாபா பெருமக்களுக்கு இல்ஹாம்களும் அசாதாரண சம்பவங்களும் அதிகமாக கிடைத்து வந்தது என்பது நிரூபணமாகியுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸாரிஆ (ரலி) அவர்களின் படைக்கு அபாயத்தின் நிலைகளை அறிவித்துக் கொடுத்தது இல்ஹாமின் அடிப்படையில் ஆகும்.

அது குறித்து பைஹக்கி அவர்கள் இப்னு உமர் அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள். அது இல்ஹாம் இல்லையென்றால் வேறு என்னவாக இருந்தது? ஸாரிஆவே! அல்ஜபல், அல்ஜபல் என்ற அன்னாரின் குரல் என்னவாக இருந்தது? மதீனாவில் அமர்ந்தவாறு வாயிலிருந்து அந்த வாசகம் வெளியேறுவதும், அதே குரல் மறைவான வல்லமையால் ஸாரிஆ மற்றும் அவரது படைக்கு தொலை தூரத்தில் கேட்பதும் அசாதாரண நிகழ்வு இல்லையென்றால் அது வேறு என்னவாக இருந்தது?

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 1, ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 653, 654 – அடிக்குறிப்பு 4)

அடுத்து கர்மான் வெற்றி குறித்த குறிப்பு உள்ளது. ஹிஜ்ரி 23 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. ஹஸ்ரத் ஷுஹைல் பின் அதீ அவர்களின் கரங்களால் கர்மான் வெற்றி கொள்ளப்பட்டது. அப்துல்லாஹ் பின் புதைல் அவர்களின் கரங்களால் வெற்றி கிடைத்தது என்றும் கூறப்படுகின்றது.

(ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 436 – 2007 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது &

ஹஸ்ரத் சுஹைல் (ரலி) அவர்களின் அனைத்து முன்னணி படைகளிலும் நுஸைர் பின் அம்ர் அஜலி (ரலி) அவர்கள் இடம் பெற்றிருந்தார்கள். அவர்களை எதிர்கொள்வதற்காக கர்மான் வாசிகள் ஒன்றுகூடியிருந்தனர். மேலும் தமது நிலத்தின் பகுதிக்கு அருகில் போர் புரிந்து கொண்டிருந்தனர். இறுதியில் அல்லாஹ் அவர்களை சிதறுண்டுவிடச் செய்தான். முஸ்லிம்கள் அவர்களின் பாதைகளை அடைத்தனர். முஸைர் அவர்கள் அவர்களின் பெரும் பெரும் தலைவர்களை கொன்று விட்டார்கள். இதேபோன்று ஹஸ்ரத் சுஹைல் பின் அதீ (ரலி) அவர்கள் கிராமப்புற படைகளின் மூலம் எதிரியின் வழிகளை ஜிரஃப்த் என்ற இடத்தில் தடுத்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களும் ஷீர் என்ற வழிப்பாதையின் மூலம் அங்கு வந்தடைந்தார்கள். அந்த இடத்தில் அவர்களுக்கு ஏராளமான ஒட்டகங்களும், ஆடுகளும் கிடைத்தன. எனவே அவர்கள் ஒட்டகங்கள் மற்றும் ஆடுகளுக்குரிய விலைகளை நிர்ணயித்தார்கள். அதன் விலை அரபிகளின் ஒட்டகங்களைக் காட்டிலும் அதிகமாக இருந்ததன் காரணமாக அவர்களிடத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. எனவே அந்த கருத்து வேறுபாட்டை களைவதற்காக அது குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எழுதப்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு எழுதினார்கள்: அரபு ஒட்டகத்தின் இறைச்சிக்கேற்ப விலையை நிர்ணயம் செய்யுங்கள். இந்த ஒட்டகமும் அதற்கேற்பவே உள்ளன. உங்களின் கருத்திற்கேற்ப அதிகம் என்றால் பின்னர் அதன் விலையை கூட்டிக் கொள்ளுங்கள். என்ன செல்வம் கைக்கு வந்ததோ அதற்கேற்ப அதன் விலங்குகளின் விலை நிர்ணயிக்கப்பட்டு வந்தது.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் புதைல் பின் வர்கா குஸாயி (ரலி) அவர்கள் கர்மான் நகரத்தை வெற்றி கொண்டார்கள். கர்மான் வெற்றிக்குப் பிறகு அன்னார் (ரலி) அவர்கள் தபஸீன் என்ற இடத்திற்கு வந்தார்கள். பின்னர் அங்கிருந்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். நான் தபஸீனை வெற்றி கொண்டு விட்டேன். தாங்கள் எனக்கு இந்த இரண்டு பகுதிகளையும் வழங்கி விடுங்கள் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த இரண்டு பகுதிகளையும் அவரிடம் கொடுப்பதற்கு எண்ணம் கொண்டார்கள். அப்போது இந்த இரண்டு பகுதிகளும் மாபெரும் மாவட்டங்களாகும். மேலும் அதில் ஹுராஸானின் வாசல்கள் உள்ளன என்று ஒருவர் கூறினார். எனவே அன்னார் இந்த இரண்டு பகுதிகளையும் அவரிடம் கொடுக்கும் எண்ணத்தை ஒத்தி வைத்தார்கள்.

(தாரீக் தப்ரி முதரஜிம் தொகுதி 3 பாகம் 1 பக்கம் 196, 197 – 2013 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஸஜிஸ்தான் வெற்றி: இதுவும் ஹிஜ்ரி 23 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. ஸஜிஸ்தான் ஹுராஸானை விட பெரிய பகுதியாகும். அதன் எல்லைகள் தொலை தூர பகுதிகள் வரை பரவி இருந்தன. இந்த பகுதி சிந்து மற்றும் பலீஹ் நதிக்கு மத்தியில் இருந்தது. அதன் எல்லைகள் மிகவும் கடினமாக இருந்தன. மக்கள் தொகையும் மிக அதிகமாக இருந்தது. இந்த ஸஜிஸ்தான் ஈரானிய ஸீஸ்தான் என்றும் அழைக்கப்படுகின்றது. அல்லது ஈரானிய மக்கள் ஸீஸ்தான் என்று கூறுகின்றனர். மிகவும் பிரபலமான ஈரானிய பயில்வான் ருஸ்தம் இதே பகுதியில் வசிப்பவராக இருந்தார். இது கர்மானின் வடக்கு புறத்தில் அமைந்திருந்தது. ஸரன்ஜ் என்பது இந்த பகுதியின் தலைநகரமாக இருந்தது. பழம்பெரும் காலத்தில் இது மாபெரும் பகுதியாக இருந்தது. மேலும் ஹஸ்ரத் முஆவிய்யா (ரலி) அவர்களின் காலத்தில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இருந்தது. இந்த பகுதியின் மக்கள் ஹந்தார், துருக்கி மற்றும் ஏனைய சமுதாயங்களுடன் போரிட்டு வந்தார்கள்.

ஆஸிம் பின் அம்ர் அவர்கள் ஸஜிஸ்தான் நோக்கி கவனம் செலுத்தினார்கள். மேலும் அப்துல்லாஹ் பின் நுமைர் அவர்களும் படையை அழைத்துக் கொண்டு அவருடன் இணைந்து கொண்டார்கள். ஸஜிஸ்தான் வாசிகளுடன் அவர்களின் நெருக்கமான பகுதிகளில் போர் நடந்தது. முஸ்லிம்கள் அவர்களை தோற்கடித்தனர். ஸஜிஸ்தான் வாசிகள் ஓடி விட்டனர். எனவே முஸ்லிம்கள் அவர்களை பின்தொடர்ந்தனர். மேலும் ஸரன்ஞ் என்ற இடத்தில் அவர்களை முற்றுகையிட்டுக் கொண்டனர். அத்துடன் எங்கெல்லாம் வாய்ப்பு இருந்ததோ அங்கு பல்வேறு பகுதிகளையும் முஸ்லிம்கள் வெற்றி கொண்டே சென்றனர். இறுதியில் ஸஜிஸ்தான் வாசிகள் ஸரன்ஞ் மற்றும் ஏனைய வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகள் குறித்து சமாதானம் செய்து கொண்டனர். மேலும் முறையாக முஸ்லிம்களுடன் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டனர். மேலும் தமது உடன்படிக்கையில் இந்த உடன்படிக்கையையும் ஒப்புக் கொண்டிருந்தனர். அதாவது அவர்களின் காடுகள் பாதுகாப்பான விலங்குகள் மேய்க்கும் இடமாக கருதப்படும். எனவே அந்த இடத்தை முஸ்லிம்கள் கடக்கும்போது காடுகளிலிருந்து தப்பித்து வெளியேறினார்கள். அதாவது அவர்களுக்கு ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்தி உடன்படிக்கையை நிறுத்தி விடக்கூடாது என்ற சிந்தனையுடன் கடந்து வந்தார்கள். இந்த அளவிற்கு முஸ்லிம்கள் எச்சரிக்கையாக இருந்து வந்தனர். எவ்வாறிருப்பினும் ஸஜிஸ்தான் வாசிகள் கராஜ் வரி செலுத்துவதற்கு ஒப்புக் கொண்டனர். மேலும் அவர்களின் பாதுகாப்பிற்குரிய பொறுப்பை முஸ்லிம்கள் ஒப்புக் கொண்டிருந்தனர்.

(தாரீக் தப்ரி முதரஜிம் தொகுதி 3 பாகம் 1 பக்கம் 197 – 2013 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

முக்ரான் வெற்றி: இதுவும் ஹிஜ்ரி 23 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. ஹகம் பின் அம்ர் அவர்களின் கரங்களால் முக்ரான் வெற்றி நிகழ்ந்தது. (இன்றைய நாட்களில் அதனை மக்ரான் என்று கூறுகின்றனர்). பழைய வரலாறுகளில் முக்ரான் என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் பின்னர் ஷிஹாப் பின் முஹாரிக், சுஹைல் பின் அதீ மற்றும் அப்துல்லாஹ் பின் அப்தில்லாஹ் அவர்களும் படையில் அவர்களுடன் இணைந்து கொண்டார்கள். முஸ்லிம்கள் சிந்து அரசருக்கு எதிராக ஒன்றுகூடி போர் செய்தார்கள். மேலும் அவரை தோற்கடித்தனர். ஹகம் பின் அம்ர் அவர்கள் சுஹார் அதீயின் கைகளில் வெற்றியின் செய்தியையும், போர் செல்வங்களையும் கொடுத்து அனுப்பினார்கள். மேலும் போர் செல்வங்களில் கிடைத்திருந்த யானைகளைக் குறித்து வழிகாட்டல் வேண்டியிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு வெற்றியின் நற்செய்தி கிடைத்தபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரிடம் மக்ரானின் பூமியைக் குறித்து கேட்டார்கள்.

அமீருல் மூமினீன் அவர்களே! அதன் மென்மையான மைதானங்களின் நிலம் கூட மலைகளைப் போன்று கடினமாக உள்ளது. அங்கு தண்ணீருக்கு கடும் பஞ்சம் உள்ளது என்று அவர் கூறினார். அதன் கனி மோசமாக உள்ளது. அங்குள்ள எதிரி மிகவும் தைரியசாலியாக உள்ளான். அங்கு நன்மைக்கு எதிரில் தீமை அதிகமாக உள்ளது. அங்கு

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

அதிகமான எண்ணிக்கையும் குறைவாகவே தோன்றுகின்றது. குறைவான எண்ணிக்கை வீணாகி விடுகின்றது. அதன் பிந்தைய பகுதி அதை விட மோசமாக உள்ளது என்று கூறினார்.

அந்த நபரின் உரையாடும் முறையைப் பார்த்து நீங்கள் இலக்கிய போட்டி நடத்துகின்றீர்களா? அல்லது உண்மையான நிலையைப் பற்றி தகவல் கொடுக்கின்றீர்களா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். நான் சரியான செய்தியை தங்களுக்கு எட்ட வைத்துக் கொண்டிருக்கிறேன் என்று அவர் கூறினார். அப்போது, நீர் உண்மையை கூறுகின்றீர் என்றால் இறைவன் மீது ஆணையாக! எனது படை அங்கு தாக்குதல் நடத்தாது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

எனவே அன்னார் (ரலி) ஹகம் பின் அம்ர் மற்றும் ஹஸ்ரத் சுஹைல் (ரலி) ஆகியோருக்கு இந்த கட்டளையை எழுதி அனுப்பினார்கள். உங்கள் இருவரின் படைகளில் எதுவும் மக்ரானைத் தாண்டி முன்னேறிச் செல்ல வேண்டாம். மேலும் நதியின் மறுபுறத்திலுள்ள பகுதி வரை மட்டுமே நின்று கொள்ளட்டும். மேலும் யானைகளை இஸ்லாமிய நிலப்பகுதிகளில் மட்டுமே விற்பனை செய்யுங்கள். அதிலிருந்து கிடைக்கும் செல்வத்தை முஸ்லிம் படையினருக்கு மத்தியில் பங்கிட்டுக் கொடுத்து விடுங்கள் என்ற கட்டளையையும் பிறப்பித்தார்கள்.

(தாரீக் தப்ரி முதரஜிம் தொகுதி 3 பாகம் 1 பக்கம் 198, 199 – 2013 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 555 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

திப்ரியிலிருந்து இந்தப் போரின் விளக்கங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இந்தப் போர் குறித்து அல்லாமா ஷிப்லி அவர்கள் ஒரு குறிப்பை எழுதியுள்ளார்கள். ஃபாரூக்கி வெற்றிகளின் இறுதி எல்லை இந்த மக்ரான் ஆகும். ஆனால் இது திப்ரியின் கூற்றாகும்.

பலாதரி என்ற வரலாற்று ஆசிரியர் அறிவிக்கின்றார்: தபீலுடைய சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் படைகள் சென்றடைந்தன. இது சரி என்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் இஸ்லாத்தின் பாதம் சிந்த் மற்றும் ஹிந்திலும் வந்திருந்தது. மேலும் அவர் அடிக்குறிப்பில் எழுதுகின்றார்:

முக்ரானின் பாதி பகுதி இன்றைய காலத்தில் பலூஜிஸ்தான் என்று அழைக்கப்படுகின்றது. ஃபாரூக்கி வெற்றிகளின் எல்லை சிந்துவின் நகரமான தபீல் நகரம் வரை ஆகும் என்று பலாதரி வரலாற்று ஆசிரியர் எழுதியுள்ளார். ஆயினும் தப்ரி இறுதி எல்லை மக்ரான் என்றே குறிப்பிட்டுள்ளார்.

(ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 157 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தின் நற்குறிப்பு நடைபெற்று வருகின்றது. எதிர்காலத்திலும் எடுத்துரைக்கப்படும்.

ஜுமுஆவிற்குப் பிறகு துருக்கியின் இன்டர்நெட் ரேடியோவை நான் துவக்கி வைப்பேன். இந்த ரேடியோ சேனலின் பெயர் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் செஸி ஆகும். அதாவது உண்மை இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் குரல் ஆகும். அல்ஹம்துலில்லாஹ் தற்போது அது 24 மணி நேர ஒலிபரப்பிற்கு தயாராக உள்ளது. இந்த ரேடியோ உலகம் முழுவதும Tablet, Smart Phone மற்றும் Laptop ஆகியவற்றிலும் ஒரு Link-ன் மூலமாக கேட்கப்பட முடியும். நான்கு மணி நேர ஒரு Package ல் ஒரு நாளின் நான்கு முறை Repeat செய்யப்படும். இந்த Package ல் ஒரு மணி நேர திலாவத் துருக்கி மொழியாக்கத்துடன் ஒலிபரப்பப்படும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸ்களும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகளும், துருக்கி மொழியில் எனது குத்பாக்களின் மொழியாக்கமும் மேலும் ஒரு கேள்வி–பதில் நிகழ்ச்சியும் ஒலிபரப்பாகும்.

உலகிலுள்ள 20ற்கும் அதிகமான நாடுகள் தப்லீக் மற்றும் தர்பிய்யத் நோக்கத்திற்காக இந்த ரேடியோவிலிருந்து பயன்பெற முடியும். தப்லீக் மைதானத்திலும் மற்றும் தர்பிய்யத் நோக்கங்களிலும் இன்ஷா அல்லாஹ் இந்த ரேடியோவிலிருந்து பயன் பெறப்படும். உதாரணமாக, ஆஜஸ்பாயிஜான் உள்ளது. ஜார்ஜியா உள்ளது. இவை துருக்கி மொழி பேசக்கூடிய நாடுகள் ஆகும். முந்தைய ரஷ்யாவின் பல மாநிலங்கள் உள்ளன. அங்கு துருக்கி மொழி பேசப்படுகின்றது. இதேபோன்று துருக்கி நாட்டிலும் மேலும் துருக்கியர்கள் குடியேறியுள்ள அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் இந்த ஒலிபரப்புகளிலிருந்து அவர்கள் பயன்பெற முடியும். இந்த ரேடியோ நிலையத்தின் தயாரிப்புக்கான நற்பேறு ஜெர்மனி ஜமாஅத்தின் தப்லீக் துறைக்கு கிடைத்துள்ளது. அல்லாஹ் அவர்களுக்கும் நற்கூலியை வழங்குவானாக. மேலும் எல்லா வகையிலும் அல்லாஹ் இதனை அருளுக்குரியதாக ஆக்குவானாக. இதனை நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு துவக்கி வைப்பேன்.

சில காயிப் ஜனாஸாக்கள் உள்ளன. அதனை நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு தொழ வைப்பேன். அத்துடன் நான் இதனையும் கூறிக் கொள்கின்றேன். நமது அன்பிற்குரிய தாலிஃ சாஹிப் அவர்களின் ஜனாஸா வந்தடையவில்லை. சில நாட்கள் ஆகிவிடக்கூடும். எனவே அது வந்தவுடன் அதன் பிறகு ஜனாஸா தொழுகை நிறைவேற்றப்படும் இன்ஷா அல்லாஹ். பின்னர் அங்கு அவரின் நற்குறிப்புகள் எடுத்துரைக்கப்படும்.

நான் இன்று தொழ வைக்க இருக்கின்ற காயிப் ஜனாஸாக்களில் முதலாவது ஜனாஸா மராகஷைச் சார்ந்த மதிப்பிற்குரிய முஹம்மத் அல்முக்தார் கிப்த் சாஹிப் அவர்களுடையதாகும். 73 வது வயதில் அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் 2009 ஆம் ஆண்டில் பைஅத் செய்தார்கள். மிகவும் தூய அஹ்மதியாக இருந்தார்கள். பைஅத்திற்குப் பிறகு ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதிலும் அஹ்மதிய்யத்தின் பிரச்சாரத்திலும் எப்போதும் ஈடுபட்டிருந்தார்கள். சமூகத்தின் தவறான கொள்கைகளை சரி செய்வதில் அன்னார் மிகவும் முக்கிய பங்கு வகித்துள்ளார். மேற்கு மராகஷைச் சேர்ந்தவராக அன்னார் இருந்தார்கள். அங்குள்ள சதர் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

மர்ஹூம் ஓய்வு பெற்ற இராணுவ வீரராக இருந்தார். கல்வியறிவு பெற்றவராக இருந்தார். அரபி மட்டுமின்றி ஃபிரான்ஸிஸி மற்றும் Spanish மொழிகளில் புலமை பெற்றவராக இருந்தார். ஹமாமத்துல் புஷ்ரா என்ற நூலைப் படித்து விரைவாகவே பைஅத் செய்து விட்டார். அதன் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஏனைய புத்தகங்களையும் மிகவும் ஆர்வத்துடனும், நேசத்துடனும் குறைந்தபட்சம் இரண்டு முறை படித்தார். பின்னர் தப்ஸீரே கபீரை படித்தார். பின்னர் அதன் நகல்களை எடுத்து அதை தொகுதிகளாக மாற்றி அஹ்மதிகளிடம் பங்கிட்டுக் கொடுத்தார். எங்களது பகுதிகளில் ஜமாஅத் அமைப்பு நிலைபெற்றபோது அன்னார் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்காக வாழ்க்கையை அர்ப்பணித்திருந்தார். மேலும் பல்வேறு ஜமாஅத் சுற்றுப் பயணங்களை செய்துள்ளார். பொருள் தியாகத்திலும் முன்னணியில் இருந்து வந்தார். இன்று நான் பிஸியாக இருக்கின்றேன். அல்லது இந்த தொண்டை என்னால் செய்ய முடியாது என்று அன்னார் ஒருபோதும் கூறியது கிடையாது. பெரும் உறுதியான எண்ணங்களுக்கு சொந்தக்காரராக இருந்தார். அதுபோன்ற நிலை இளைஞர்களிடம் கூட காணக் கிடைப்பதில்லை.

தொடர்ந்து எழுதுகின்றார்கள்: கிலாஃபத் அமைப்பிற்கு முழுமையாகவும் உடனடியாகவும் கட்டுப்பட்டு வந்தார்கள். தப்லீக் செய்வதற்கு பெரும் உத்வேகம் இருந்தது. வண்டியிலும், பேருந்திலும், இரயிலிலும், கடையிலும் ஒவ்வொரு சிறியவருக்கும், பெரியவருக்கும் தப்லீக் செய்து வந்தார்கள். குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் ஜமாஅத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்தார்கள். தஹஜ்ஜுத் தொழுகையை மர்ஹூம் தொடர்ந்து நிறைவேற்றி வந்தார்கள். ஒவ்வொரு திங்கட்கிழமை மற்றும் வியாழக்கிழமையன்று மர்ஹூம் நோன்பு நோற்று வந்தார்கள். நான் கூறிய கிலாஃபத் ஜூப்ளி துஆக்களை எப்போதும் செய்து வந்தார்கள். தினமும் 5 முதல் 10 சூராக்களை திருக்குர்ஆன் திலாவத் செய்து வந்தார்கள். நடந்து செல்லும்போதும் திருக்குர்ஆனை மனனம் செய்து வந்தார்கள். திரும்பத் திரும்ப ஓதி வந்தார்கள். சில முறை வழிப்பாதையில் நடந்து செல்லும்போது திருக்குர்ஆன் ஓதுவதில் எவ்வாறு மும்முரமாகி விடுவார்கள் என்றால் அக்கம் பக்கத்திலுள்ள சூழலை முற்றிலும் மறந்து விடுவார்கள். ஒரு வகையில் திருக்குர்ஆன் மீது அவர்களுக்கு ஓர் அதீதமான அன்பு இருந்தது. மாறாக, சிலர் இவ்வாறும் கூறுகின்றனர்: இரவில் தூங்கும்போதும் கூட அன்னாரின் வாயிலிருந்து திருக்குர்ஆனை ஓதும் சப்தம் கேட்டு வந்தது. மர்ஹூம் 9 ஆண்டுகள் வரை மேற்கு மராகஷில் துணை சத்ர் ஜமாஅத் ஆகவும், அன்ஸாருல்லாஹ் சத்ராகவும், செகரட்டரி மால் ஆகவும் தொண்டாற்றும் நற்பேறு பெற்றுள்ளார்கள். மர்ஹூம் மூஸியாக இருந்தார். அன்னாரின் மனைவியும் மிகவும் தூயவரும், வஸிய்யத் செய்தவரும் ஆவார்கள்.

அடுத்த நற்குறிப்பு மஸ்ஜித் அக்ஸா மற்றும் மஸ்ஜித் முபாரக் காதியானின் முன்னாள் காதிம் மஸ்ஜித் மதிப்பிற்குரிய மஹ்மூத் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் அன்னார் 74 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் பெல்காமைச் சேர்ந்த மக்தூம் ஹுஸைன் சாஹிப் அவர்களின் மகனாக இருந்தார்கள். அன்னார் கர்நாடகா மாநிலத்திலிருந்து ஹிஜ்ரத் செய்து காதியானிற்கு வந்திருந்தார்கள். 28 ஆண்டுகள் வரை மஸ்ஜித் அக்ஸா மற்றும் மஸ்ஜித் முபாரக்கில் மஸ்ஜித் காதிமாக தொண்டாற்றும் நற்பேறை அன்னார் பெற்றுள்ளார்கள். மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். மர்ஹூம் நோன்பு மற்றும் தொழுகையை பேணுபவராக இருந்தார்கள். தஹஜ்ஜுத் தொழுபவராகவும், துஆ செய்யும் மனிதராகவும் இருந்தார்கள். பள்ளிவாசலுடன் அன்னாருக்கு சிறப்பான அன்பு இருந்தது. அன்னார் ஒரு மனைவி மட்டுமின்றி இரண்டு மகன்களையும் ஒரு மகளையும் தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள்.

அடுத்த ஜனாஸா கேரளாவைச் சேர்ந்த அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களின் மனைவியான ஸவ்தா சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் 76 வது வயதில் ஜூலை 22 ஆம் தேதி மரணமடைந்துள்ளார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூமா கபாபீரின் முபல்லிக் இன்சார்ஜ் ஷம்ஷுத்தீன் சாஹிப் மலபாரி அவர்களின் தாயார் ஆவார்கள். ஷம்ஷுத்தீன் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

எனது தாயார் V.T.முஹம்மது சாஹிப் மர்ஹூம் அவர்களின் மகளாக இருந்தார்கள். அன்னார்

பாலக்காடு மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளின் முதல் அஹ்மதியாக இருந்தார்கள். 1937 ஆம் ஆண்டில் பைஅத் செய்யும் நற்பேறு பெற்றார்கள். பின்னர் நீண்ட காலம் வரை எதிரிகளிடமிருந்து கடுமையான அநீதிகளை எதிர்கொண்டு வந்தார்கள். சமூக புறக்கணிப்பின்போது எனது தாயார் ஒன்றரை வயது கொண்டவராக இருந்தார்கள். அப்போது அன்னாரின் தாயார் அதாவது எனது தாய்வழிப் பாட்டி மற்றும் அன்னாரின் மகள் மரணமடைந்தார்கள். மரணத்திற்குப் பிறகு எதிரிகள் எனது தாய்வழிப் பாட்டியை அடக்கம் செய்ய விடவில்லை. அதன் காரணமாக 40 கி.மீ தொலைவிலிருந்த ஒரு நகரத்தின் பொது கபருஸ்தானில் அவர்களை அடக்கம் செய்ய நேரிட்டது. எனது தாய்வழிப் பாட்டனார் அவர்கள் தனது சிறிய வயதுடைய பிள்ளையை அழைத்துக் கொண்டு ஹிஜ்ரத் செய்து விட்டார்கள். இவ்வாறு தாயார் குழந்தைப் பருவம் முதலே சோதனைகளை கடந்து வந்தார்கள். மர்ஹூமா நோன்பு மற்றும் தொழுகையை பேணக்கூடியவராகவும், வஸிய்யத் செய்தவராகவும் இருந்தார்கள். படைப்பினங்கள் மீதான அன்பு அவர்களிடத்தில் நிறைந்து காணப்பட்டது. ஒவ்வொரு துன்பத்திற்குள்ளான நபருக்காகவும் துஆ செய்வார்கள். அந்த நபர் தமக்கு முன்னால் இருந்தால் அவருக்கு உதவி செய்வார்கள். இது அன்னாரின் பழக்கமாக இருந்தது. மர்ஹூமா தமக்குப் பிறகு கணவரை மட்டுமின்றி 4 மகன்களையும், 2 மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

அன்னாரின் மகன்வழிப் பேரனும் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஆவார். ஒரு மகன் முபல்லிக் ஆக உள்ளார். அவர் வெளியில் இருந்தார். ஜனாஸாவில் அவரால் பங்கு பெற முடியவில்லை. அல்லாஹ் மர்ஹூமாவின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

அடுத்த நற்குறிப்பு ஃபைஸலாபாத்தைச் சேர்ந்த ஷேக் அப்துல் மஜீத் சாஹிப் அவர்களின் மனைவி ஸயீதா மஜீத் சாஹிபா அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் 86 வது வயதில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡن

அன்னாரின் மகன் ஷேக் வஹீத் சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்கள்: எங்களின் குடும்பத்தில் எங்களின் தந்தைவழிப் பாட்டனார் ஹஸ்ரத் பரக்கத் அலி காதியானி (ரலி) அவர்களின் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது.

அன்னாரின் தந்தைவழிப் பாட்டனாரும், தந்தைவழிப் பாட்டியும் இந்த கண்ணியத்தை பெற்றனர். அதாவது அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியாக இருந்தார்கள்.

ஸயீதா மஜீத் சாஹிபா நீண்ட காலம் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். தொடக்கத்தில் ஹல்கா சதராகவும், செகரட்டரி மால் என்ற அடிப்படையிலும் பின்னர் 1982 முதல் லஜ்னா இமாயில்லாஹ் ஃபைஸலாபாத் மாவட்டம் புதிய வடிவம் பெற்றதிலிருந்து செகரட்டரி மால் என்ற பொறுப்பில் 7 வருடங்கள் தொண்டாற்றி வந்தார்கள். மிகவும் உழைப்புடன் 82 மஜ்லிஸ்களில் முறையாக சுற்றுப்பயணம் செய்து ஒவ்வொரு மஜ்லிஸிலும் பொறுப்பாளர்களின் பணிகளை கண்காணித்து வந்தார்கள். மால் துறையின் பதிவேடுகளையும், சந்தாக்கள் குறித்த நேரத்தில் கிடைப்பதையும், அனுப்பி வைப்பதிலும் சிறப்பான பார்வை வைத்திருந்தார்கள்.

அன்னாரின் மாவட்டத்தின் முன்னாள் சத்ர் புஷ்ரா ஸமீ சாஹிபா இவ்வாறு கூறுகின்றார்கள்: ஒரு முறை ஜமாஅத் சுற்றுப் பயணத்திலிருந்து திரும்பி வரும்போது கொள்ளையர்கள் வண்டியை தடுத்து நிறுத்தினர். அப்போது ஜமாஅத் சந்தா பணம் இருந்த பர்ஸை உடனடியாக தனது கால்களுக்கு கீழே மறைத்து விட்டார்கள். சந்தா பணம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள். தனது நகைகள் பறிக்கப்பட்டு செல்வதை சற்றும் பொருட்படுத்தவில்லை. நகைகளை கொள்ளையர்கள் அன்னாரிடமிருந்து பறித்து விட்டார்கள். ஆனால் சந்தா பணம் பாதுகாக்கப்பட்டது. சந்தா பணம் தப்பித்து விட்டது என்பதில் அவர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். தன்னிடமிருந்த நகைகளையெல்லாம் மரணத்திற்கு சில மாதங்களுக்கு முன்பு ஜமாஅத்தின் பல்வேறு திட்டங்களுக்கு கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களை பல முறை படித்துள்ளார்கள். ஏராளமான சிறப்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். இறைவன் மீதான நேசத்தில் முன்னேறி இருந்தார். துஆ செய்யக்கூடியவராகவும், அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொள்ளக்கூடியவராகவும் மர்ஹூமா இருந்தார். கிலாஃபத்துடன் ஏராளமான அன்பும், பற்றின் தொடர்பும் வைத்திருந்தார். தமது மகன்களுக்கும், மருமகள்களுக்கும், மகன்வழிப் பேரன்களுக்கும், பேத்திகளுக்கும் எப்போதும் கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக இருப்பதற்கும், காலத்தின் கலீஃபாவிற்கு துஆ செய்து வருவதற்கும், காலத்தின் கலீஃபாவின் குத்பாக்களை கேட்பதற்கும் அறிவுறுத்தி வந்தார்கள். மர்ஹூமா மூஸியாக இருந்தார்கள். தமக்குப் பிறகு தமது நினைவாக கணவரை மட்டுமின்றி 8 மகன்களையும், ஏராளமான பேரன் பேத்திகளையும், கொள்ளுப் பேரன்களையும், கொள்ளுப் பேத்திகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

அல்லாஹ் இந்த அனைத்து மர்ஹூம்களுடனும் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அவர்களின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. நான் கூறியதுபோன்று ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

(தமிழில்: மவ்லவி அ.அப்துர் ரஹ்மான் தாஹிர்)

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஆழ்ந்து சிந்திக்கக்கூடிய, திக்ரே இலாஹி செய்யக் கூடிய, தப்லீக் பணிகளை ஆர்வமுடன் செய்யக் கூடிய மற்றும் திருக்குர்ஆனை அழகிய முறையில் ஓதக்கூடிய திஃப்லாகவும் அவர் இருந்தார். பிற்காலத்தில் இளமையில் மேலும் அதிகமான சிறப்புகள் அவரிடம் வெளிப்பட்டன.

அவரது ஒரு கஸின் முபாரகா ரஹ்மான் ஆவார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: நான் எப்போதும் தாலிஃ அவர்களிடம் உணர்ந்த சிறப்பு என்னவென்றால், அவர் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் என்ற முறையில் போதும் என்ற மனமுடையவராகவும், எளிமையான நபராகவும் இருந்தார். பலமுறை இறைவன் தன் மீது செய்த அருட்களை எண்ணி வந்தார். ஒருபோதும் நான் அவரிடத்தில் எவ்வகையான உலக பேராசையையும் கண்டதில்லை. மாறாக, அவருக்கு முன்னால் உலக விஷயங்கள் பேசப்பட்டால் தனது சிறப்பான தொனியில் புன்முறுவல் செய்வார். வக்ஃப் செய்ததன் காரணமாக இறைவன் அவரை இந்த அனைத்து (உலக) விவகாரங்களிலிருந்தும் கவனமற்றவராக ஆக்கிவிட்டான். மேலும் அவரது ஒவ்வொரு தேவையையும் இறைவன் சுயமே பூர்த்தி செய்து விட்டான் என்று நன்றி செலுத்தி வந்தார். உண்மையிலேயே வாழ்க்கையை அர்ப்பணித்தவராக அவர் இருந்தார்.

அடுத்து அவரது ஒரு நண்பரும், முரப்பியுமான நவ்ஷேர்வான் ரஷீத் சாஹிப் கூறுகின்றார்கள்: எனக்கு கடந்த மூன்று ஆண்டுகளாக தாலிஃ சகோதரருடன் MTA News ல் பணி செய்ய சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த மூன்று வருட காலத்தில் தாலிஃ எனது சக ஊழியராக மட்டும் இருக்கவில்லை. மாறாக, எனது ஆசிரியராகவும் இருந்தார். மேலும் அதை விட அதிகமாக எனது நண்பராகவும், சகோதரராகவும் இருந்தார். நான் இந்த மூன்று வருட காலத்தில் தாலிஃ அவர்கள் தொடர்ந்து வியாழக்கிழமையன்று நோன்பு நோற்பதை கண்டுள்ளேன். தனது ஐவேளை தொழுகைகளை மிகவும் கருத்தில் கொண்டு வந்ததையும் பார்த்துள்ளேன். நேரத்திற்கு முன்பாகவே பள்ளிவாசலுக்கு வந்து விடுவார். மேலும் சந்தாக்களிலும் குறித்த நேரத்திற்கு முன்பாகவே அவர் செலுத்தி வந்துள்ளதையும் நான் பார்த்து வந்துள்ளேன்.

எவ்வாறிருப்பினும் ஏராளமான சம்பவங்கள் உள்ளன. மக்கள் அதனை எழுதியுள்ளனர். ஆனால் நேரத்தை கருத்திற்கொண்டு சிலவற்றை நான் எடுத்துரைத்து விட்டேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பௌதீக, ஆன்மீக குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதற்கான உரிமையை அவர் வழங்கி விட்டார். மேலும் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தார். எனவே முஹர்ரம் மாதத்தில் குர்பானிக்காக அவரை அல்லாஹ் தேர்ந்தெடுத்துக் கொண்டான். அல்லாஹ் அவரை இவ்வாறு எடுத்துக் கொண்டான். நான் கூறியதுபோன்று அவர் ஒரு வைரமாகவும், வாழ்கையை அர்ப்பணித்தவராகவும் இருந்தார்.

அல்லாஹ் அவரது அந்தஸ்துகளை அதிகரித்துக் கொண்டே செல்வானாக. அல்லாஹ் அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதங்களில் அவருக்கு இடமளித்திருப்பான் என்று நான் நம்புகிறேன். மாறாக, அவரது மரணத்திற்குப் பிறகு ஒருவர் இவ்வாறு கனவு கண்டுள்ளார். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் நின்று கொண்டிருக்கின்றார்கள். தாலிஃ ஓடிச் சென்று அன்னாரை கட்டி அனைத்துக் கொள்கின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், வா! என் மகனே! வரவேற்கின்றேன் என்று கூறி அவரை அனைத்துக் கொள்கின்றார்கள்.


ஆக அவர் எவ்வளவு நற்பேறு பெற்ற நபராக உள்ளார். மார்க்கத்திற்காக தியாகம் செய்து இந்த அந்தஸ்தை பெற்றுக் கொள்பவர்கள் எத்தனை நற்பேறு பெற்ற நபர்களாக உள்ளனர். அல்லாஹ் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளின் பாதுகாவலனாகவும், உதவியாளனாகவும் இருப்பானாக. அவர்களுக்கு பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக. அவரது தாய், தந்தைக்கும், சகோதர, சகோதரிகளுக்கும் பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக. அவரது சகோதர, சகோதரிகளுக்கும், அவரது பிள்ளைகளுக்கும் அவரது நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக. தொழுகைக்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் இன்று ஜனாஸா தொழுகை நடைபெறும். ஜனாஸா வந்து விட்டது.

(தமிழில்: மவ்லவி அ.அப்துர் ரஹ்மான் தாஹிர்)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS

DOORS & STEELS EXPERT



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

# ஜும்ஆ பேருரை

## ஷஹீத் செய்யத் தாலிஃ அஹ்மதின் ஒளிரும் பண்புகளின் நற்குறிப்புகள்

ஸய்யிதுனா அமீருல் மு஀மினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 03 செப்டம்பர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **03 ஆம் தேதி** ஆற்றிய **ஜும்ஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

கடந்த நாட்களில் நமது மிகவும் அன்பிற்குரிய ஒரு பிள்ளையும், வாழ்க்கையை அர்ப்பணித்தவருமான தாலிஃ அஹ்மத் பின் செய்யது ஹாஷிம் அக்பர் அவர்களின் ஷஹாதத் சம்பவம் கானாவில் நிகழ்ந்தது. اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْن

(ஆகஸ்ட்) 23 மற்றும் 24 தேதியின் நடு இரவில் MTA குழு கானாவின் வட மண்டலத்தில் ஒளிப்பதிவு செய்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்தது. அப்போது வழியில் 7:15 மணியளவில் கொள்ளையர்களின் துப்பாக்கிச் சூட்டால் அந்தக் குழுவிலிருந்த 3 உறுப்பினர்களில் செய்யத் தாலிஃ அஹ்மத் மற்றும் உமர் ஃபாரூக் என்ற இரண்டு அன்பிற்குரியவர்கள் காயமுற்றனர். சுமார் 4:15 மணி நேரத்திற்குப் பிறகு அவர்களுக்கு முதலில் Polyclinic ல் மருத்துவ சிகிச்சை நடந்துள்ளது. அதன் பிறகு பெரிய மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அப்போது வழியில் செய்யத் தாலிஃ அஹ்மத் அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். ஏனைய நாடுகளில் சில ஷஹாதத்துகள் நடந்துள்ளன. ஆனால் இது இங்கு நடந்த முதல் ஷஹாதத் ஆகும். அநேகமாக இது வாகிஃபே நவ் UK வின் முதல் ஷஹாதத் ஆகும் என்று நான் கருதுகிறேன்.

செய்யத் தாலிஃ அஹ்மத் மதிப்பிற்குரிய ஹஸ்ரத் அம்மத்துல் லத்தீஃப் பேகம் சாஹிபா மற்றும் செய்யத் மீர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் ஆகியோரின் மகன்வழிப் பேரனாக இருந்தார். இவ்வாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்களின் மகள்வழி கொள்ளுப் பேரனாகவும், டாக்டர் மீர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் அவர்களின் கொள்ளுப் பேரனாகவும் மகன்வழிப் பேரனாகவும் இருந்தார். மேலும் ஹஸ்ரத் மீர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் ஹஸ்ரத் நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா அவர்களின் சிறிய சகோதரராக இருந்தார்கள். எனவே இந்த அடிப்படையில் ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்களுடனும் அவரின் தொடர் இணைகிறது. மேலும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்களின் காரணமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடனும், அம்மா ஜான் அவர்களுடனும் மீண்டும் ஒரு உறவும் நிலைபெறுகிறது. இதேபோன்று ஷஹீத் மிர்ஸா குலாம் காதிர் அவர்களின் மருமகனாகவும் அவர் இருந்தார்.

அல்லாஹ்வின் அருளால் மூஸியாகவும் இருந்தார். நான் கூறியதுபோன்று வக்ஃபே நவ் திட்டத்திலும் இணைந்திருந்தார். Bio Medical Science யில் Degree பெற்றிருந்தார். பின்னர் Journalism யில் மாஸ்டர் செய்திருந்தார். 2013 ஆம் ஆண்டு வாழ்க்கையை அர்ப்பணித்தார். பல்வேறு அலுவலகங்களில் பணி செய்த பிறகு கடைசியாக Press & Media வில் அவரது பணி நியமனம் நிகழ்ந்தது. அதற்கு முன் செய்யத் தாலிஃ அஹ்மத் உள்ளூர் அளவிலும் தொண்டுகள் ஆற்றிக் கொண்டிருந்தார். குத்தாமுல் அஹ்மதிய்யா ஹார்ட்லேபூல் பகுதியின் அத்ஃபாலுக்கான கல்வி மற்றும் தஃலீம் துறைகளில் பணி செய்துள்ளார். 2016 ஆம் ஆண்டில் MTA News யில் முழுமையாக அவரது பணி நியமனம் நிகழ்ந்தது. அதற்கு முன் Review of Religion பத்திரிகையில் Indexing மற்றும் Tag Heading பிரிவின் தலைவராகவும் தொண்டாற்றும் நற்பேறு பெற்று வந்தார். MTA News ற்காக ஆவணப் படங்களை தயாரித்தார். மேலும் 3 அல்லது 4 ஆவணப் படங்களில் பணி செய்து கொண்டிருந்தார். This Week With Huzoor என்ற எனது பணிகளைக் குறித்த நிகழ்ச்சியையும் அவரே தொடங்கி இருந்தார். பின்னர் இறுதி வரை ஆர்வத்துடன் அதன் Editing போன்ற அனைத்து பணிகளையும் செய்து வந்தார். MTA பார்ப்பவர்களுக்கு மத்தியில் இந்த நிகழ்ச்சி மிகவும் பிரபலமாகி இருந்தது. தாஹிர் பத்திரிகையின் Editor ஆக மட்டுமின்றி மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் வெளியீட்டுத் துறையிலும் தொண்டாற்றி வந்தார். பல்வேறு ஜமாஅத் பத்திரிகைகளில் உதாரணமாக, Review of Religions மற்றும் தாஹிர் பத்திரிகைகளில் கட்டுரைகளும் எழுதி வந்தார்.

மேலும் Press & Media அலுவலகத்தின் கீழ் பல்வேறு நாடுகளில் என்னுடன் சுற்றுப்பயணம் செய்துள்ளார். வேறு சில சுற்றுப்பயணங்களிலும் சென்றுள்ளார். தனது பணிகளை முழுமை செய்வதற்கு மட்டுமல்ல. மாறாக, தரத்திற்கேற்ப பணிகளை முடிப்பதற்கும் ஓர் அசாதாரண உத்வேகமும், உணர்வும் தாலிஃ அஹ்மதிற்கு இருந்தது. அதற்காக அவர் எந்தவொரு அபாயத்தையும் பொருட்படுத்தியது இல்லை. என்ன அபாயம் உள்ளது என்ற கவலை அவருக்கு ஒரு நொடிப்பொழுதிற்கு கூட இருந்திருக்கவில்லை என்பது அவரது ஷஹாதத் சம்பவத்திலிருந்து வெளிப்படுகின்றது. நான் எந்த பணிக்கு வந்துள்ளேனோ அதனை அழகிய முறையில் முடிக்க வேண்டும். குறித்த நேரத்தில் நான் முடிக்க வேண்டும் என்ற கவலையே அவரிடம் இருந்தது. எனவே அபாயங்களுக்கான சாத்தியங்கள் அதிகரித்த நேரத்தில் அவர் பயணத்தையும் தொடங்கி இருந்தார்.

அபூபக்ர் இப்ராஹீம் சாஹிப் டமாலே மண்டலத்தின் மிஷனரி ஆவார்கள். அவர் சில விவரங்களை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்: ஆகஸ்ட் 23 ஆம் தேதி காலை MTA Team சலாகா என்ற இடத்திற்கு புறப்பட்டபோது தாலிஃ அஹ்மத் அவர்கள் தனது பொருட்களை Pack செய்து கொண்டிருப்பதை அன்னார் கண்டபோது இவ்வாறு கூறினார்கள்: ஹோட்டலிலிருந்து நீங்கள் Check-Out செய்கின்றீர்கள். நீங்கள் சலாகாவிலிருந்து திரும்பி வர வேண்டும். மேலும் இங்கு தங்க வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு நேரம் குறைவாக உள்ளது. எனவே கமாஸிக்கு திரும்பிச் செல்ல வேண்டும் என்று தாலிஃ கூறினார். சலாகாவிலிருந்து திரும்புவதற்கு உங்களுக்கு தாமதம் ஆகிவிட்டால் பின்னர் இரவில் பயணம் செய்வது உகந்ததல்ல என்று அவரிடம் மவ்லவி சாஹிப் கூறினார்கள். ஆனால் சரி தான். பின்னர் பார்த்துக் கொள்வோம். எனினும் நான் அதற்குப் பிறகு ஸிராலியோனும் செல்ல வேண்டும். என்னிடத்தில் மேலும் இரண்டு நாட்கள் மட்டுமே உள்ளன. இங்கு கமாஸியிலும், அகராவிலும் ஏராளமான பணிகளை செய்ய இருக்கின்றோம். எனவே நான் செல்வது அவசியமாகும். எனினும் நீங்கள் கூறுவதால் நான் அதைப் பார்த்துக் கொள்கின்றேன் என்றும் தாலிஃ கூறினார்.

எவ்வாறிருப்பினும் திரும்பி வந்தபோது திரும்பிச் செல்ல பயணம் மேற்கொள்ள வேண்டும் என்றே அவர் முடிவெடுத்தார். மேலும் கமாஸிக்கு திரும்பிச் செல்ல புறப்பட்டார். 6:45 மணியளவில் நாம் தொழுகையை நிறைவேற்றி விடுவோம் என்று உமர் ஃபாரூக் சாஹிபிடம் தாலிஃ கூறினார். அவர்கள் அனைவரும் மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளை ஜமாஅத்தாக நிறைவேற்றினர். மேலும் ஸலாகாவிலிருந்து Recording செய்து கொண்டு வந்த ஒளிப்பதிவுகளும், இங்கு டமாலேவில் செய்த File களும் Corrupt ஆகிவிடக்கூடாது என்ற கவலை அவருக்கு இருந்தது. எனவே பயணத்திலேயே Laptop இல் பாதுகாப்பதற்கு முயற்சிகளை தொடங்கினார். பயணத்தின்போது இதே பணிகளை அவர் செய்து கொண்டிருந்தார். எவ்வகையிலும் நேரம் வீணாகுவதை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. மேலும் ஜமாஅத் பொருட்களைப் பற்றிய கவலையும் அவருக்கு இருந்து வந்தது. இவை மிகவும் விலை உயர்ந்த பொருட்களாகும். வீணாகி விடக் கூடாது என்ற கவலை எப்போதும் அவருக்கு இருந்து வந்தது. எவ்வாறிருப்பினும் காவல் துறையின் அறிக்கைக்கேற்ப இவர்கள் கூறுகின்றனர்.

MTA வண்டி மபாஹா ஜங்ஷனிற்கு அருகில் வந்ததும் கொள்ளையர்கள் அதன் மீது துப்பாக்கிச்சூடு நடத்த துவங்கினர். அதன் விளைவாக குழுவின் இரு உறுப்பினர்கள் நான் கூறியதுபோன்று காயமுற்றனர்.

அன்னாரின் டிரைவர் கூறுகின்றார்கள்: ஒரு வண்டி முன்னால் வந்து கொண்டிருந்தது. அது எனக்கு அபாயத்தை உணர்த்தியது. என்னால் அதனை புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் எவ்வாறிருப்பினும் கொள்ளையர்கள் முன்னால் வந்து விட்டனர் என்பதை நான் கண்டேன். திடீரென இரவில் Head Light வெளிச்சத்தில் அவர்கள் தென்பட்டனர். அப்போது எவ்வாறிருப்பினும் நான் அழுத்தத்துடன் கலிமாவை ஓதினேன். ஆனால் அத்துடன் கொள்ளையர்கள் துப்பாக்கிச்சூடு நடத்த துவங்கி விட்டனர். செய்யத் தாலிஃ வண்டியின் பின்புறத்தில் அமர்ந்திருந்தார்கள். துப்பாக்கிச்சூட்டின் சப்தத்தைக் கேட்டு ஆயுதம் ஏந்திய கொள்ளையர்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. தாக்குதல் நடந்து விட்டது என்பதை கணித்து விட்டார்கள்.

உமர் ஃபாரூக் சாஹிப் கூறுகின்றார்கள்: இந்த துப்பாக்கிச்சூட்டின்போது எனது தொடையில் தோட்டா பாய்ந்தது. ஆனால் எனக்கு அதற்கான உணர்வு ஏற்படவில்லை. தோட்டாக்களை பொழிந்த பிறகு கொள்ளையர்கள் புறமிருந்து மௌனம் வெளிப்பட்டது. அவர்கள் சிறிது நேரம் வரை அமர்ந்திருந்தனர். எவ்வாறிருப்பினும் அவர்கள் கூறுகின்றார்கள்:

சிறிது நேரத்திற்குப் பிறகு கொள்ளையர்கள் டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டு முன்னேறினார்கள். டிரைவரையும் என்னையும் வண்டியிலிருந்து

இறக்கினார்கள். எங்களிடமிருந்த கைப்பேசி மற்றும் பணங்களையெல்லாம் நாங்கள் அவர்களிடம் ஒப்படைத்து விட்டோம். அவர்கள் எங்களை வெளியில் சாலையில் கிடத்தினார்கள். எங்களை அடித்து உதைத்தார்கள். எனது தலையில் தடி கொண்டு ஓங்கி அடித்தார்கள். அதனால் இரத்தம் வெளியேறத் தொடங்கியது. ஆயினும் அன்னார் கூறுகின்றார்கள்: எனக்கு தாலிஹை பற்றிய கவலையே அதிகமாக இருந்தது.

எவ்வாறிருப்பினும் இவரும் நோய்வாய்ப்பட்டுள்ளனர். தோட்டாக்கள் பாய்ந்துள்ளன. தலையிலும் காயம் உள்ளது. அல்லாஹ் அன்னாருக்கு குணமளிப்பானாக. அவருக்காகவும் துஆ செய்யுங்கள்.

எவ்வாறிருப்பினும் இதன் பிறகு அப்துர் ரஹ்மான் மற்றும் டிரைவர் உமர் ஃபாரூக் சாஹிப் கூறுகின்றார்கள்: இவை அனைத்தும் நிகழ்ந்தது. கொள்ளையர்கள் எங்களிடம் கொள்ளையடித்து விட்டு சென்று விட்டனர். அப்போது நாங்கள் தைரித்துடன் எழுந்தோம். உடனடியாக வண்டியின் பக்கம் சென்றோம். தாலிஃ அவர்களின் நிலைமை என்ன என்பதை அறிய முற்பட்டோம். அவருக்கும் இடுப்பில் வலது பக்கத்தில் தோட்டா பாய்ந்திருப்பதைக் கண்டோம். தோட்டா உள்ளே சிக்கி இருந்தது. அதன் விளைவாக வண்டியிலேயே ஏராளமனா இரத்தம் வெளியேறி இருந்தது. இதுவே உயிரைப் பறிப்பதற்கு காரணமாக அமைந்ததாக மருத்துவ அறிக்கை கூறுகின்றது. எவ்வாறிருப்பினும் சம்பவத்திற்குப் பிறகு அந்த வழியாக சென்ற ஒரு பஸ் மூலமாக கூப்பியிலுள்ள கிளினிக் கொண்டு சேர்க்கப்பட்டார். அங்கு சிறிது நேரம் சிறிய அளவில் சிகிச்சை நடந்தது. பின்னர் அங்கிருந்து டமாலே Teacing மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடிவெடுக்கப்பட்டது. ஆனால் வழியிலேயே அன்னாரின் மரணம் நிகழ்ந்து விட்டது. மரணம் நிகழ்ந்து விட்டது என்பதை அவர்கள் மருத்துவமனைக்கு சென்று அறிவித்தார்கள்.

உமர் ஃபாரூக் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: தாலிஃ அவர்களின் தலை எனது தொடையில் இருந்தது. ஹுஸூர் அவர்களுக்கு நமது இந்த சம்பவத்தைப் பற்றி தகவல் கொடுக்கப்பட்டு விட்டதா? துஆவிற்காக கூறிவிட்டீர்களா? என்றே அவர் என்னிடம் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டிருந்தார்.

அன்னார் கூறுகின்றார்கள்: எங்கள் மீது இந்த சம்பவத்தின் கடுமையான தாக்கம் ஏற்பட்டிருந்தது. எல்லையற்ற அச்சமும் பயமும் எங்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தது. நாங்கள் அவரை மருத்துவனைக்கு அழைத்துக் கொண்டு செல்கின்றபோது செய்யத் தாலிஃ எங்களிடம் இதனையும் கூறினார்:

துப்பாக்கிச்சூடு நடந்து கொண்டிருந்தபோது Laptop மற்றும் இதர பொருட்களை வண்டியின் பின்னால் உள்ள இருக்கைக்கு கீழ் மறைத்து விட்டேன். அங்கு அது பாதுகாப்பாக உள்ளது. அங்கிருந்து அதை எடுத்துக் கொள்ளவும் என்று கூறினார். பின்னர் Camera, Phone, Laptop போன்றவைகளெல்லாம் பாதுகாப்பாக உள்ளதா? என்று அவர் என்னிடம் கேட்டார். ஏனென்றால் அனைத்து ஒளிப்பதிவுகளும் வீணாகி விடக்கூடாது என்ற கவலை அவருக்கு இருந்தது. அல்லாஹ்வின் அருளால் சம்பந்தப்பட்ட அனைத்து பொருட்களும் பாதுகாப்பாக உள்ளன என்று நான் அவரிடம் கூறினேன்.

ஜமாஅத்தின் பொருட்கள், செல்வங்கள், உழைப்பு ஆகியவற்றை பற்றிய கவலையே அவருக்கு இருந்தது. ஜமாஅத்தின் வரலாற்றை பாதுகாப்பதற்கு அவர் முயற்சி செய்தார். எவ்வாறிருப்பினும் கூறுகின்றார்கள்: 9:30 மணியளவில் அவரின் நிலை மோசமாகத் தொடங்கியது. அதன் காரணமாக உடனடியாக வேறொரு மருத்துவமனைக்கு மாற்ற வேண்டும் என்று Polyclinic மக்கள் முடிவெடுத்தனர். நான் கூறியதுபோன்று அவரை டமாலே மருத்துவமனைக்கு கொண்டு சென்று கொண்டிருந்தனர். அப்போது வழியிலேயே அன்னாரின் மரணமும் நிகழ்ந்து விட்டது. ஆம்புலன்ஸில் சில அவசியமான பொருட்கள் கூட இருந்திருக்கவில்லை. சில முறை அந்த நாடுகளில் இதே நிலை தான் ஏற்படுகின்றன. ஒன்று, துவக்கத்தில் ஆம்புலன்ஸ் கிடைப்பதில் காலதாமதம் ஆகிவிட்டது. பின்னர் அதிக அளவில் இரத்தப் போக்கும் ஏற்பட்டு விட்டது. எவ்வாறிருப்பினும் இறுதியில் இறைவனின் நியதியில் இருந்ததே நிகழ்ந்தது.

உமர் ஃபாரூக் சாஹிப் கூறுகின்றார்கள்: இதற்கிடையில் காயமுற்ற நாங்கள் பயணித்துக் கொண்டிருக்கும்போது என்னிடம் தாலிஃ சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

Tell Huzoor That I love Him and Tell My Family That I love Them.

உமர் ஃபாரூக் சாஹிப் கூறுகின்றார்கள்: சிறிய அளவில் நினைவு வந்திருந்தது. அப்போது மீண்டும் அதே விஷயத்தை கூறிக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு பல முறை நடந்தது. ஒருமுறை கூறவில்லை. பலமுறை நடந்தது. நீங்கள் அனைவரும் என்னை மிகவும் கருத்தில் கொண்டீர்கள். மேலும் எல்லா சாத்தியமான உதவியும் செய்தீர்கள். அதற்காக நான் உங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அவர் கூறினார். நான் அவருக்கு ஆறுதல் கூறினேன். ஆனால் தற்போது அவர் தைரியம் இழந்து கொண்டிருந்தார். நான் அவரிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தபோது, பேசுவதற்கு பகரமாக கையின் முஷ்டியை மடக்கிக் கொண்டு கட்டை விரலை உயர்த்தியவாறு அனைத்தும் சரியாக உள்ளது என்று சைகை செய்து கொண்டிருந்தார். அதன் காரணமாக எனக்கு பதற்றம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. பின்னர் அன்னார் அநேகமாக நீளமான மூச்சு வாங்கினார். பின்னர் மிகவும் மௌனமாகி விட்டார். அப்போது நான் எதை விருப்பமில்லையோ அது நிகழ்ந்து விட்டது என்பதை நான் புரிந்து கொண்டேன்.

அன்னார் கூறுகின்றார்கள்: Male Nurse மற்றும் Driver தங்களுக்குள் உள்ளூர் மொழியில் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எங்களுக்கு கூற விரும்பவில்லை என்பதை அதிலிருந்து நாங்கள் கணித்து விட்டோம். செய்யத் தாலிஃ அஹ்மத் அவர்களின் மரணம் நிகழ்ந்து விட்டது. நான் கூறியதுபோன்று எவ்வாறிருப்பினும் டமாலே சென்றடைந்தபோது 1:49 மணியளவில் அன்னாரின் மரணம் அறிவிக்கப்பட்டது. மருத்துவமனை ஊழியர்கள் அறிவித்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த செய்தியின் காரணமாக டமாலே வாசிகள் அனைவரும் மிகவும் வேதனைக்கு உள்ளானார்கள். ஏனென்றால் சிறிது நேரத்திற்கு முன்புதான் அவர் சிரித்துக் கொண்டிருந்தபடி அவரை அவர்கள் வழியனுப்பி வைத்தனர். ஆக எவ்வாறிருப்பினும் இது அவரின் ஷஹாதத் சம்பவத்தின் சில விளக்கங்களாகும்.

ஒரு வைரம் நம்மிடமிருந்து பிரிந்து விட்டது. அல்லாஹ் அதுபோன்ற நன்றியுணர்வுமிக்க கிலாஃபத்துடன் தூய்மையான மற்றும் கலப்படமற்ற தொடர்பு வைக்கக்கூடிய உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக்கூடிய நபர்களை ஜமாஅத்திற்கு வழங்கிக் கொண்டே இருப்பானாக. ஆனால் இதன் பாதிப்பு எப்படிப்பட்டதென்றால் அது நம்மை உலுக்கி விட்டது. அந்த அன்பிற்குரிய இருப்பு வக்ஃபின் ஆன்மாவை புரியக்கூடியவராகவும், உடன்படிக்கையை உண்மையான வடிவில் நிறைவேற்றக்கூடியவராகவும் இருந்தார். உலக சூழலில் வளரக்கூடிய பிள்ளை எவ்வாறு தமது வக்ஃபை புரிந்து கொண்டது. மேலும் அதை நிறைவேற்றியது என்று அவரை எண்ணிப் பார்த்து எனக்கு இன்று வரை ஆச்சரியம் ஏற்படுகின்றது. இன்னும் கூறப்போனால் எந்த அளவிற்கு அவர் அதனை நிறைவேற்றினார் என்றால் அதன் தரத்தின் உச்சத்தை எட்டி விட்டார். அவர் சான்றோர்களின் சம்பவங்களை படித்து வந்தார். வரலாற்றை அறிந்த கொள்ள வேண்டும். மேலும் அவர்களின் தியாகங்களின் மீது ஆச்சரியத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல. மாறாக, அதனை தமது வாழ்க்கையின் அங்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக அதனை படித்து வந்தார்.

கிலாஃபத்துடன் நன்றியுணர்வு மற்றும் தூய்மையான தொடர்பில் எப்படிப்பட்ட புரிதல் அவருக்கு இருந்தது என்றால், அது பார்ப்பதற்கு மிகவும் அரிதாகவே கிடைக்கின்றது. மாறாக, நான் கூறுவேன். மார்க்கத்தைப் பற்றிய ஆழமான அறிவு கொண்ட சிலரும் கூட அதனைப் புரிவதில்லை. சில முறை அதுபோன்ற மக்களின் அறிவு அவர்களிடத்தில் ஆணவத்தின் துர்நாற்றத்தை உருவாக்கி விடுகின்றது. மாறாக, நான் கூறுவேன். நாம் கிலாஃபத்தின் அந்தஸ்தையும், அதன் நன்றியுணர்வின் தரத்தையும் புரிந்துள்ளோம் என்று எவர்கள் எண்ணுகின்றார்களோ அவர்களும் கூட இதனை புரிவதில்லை. அவர் கிலாஃபத்துடன் நன்றியுணர்வை வெளிப்படுத்தியுள்ளார். எப்படிப்பட்ட நன்றியுணர்வு என்றால் மரணம் மற்றும் வாழ்க்கைக்கு நடுவில் அவர் இருந்தபோது தமது இறுதி சொற்களில் கூட காலத்தின் கலீஃபாவுடன் அன்பு மற்றும் நன்றியுணர்விற்கான எண்ணமே அவரிடம் இருந்தது. தமது பிள்ளைகள் மற்றும் தமது குடும்பத்தினர் பற்றியே அனைவருக்கும் எண்ணம் வரும். ஆனால் ஒவ்வொரு முறையும் மீண்டும் மீண்டும் தமது பிள்ளைகள், குடும்பத்தினர் ஆகியோரை விட முதலில் காலத்தின் கலீஃபாவின் மீதான அன்பின் வெளிப்பாட்டைப் பற்றிய எண்ணம் சிலருக்கே வர முடியும்.

இரண்டு. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அவர் ஒரு கவிதை எழுதியிருந்தார். அதனை அவர் தனது ஒரு நண்பருக்கு கொடுத்திருந்தார். இதனை நீங்கள் உங்களிடத்தில் வைத்துக் கொள்ளுங்கள். யாருக்கும் காட்டக்கூடாது என்று கூறியிருந்தார். கிலாஃபத்துடனான தொடர்பு மற்றும் அன்பு குறித்து எழுதியிருந்தார். **நான் காலத்தின் கலீஃபாவிடம் மிக அதிகமாக நேசம் கொள்கிறேன் என்றே அவர் துவங்கி இருந்தார். காலத்தின் கலீஃபாவின் மீது எனக்கு அன்பும், நேசமும் உள்ளது. அது ஒருபோதும் அன்னாருக்கு (ஹுஸூர் அவர்களுக்கு) தெரியாது என்று அவர் முடித்திருந்தார். ஆனால் அன்பிற்குரிய தாலிஃ, நான் உனக்கு கூறுகின்றேன். உனது இந்த இறுதி சொற்களுக்கு முன்பாகவே உனக்கு கிலாஃபத்தின் மீது அன்பும், நேசத்தின் தொடர்பும் இருந்தது என்பதை நான் அறிந்திருந்தேன்.**

உனது ஒவ்வொரு செயலிலிருந்தும், அசைவிலிருந்தும் நான் அறிந்திருந்தேன். உனது கைகளில் கேமரா இருக்கும்போதும், நான் முன்னால் இருக்கும்போதும் நான் அறிந்திருந்தேன். கேமரா இல்லாமல் நீ என்னை சந்திக்கும்போதும் நான் அறிந்திருந்தேன். அது தனிப்பட்ட சந்திப்பாக இருந்தாலும் அல்லது அலுவலக பணியின் காரணமான சந்திப்பாக இருந்தாலும் உனது கண்களின் வெளிச்சம் அந்த அன்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. உனது முகத்திலிருந்த ஒரு விநோதமான ஒளி அந்த அன்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. சுருக்கமாக, எல்லா வகையிலும் உனது எல்லா

செயல்களிலிருந்தும் காலத்தின் கலீஃபாவின் மீது உனக்கு இருந்த அன்பை எவ்வாறு வெளிப்படுத்துவது என்பதே வெளிப்பட்டது. எனக்கு சிலரிடம் மட்டுமே இந்த அன்பின் வெளிப்பாடு தென்பட்டது. நான் குடும்பத்தில் கூறிக் கொண்டிருந்தேன். தற்போது குடும்பத்தில் இளைஞர்களிடத்தில் இதுபோன்ற அன்பின் வெளிப்பாடு எவரிடத்திலும் தென்படவில்லை. உள்ளங்களின் நிலைகளை அல்லாஹ் நன்கறிவான். பெரியவர்களிலும் கூட சிலரிடம் மட்டுமே இந்நிலை உள்ளது. இந்த சம்பவத்திற்குப் பிறகு இந்த தரத்தைக் கொண்ட ஏராளமான மக்களை அல்லாஹ் உருவாக்குவானாக என்பது எனது துஆ ஆகும்.

தாலிஃ அவர்களின் இருப்பு அவர் தனது கவிதையில் குறிப்பிட்டது போன்று எப்படிப்பட்டதாக இருந்ததென்றால், **அவர் அந்த அன்பை வெளிப்படுத்த விரும்பியிருக்கவில்லை. மாறாக, அதை மறைக்கவே விரும்பி இருந்தார். ஆனால் அது மறையவில்லை. அல்லாஹ் ஏதாவதொரு வடிவில் அந்த தொடர்பை வெளிப்படுத்தி வந்தான். எனவே அவர் எனக்கு மிகவும் அன்பிற்குரியவராக இருந்தார்.** காலத்தின் கலீஃபாவின் நாவிலிருந்து எப்போது ஒரு விஷயம் வெளிப்படும். நான் அதன்படி அமல் செய்ய வேண்டுமே என்ற கவலையில் எப்போதும் இருந்து வந்தார். நான் மட்டுமே அமல் செய்யக்கூடாது. மாறாக கிலாஃபத்தின் அந்தஸ்து குறித்து எப்போது, எப்படி நான் உலகிற்கு கூறுவேன் என்ற கவலையும் அவருக்கு இருந்தது. கிலாஃபத்தின் பாதுகாப்பிற்காக உயிரை அர்ப்பணிக்க நேரிட்டாலும் நான் உயிரை எப்போது அர்ப்பணிப்பேன் என்ற கவலை அவருக்கு இருந்தது. மேலும் தனது பணியில் அவருக்கு எவ்வளவு அன்பு இருந்தது என்றால் மிகக் குறைவாகவே அது காணக் கிடைக்கிறது. தமது பணியை மிகவும் நேசித்து வந்ததால் அவருக்கு தனது பணியில் அன்பு இருந்தது என்பதில்லை.

ஏராளமான மக்கள் இவ்வாறு உள்ளனர். அதாவது அவர்கள் தங்களது பணியை விரும்புகின்றனர். அவர்களுக்கும் தமது பணியின் மீது மிகுந்த அன்பும், ஈடுபாடும் உள்ளது. ஆனால் அவருக்கு தனது பணியில் ஈடுபாடு இருந்ததென்றால் அதற்கு காரணம் இதுவாகும். அதாவது இந்த பணியின் காரணமாக நான் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மார்க்கத்தை பாதுகாக்க வேண்டும். மேலும் இந்த தூதுச் செய்தியை நான் உலகத்திற்கு எட்ட வைக்க வேண்டும் என்பதால் இருந்தது. எனவே எனது பணி என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தியை உலகின் எல்லை வரை நான் எட்ட வைப்பேன். நான் காலத்தின் கலீஃபாவிற்கு உதவியாளனாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக அவருக்கு தனது பணியின் மீது அன்பு இருந்தது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் நல்லடக்கத்தின் நேரத்தில் கபரில் மண் போடுவதற்கு முன்பு கபரின் தலைமாட்டில் நான் நின்று கொண்டிருந்தேன். அப்போது அவர் எனது வலப்பக்கத்திற்கு அருகில் வந்து நின்று விட்டார். இவர் யார் என்பதை அப்போது நான் அறிந்திருக்கவில்லை. தற்போது நான் படத்தை பார்த்தேன். அப்போது தான் அவர் யார்? அது என்ன சந்தர்ப்பமாக இருந்தது? என்பதை என்னால் கணிக்க முடிந்துள்ளது. ஆனால் இந்த 13 வயது பிள்ளை அந்த நேரத்தில் நான் வக்ஃபே நவ் பிள்ளையாக இருக்கின்றேன். நான் காலத்தின் கலீஃபாவிற்கு உதவியாளனாக ஆக உள்ளேன் என்று எண்ணம் கொண்டுள்ளார். உதவியின் கரங்களாக ஆக உள்ளேன். எனவே பல ஆண்டுகள் கழித்து அவர் உடன்படிக்கை செய்துள்ளார். அதன் பிறகு ஆண்டுகள் கழித்து தனது கல்வியை முழுமை செய்து இந்த உடன்படிக்கையை முழுமை செய்துள்ளார். நிறைவேற்றியுள்ளார். மேலும் சிறப்பாக நிறைவேற்றியுள்ளார்.

எனது ஆலோசனையின் மூலமே அவர் Journalism த்தை தேர்ந்தெடுத்தார். பின்னர் கல்வியை முழுமை செய்தார். நான் கிலாஃபத்தின் உண்மையான உதவியாளனாக ஆகி உள்ளேன் என்று ஷஹீதாகி உலகிற்கு கூறிச் சென்றுள்ளார். **அன்பிற்குரிய தாலிஃ! நான் சாட்சி கூறுகின்றேன். நிச்சயமாக நீ உனது வக்ஃப் மற்றும் வாக்குறுதியின் உயர்தரமான அந்தஸ்தை பெற்று விட்டாய்.**

அவர் எவ்வாறெல்லாம் காலத்தின் கலீஃபாவின் சொற்களின்படி அமல் செய்து வந்தார் என்றால் இது குறித்து நமக்கு இந்த சம்பவத்திலிருந்த தெரிய வருகின்றது. அதாவது சில முரப்பிமார்களுடன் நான் கூட்டம் நடத்தினேன். குறைந்தபட்சம் ஒரு மணி நேரம் தஹஜ்ஜுத் தொழுவதற்கு முரப்பிமார்கள் முயற்சி செய்ய வேண்டும் என்று நான் கூறியிருந்தேன். அப்போது அன்பிற்குரிய தாலிஃ சில முரப்பிமார்களைப் போன்று கோடை காலத்தின் சிறிய இரவுகளில் எவ்வாறு இவ்வளவு விரைவாக எழுந்து சுமார் 1 மணி நேரம் வரை தஹஜ்ஜுத் தொழ முடியும்? என்று கேள்வி கேட்கவில்லை. மாறாக, அமல் செய்வதற்கு அவர் முயற்சி செய்தார்.

அவரது ஒரு நண்பரான முரப்பி சாஹிப் ஒரு நாள் அவரை மிகவும் களைப்பாக இருப்பதைக் கண்டார். அவரிடம் அதற்கான காரணத்தைக் கேட்டார். அப்போது அவர், காலத்தின் கலீஃபா முரப்பிமார்களை சுமார் 1 மணி நேரம் வரை தஹஜ்ஜுத் தொழுமாறு கூறியுள்ளார்கள். நானும் வக்ஃப் செய்துள்ளேன். இந்த கட்டளை எனக்கும் பொருந்தும். இன்று தஹஜ்ஜுதின் காரணமாக முழுமையாக தூங்க முடியவில்லை. எனவே தான் களைப்பாக உள்ளது என்று தாலிஃ கூறினார். அந்த முரப்பி எனக்கு இதனை எழுதினார். நான் காலத்தின் கலீஃபா நேரடியாக என்னிடம் கூறியிருந்தார். காலத்தின் கலீஃபாவின் கூற்றின்படி அவ்வாறு நான் அமல் செய்யவில்லை. அவர் வாழ்க்கையை அர்ப்பணித்த நபராக இருந்து கொண்டு உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக இதன்படி அமல் செய்துள்ளார் என்று நான் மிகவும் வெட்கப்பட்டேன். உடன்படிக்கையை நிறைவேற்றுவதின் தரம் இதுவாகவே இருந்தது.

எனவே வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுக்கும் அவர் ஒரு முன்னுதாரணமாக இருந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குடும்பத்தின் உறுப்பினர் என்ற முறையில் குடும்பத்தின் உறுப்பினர்களுக்கும் அவர் நன்றியுணர்வு மற்றும் தூய்மையில் ஒரு முன்மாதிரியை நிலைநாட்டிவிட்டுச் சென்றுள்ளார். இனி இந்த முன்னுதாரணத்தின்படி எந்த அளவிற்கு அமல் செய்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சார்ந்தவர்களாக இருப்பதற்குரிய உரிமையை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது குடும்ப உறுப்பினர்களை சார்ந்துள்ளது. குடும்பத்தின் கண்ணியம் மற்றும் பௌதீக உறவால் எந்த அந்தஸ்தும் கிடைக்காது. ஒருவர் அவர்களுக்கு மரியாதை அளிக்கின்றார் என்றால் அவர்களின் உலகியல் காரணங்களால் அல்ல. அவ்வாறு ஒருபோதும் இருக்காது. உண்மையான கண்ணியம் இதில் தான் உள்ளது. அதாவது மார்க்கத்தின் தொண்டராக இருக்க வேண்டும். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக்கூடியவராக இருக்க வேண்டும். இல்லையென்றால் உலகவாதிகளிலும் கோடிக்கணக்கான மக்கள் பொருளாதார ரீதியில் அவர்களை விட சிறந்தவர்களாக உள்ளனர். மேலும் எவர்கள் உலக ரீதியில் சிறந்தவர்களாக இல்லையோ அவர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு எந்த கண்ணியமும் இருப்பதில்லை. **எனவே நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குடும்ப உறுப்பினர்களிடமும் கூறுகின்றேன். மறைந்த இந்த நபரிடமிருந்து அறிவுரையை பெற்றுக் கொள்ளுங்கள். தூய்மையிலும், நன்றியுணர்விலும் முன்னேறுங்கள். எவ்வாறு நன்றியுணர்வின் வடிவமான அந்த நபர் தனது வாக்குறுதியை நிறைவேற்றினாரோ அதுபோன்று (நீங்களும்) நிறைவேற்றுங்கள்.** அவர் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினார். ஏனைய குடும்ப உறுப்பினர்களும் அவரது முன்னுதாரணத்தை பாருங்கள். இந்த விஷயங்கள் தான் கண்ணியமளிக்கக்கூடியதும், அல்லாஹ்வின் அருளை பெற்றுத் தரக்கூடியதும் ஆகும். அவ்வாறில்லையென்றால், உலக விஷயங்களும், உலக ஆசைகளும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு சாதாரண கண்ணியத்தை கூட வழங்க முடியாது. உங்களது செயல் சரியில்லை என்றால் பின்னர் ஒரு சான்றோரின் மகனாக இருப்பதிலும் அல்லது ஒரு சான்றோரின் மகளாக இருப்பதிலும் எந்த பெருமைக்குரிய அந்தஸ்தும் இல்லை.

நான் கூறியதுபோன்று வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுக்கும் அசாதாரண முன்மாதிரியாக ஆச்சரியத்திற்குரிய முன்னுதாரணமாக அவர் இருந்தார். அலோவன்ஸ் குறைவாக உள்ளது. வாழ்க்கையை கழிக்க முடியவில்லை என்று ஒருபோதும் அவர் முறையீடு செய்ததில்லை. என்ன கிடைத்ததோ அதில் நன்றி கூறிக்கொண்டு வாழ்க்கையை கழித்து வந்தார். ஒருவேளை எங்கிருந்தாவது ஏதாவது கூடுதல் வருமானம் வந்து விட்டால் பின்னர் நன்றியின் உணர்வுகளால் நிறைந்து விடுவார். அல்லாஹ்வே! ஒருபோதும் நீ எனக்கு கஷ்டத்தை தராதே என்று என்று அல்லாஹ்விடம் துஆ செய்தார். பின்னர் அல்லாஹ்வும் அவருக்கு ஒருபோதும் கஷ்டத்தை தரவில்லை. தொடர்ந்து நோன்பு வைக்கக்கூடியவராக இருந்தார். அவரிடத்தில் ஏராளமான சிறப்புகள் இருந்தன.

அவருடைய நெருங்கிய நண்பர்களாக அன்பர்களாக இருந்த சிலர் எனக்கு இரங்கல் கடிதம் எழுதுகின்றனர். அதில் அவரது எண்ணற்ற சிறப்புகளை எடுத்துரைத்து வருகின்றனர். அவை எப்படிப்பட்ட சிறப்புகள் என்றால் எனக்கும் ஆச்சரியம் அளிக்கக்கூடியவையாக உள்ளன. நான் அவரது நன்றியுணர்வை ஓரளவிற்கு அறிந்திருந்தேன். ஆனால் அவரது நன்மை மற்றும் இறையச்சத்தின் தரமும் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. எனவே அவரது வாழ்க்கையை குறித்து மக்களின் சொற்களிலேயே சில விஷயங்களை உங்களுக்கு முன்னால் நான் எடுத்து வைப்பது உகந்ததாகும். அதில் அவரது மனைவி, பெற்றோர், சகோதர சகோதரிகள் மற்றும் நண்பர்களின் உணர்வுகளும் உள்ளன. சில சம்பவங்களும் இருக்கின்றன.

Review of Religions பத்திரிகையின் ஆசிரியர் ஆமிர் ஸஃபீர் சாஹிப் கூறுகின்றார்கள்: தாலிஃ நான்கு ஆண்டுகள் வரை Review பத்திரிகையில் பணி செய்தார். Indexing துறையில் மேற்பார்வையாளராக தொண்டாற்றும் நற்பேறு பெற்றார். ஒரு பெரும் பெறுப்பை நல்ல முறையில் செயலாற்றினார். Review of Religions பத்திரிகையின் 100 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலகட்டத்தின் Index ஐ தயார் செய்தல், பல்வேறு Categaries பட்டியலை தயார் செய்தல், தனித்தனி தலைப்புகளில் கட்டுகளை ஒழுங்குபடுத்துதல் ஆகியவை ஒரு பெரும் பரந்துபட்ட பணியாக

இருந்தது. அதில் அவர் மிகுந்த உழைப்புடனும், ஆர்வத்துடனும் பணியாற்றினார். இந்தக் குழு 11 நபர்களை உள்ளடக்கியதாக இருந்தது. மிகக் கடின உழைப்பை கொண்ட பணியாக அது இருந்தது. அல்லாஹ்வின் அருளால் அனைவரும் இந்தப் பணியை செய்து முடித்தனர். அதனை தாலிஃ மேற்பார்வை செய்தார்.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: தாலிஃ ஏராளமான ஆற்றல்களுக்கு சொந்தக்காரராக இருந்தார் என்பதை நான் என் கண்களால் கண்டுள்ளேன். நிர்வாக பணிகளை அழகிய முறையில் செயல்படுத்தி வந்தார். தொண்டாற்றுவதற்கு அதிகமான உணர்வும், ஆர்வமும் இருந்தது. கிலாஃபத்தின் மீது எல்லையற்ற நன்றியுணர்வும், அன்பும் இருந்தது.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: நான் தாலிஃ அவர்களிடம் கண்ட ஒரு சிறப்பு என்னவென்றால், அவர் எந்தவொரு Project யையும் Ground zero விலிருந்து தொடங்கி அதனை பெருமிதத்திற்குரிய விஷயமாக மாற்றி விடுவார். நிர்வாகம் தனக்கு பணி செய்யும்படி கவனமூட்ட வேண்டுமென்றோ அல்லது நினைவூட்ட வேண்டுமென்றோ அவர் ஒருபோதும் காத்திருக்க மாட்டார். ஒரு பித்துப் பிடித்த மனிதரைப் போன்று போட்டி போட்டுக் கொண்டு பணி செய்வார். அவர்கள் பைத்தியத்தைப் போன்று உறுதியுடனும், கலப்படமற்ற உணர்வுடனும் மார்க்கத்திற்கு பணியாற்றுகின்றார்கள் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய நபர்களைச் சார்ந்தவராக அவர் இருந்தார். தாலிஃ உலகத்தை பொருட்படுத்தியதே கிடையாது. ஜமாஅத்திற்காகவும், கிலாஃபத்திற்காகவும் தொண்டாற்றுவதற்கு அவருக்கு நற்பேறு கிடைத்தால் அதுவே அவருக்கு அனைத்துமாக இருக்கும்.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: நான் கண்டவற்றின் சுருக்கம் என்னவென்றால், அவரது அனைத்து விஷயங்களும் கிலாஃபத்தை சுற்றியே வலம் வந்தன. காலத்தின் கலீஃபாவுடன் அவருக்கு தனிப்பட்ட ஒரு தொடர்பு இருந்தது. ஆனால் நான் தங்களின் ஒரு வழிகாட்டுதலை அவருக்கு எட்ட வைத்தபோதெல்லாம் அவர் உடனடியாக எழுந்து நின்று விடுவார். கண்கள் திறந்த வண்ணம் இருந்து விடும். உதாரணமாக, ஒரு குழந்தை Candy ஐ பார்ப்பது போன்று பார்ப்பார். அடுத்து தங்களின் வழிகாட்டுதல்களை எட்ட வைத்ததற்காக எனக்கு நன்றியும் கூறுவார்.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: ஓர் ஆவணப் படத்திற்கு பகரமாக இரண்டு இரண்டு ஆவணப் படங்களில் பணி செய்தார். ஒரே நேரத்தில் இரண்டு ஆவணப் படங்களில் இவர் எவ்வாறு பணி செய்கின்றார் என்று நான் மிகவும் ஆச்சரியம் அடைந்துள்ளேன். தாலிஃ எந்த ஆவணப் படத்தில் பணி செய்து கொண்டிருக்கின்றார் என்பது சில நேரத்தில் எங்களுக்கு தெரியாமலேயே இருந்தது. எங்களுக்கு Surprise கொடுக்க விரும்பினார். ஆராய்ச்சி செய்கின்ற திறமையும் தாலிஃ அவர்களிடம் மிக உயர்தரமானதாக இருந்தது.

தாலிஃயிடம் காணப்பட்ட இன்னொரு முக்கியமான சிறப்பு இதுவாக இருந்தது. அதாவது எப்போதும் தமது குடும்பத்தினரையும், உறவினர்களையும் ஜமாஅத்துடன் தொடர்புடைய மற்றும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுகின்ற பணிகளை செய்பவர்களாக காண விரும்பி இருந்தார். இன்ன உறவினர் Review யில் இன்ன விஷயத்தில் தொண்டாற்றினார் அல்லது தொண்டாற்றுகின்றார் என்று நான் அவரிடத்தில் கூறும்போது அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்து வந்தார்.

சதர் குத்தாமுல் அஹ்மதிய்யா குத்தூஸ் ஆரிஃப் சாஹிப் கூறுகின்றார்கள்: குழந்தைப்பருவம் முதலே எனக்கு அவருடன் தொடர்பு இருந்தது. அன்னார் கூறுகின்றார்கள்: தாலிஃ சாஹிப் ஹஸ்ரத் மலிக் குலாம் ஃபரீத் சாஹிப் அவர்களின் Short Commentary நூலில் அடையாளமிட்டிருப்பதை நான் கண்டுள்ளேன். Five Volume Commentary யையும் மிக ஆழமாக அவர் படித்துள்ளார். பல்வேறு வசனங்களை அவர் மேற்கோட்டிட்டிருக்கின்றார்.

அவர் Five Volume Commentary படித்தது பற்றிய விளக்கத்தை நான் கூறி விடுகின்றேன். BSC படித்த பிறகு Gap Year ஆக ஒரு வருடத்தை எடுத்துக் கொண்டார். அப்போது நான் வக்ஃபே நவ் வகுப்பில் அவரிடம் கூறியிருந்தேன். அதன் பிறகு அநேகமாக அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலும் Five Volume Commnetary ஐ படிக்குமாறு நான் கூறியிருந்தேன். அதற்கு சில ஆண்டுகள் ஆகும் என நான் எண்ணியிருந்தேன். ஆனால் நான் முழுவதும் படித்து விட்டேன் என்று சில மாதங்களுக்குப் பிறகு வந்து என்னிடம் கூறிவிட்டார். எனக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. தற்போதும் அதைக்கேட்டு ஆச்சரியம் ஏற்படுகிறது. மேலும் இதேபோன்று இளைஞர்களுக்கு பிடித்தமான ஆவணப் படங்களையும் அவர் தயாரித்து வந்தார். உதாரணமாக, தர்பிய்யத் அம்சங்களைக் கொண்ட Footbal ஆவணங்களையும் அவர் தயாரித்தார்.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: MTA வில் தயாரிக்கப்பட்ட ஆவணப்படங்கள் ஒன்றை விட ஒன்று சிறந்தவையாக உள்ளன. எனக்கு நினைவு உள்ளது. Two Trials in a Time. Brutality and Injustice என்ற Documentary ஒளிபரப்பானது. அப்போது ஆவணப்படம் ஈமானை மிகவும் வலுவூட்டக்கூடியதாக இருந்தது என்று தாலிஃற்கு நான் செய்தி அனுப்பினேன். அதற்கு அவர் எங்களை துஆவில் நினைவு கூறவும். இவை அனைத்தும் அல்லாஹ்வின் அருளாகும் என்று மிகவும் பணிவுடன் பதிலளித்தார். Twitter யில் ஒருவர் Documentary யின் ஆவணப்படத்தின் பெயரைக் குறித்து ஆட்சேபனை செய்தார். அப்போது தாலிஃ அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்: அதாவது நான் அவரிடம் கூறியபோது அவர் இவ்வாறு கூறினார். காலத்தின் கலீஃபா அவர்கள் இந்த பெயருக்கு சுயமே ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். எனவே நான் அதனை Defend செய்தேன். ஒருவேளை ஆபித் அல்லது என் புறமிருந்து இந்த பெயர் இருந்திருந்தால் பின்னர் நான் ஒருபோதும் ஒன்றும் கூறியிருக்க மாட்டேன். ஆனால் காலத்தின் கலீஃபா அதை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். எனவே நான் அதனை Defend செய்தேன். எவ்வாறிருப்பினும் இதற்கு விளக்கம் அளிக்க வேண்டும். மேலும் அதனை பாதுகாக்க வேண்டும்.

பின்னர் கூறுகின்றார்: கடந்த வருடம் அத்ஃபாலின் Virtual Rally யில் முஹ்தமிம் சாஹிப் மூலமாக தாலிஃ சாஹிப் அவர்களிடம் இவ்வாறு விண்ணப்பித்தேன். அதாவது காலத்தின் கலீஃபாவுடன் அவருக்கு ஏற்பட்ட சில சம்பவங்களை எடுத்துரைக்குமாறு விண்ணப்பித்தேன். முதலில் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னர் நான் சதர் மஜ்லிஸ் என்ற ரீதியில் கூறியபோது ஒப்புக் கொண்டு விட்டார். இந்த சம்பவங்களும் மக்களுக்கு மிகவும் பிடித்திருந்தன. திஃப்ல்களும் அதனை மிகவும் விரும்பினர். பின்னர் அவர் சதர் குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்கு இவ்வாறு மெஸேஜ் அனுப்பினார்: மக்களுக்கு அறிவுரை செய்வதற்கும், சம்பவங்களை எடுத்துரைப்பதற்கும் இன்னும் எனது சீர்திருத்தம் ஏற்படவில்லை என்று நான் கருதியிருந்தேன். எனது சீர்திருத்தம் ஏற்பட்ட பிறகு அல்லது வயது முதிர்ந்த நிலையில் மரணத்திற்கு அருகில் செல்லும்போது அந்த நேரத்தில் இந்த சம்பவங்களை நான் எடுத்துரைப்பேன் என்பது எனது எண்ணமாக இருந்தது. மௌனமாக காலத்தை கழிக்க வேண்டும் என்றே இப்போது வரை எனது எண்ணமாக இருந்தது. ஆனால் நீங்கள் என்னை இதனைக் கூற வைத்து விட்டீர்கள். எனினும் அவர் இந்த சம்பவங்களை பகிர்வதற்கு இதுவே நேரமாகும் என்பதை அல்லாஹ் அறிந்திருந்தான்.

அன்னாரின் துணைவியார் அன்பிற்குரிய சுதூத் கூறுகின்றார்: என்னுடனும், பிள்ளைகளுடனும் மிகவும் அன்பு கொள்ளக்கூடியவராக இருந்தார். மிகவும் பரிவுடன் நடந்து கொள்ளக்கூடியவராக இருந்தார். பெரும் பரிவின் வெளிப்பாடு இருந்தது. சிறிதிலும் சிறிதான விஷயத்தையும் பாராட்டி வந்தார். உணவு எப்படி இருந்தாலும் அதை விரும்பி வந்தார். அவர்கள் கூறுகின்றார்கள்: எனது தந்தையின் ஷஹாதத்திற்குப் பிறகு விரைவாகவே Engagement ஆகிவிட்டது. நிச்சயதார்த்தமும் நடந்து விட்டது. எனவே நான் சிறிது கவலையுடன் இருந்து வந்தேன். எனக்கு தந்தை இல்லாததன் காரணமாக சிறிது கவலையும் அதிகமாக இருந்தது. ஆனால் திருமணத்திற்குப் பிறகு தாலிஃ என்னை மிகவும் கருத்தில் கொண்டார். எனக்கு எந்த குறைவையும் உணரச் செய்யவில்லை. அவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எத்துனை அன்பு இருந்தது என்பதை நான் சிந்தித்தேன். குழந்தையைப் போன்று அழுது வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி பேசும்போது, மகன் தலாலிற்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றிய கதைகளைக் கூறும்போது ஏங்கி ஏங்கி அழுது வந்தார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி நிறைய கதைகளை அறிந்திருந்தார். சம்பவங்களை மனப்பாடம் செய்திருந்தார். இது குறித்து வேறு சிலரும் நிறைய எழுதியுள்ளனர். அவருக்கு வரலாற்றைக் குறித்தும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையைக் குறித்தும் ஆழமான அறிவு இருந்தது.

அன்னாரின் மனைவி கூறுகின்றார்கள்: தலால் ஒரு கிறிஸ்துவ பள்ளியில் படித்து வந்தார். பள்ளிக்கூடத்திற்கு செல்லும்போது வழியில் தாலிஃ சூரா இக்லாஸ் ஓதி வந்தார். நீங்களும் என்னுடன் இதனை ஓதுங்கள் என்று கூறி வந்தார். அவருக்கு கிலாஃபத்துடன் மிக அதிகமான அன்பு இருந்தது. மேலும் அதற்கான தன்மானமும் அதிகமாக இருந்தது. சின்னச்சின்ன சில விஷயங்களும் இருக்கின்றன. ஆனால் அது தூய்மையைப் பற்றி அறிவிக்கின்றது. தாங்கள் அவரிடம் மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள் என்பது தெரிய வந்தால் அல்லது அவருடைய மகனிடம் மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள் என்பது தெரிய வந்தால் அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பார். எப்போதும் சந்திப்பிற்குப் பிறகு Treat கொடுத்து வந்தார். அல்லது மிக நல்ல பிள்ளையாக நீங்கள் இருந்தீர்கள் என்று கூறி தலாலிற்கு சாக்லேட் கொடுப்பார். அல்லது எங்களுக்கு Ice Cream வாங்கிக் கொடுப்பதற்காக எங்களை வெளியில் அழைத்துச் செல்வார். காலத்தின் கலீஃபாவிற்கு முன்னால் இன்று நீங்கள் மிகவும் நல்ல முறையில் நடந்து கொண்டீர்கள் என்பதிலும் அல்லது நமது சந்திப்பு மிகவும் நல்லதாக அமைந்தது என்ற விஷயத்திலும் மிகவும் மகிழ்ச்சியடைந்து வந்தார். இவை சின்னச்சின்ன விஷயங்களாகும்.

அன்னாரின் மனைவி கூறுகின்றார்கள். நான் (ஹுஸூர்) ஒரு விஷயத்தை அவரிடத்தில் விரும்பவில்லை என்று சில முறை அவர் கருதி வந்தார். இது அவரது எண்ணமாகவே இருக்கும். ஒருபோதும் அப்படியொரு சம்பவம் நிகழ்ந்ததாக எனக்கு நினைவில்லை.

எவ்வாறிருப்பினும் அவரது மனைவி கூறுகின்றார்: எனக்கு (ஹுஸூருக்கு) நினைவுள்ளது. காலத்தின் கலீஃபா அவரிடம் ஒரு விஷயத்தை

விரும்பவில்லை என்ற எண்ணம் அவர்களிடத்தில் வரும்போது தஹஜ்ஜுதில் அழுதழுது அல்லாஹ்விடத்தில் மன்னிப்பு கேட்டுக் கொண்டிருப்பார். குழந்தையை போன்று தேம்பித்தேம்பி அழுது வந்தார். ஆவணப்படங்களை தயாரித்த பிறகும் காலத்தின் கலீஃபாவிடமிருந்து அதற்கு ஒப்புதல் கிடைத்து விட வேண்டுமே என்ற கவலை அவருக்கு இருந்து வந்தது. This Week நிகழ்ச்சியை அவர் தொடங்கியபோது அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். அதாவது அதிக அதிகமாக எனது அலுவலகத்தில் வந்து என்னிடம் ஒளிப்பதிவு செய்ய முடிகின்றது. அதற்கான சந்தர்ப்பம் தமக்கு இந்த நிகழ்ச்சியின் மூலமாக கிடைத்து வருகின்றது என்பதில் மிகவும் அவர் மகிழ்ச்சியாக இருந்தார்.

அவரிடம் காணப்பட்ட மாபெரும் சிறப்பு என்னவென்றால், அவர் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினார். முற்றிலும் உலகத்தை விரும்பாத மனிதராக இருந்தார். அவர் ஒருபோதும் எந்த விஷயத்திற்கும் ஆசைப்பட்டதில்லை. உலகப் பொருட்களுக்காக அவரது உள்ளத்தில் ஒருபோதும் பேராசை இருந்ததில்லை. ஒருபோதும் அவருக்கு உலகப் பொருட்களில் ஆர்வம் இருந்ததில்லை. யாராவது அவருக்கு விலைமதிப்புமிக்க பரிசு வழங்கினால் என்னிடத்தில் இப்படிப்பட்ட ஒரு பொருள் வந்து விட்டதே என்று பதற்றமடைந்து விடுவார். மேலும் அவருக்கு அது கிடைத்ததற்காக அல்லாஹ்விற்கு மிகவும் நன்றி செலுத்தி வருவார். அவரிடத்தில் இருந்ததன் மீதே மிகவும் மகிழ்ச்சியடைந்து வந்தார். மேலும் அதையே போதுமானதாக கருதி வந்தார்.

அவர் கூறி வந்தார்: நான் குழந்தைப் பருவத்தில் பொருளாதார விவகாரங்களில் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடன் அல்லாஹ் எவ்வாறு நடந்து வந்தான் என்ற சம்பவங்களை படித்திருந்தேன். நான் உடனடியாக அதைப் படித்து விட்டு அல்லாஹ்விடத்தில் இவ்வாறு துஆ செய்தேன்: அல்லாஹ்வே! நீ என்னுடன் இதேபோன்று நடந்து கொள்ள வேண்டும் என்று தாம் துஆ செய்ததாக அவர் கூறி வந்தார். அல்லாஹ் தனது துஆவை ஒப்புக் கொண்டு விட்டான் என்ற உறுதியான நம்பிக்கை அவருக்கு இருந்தது. என்னுடன் அல்லாஹ் ஹஸ்ரத் ஹகீம் மவ்லவி நூருத்தீன் (ரலி) சாஹிப் அவர்களுடன் நடந்து கொண்டதைப் போன்றே நடந்து கொள்வான் என்று நம்பி வந்தார்.

இந்த சம்பவம் உண்மையாகும். அன்னாரின் மனைவி கூறுகின்றார்கள்: நான் இதனை சுயமே கண்டுள்ளேன். அவருக்கு ஒரு பொருளின் தேவை ஏற்படும்போது திடீரென அவரிடம் பணம் வந்து விடும். சமீபத்தில் பத்து வருடத்திற்குப் பிறகு ஒரு Loan Company அவருக்கு போன் செய்தது. உங்களுடைய ஓராயிரம் பவுண்ட்கள் எங்களிடம் உள்ளன என்று அவர்கள் கூறினர். என்னால் எனது வண்டியின் இன்ஸ்யூரன்ஸை செலுத்த முடியும். மேலும் வண்டிக்கான Maintenance தேவைகளையும் அதைக் கொண்டு முழுமை செய்ய முடியும் என்று அவருக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. எனது தேவையை ஜமாஅத்திடமிருந்து பெற்றுக் கொள்வேன் என்று அவர் எண்ணவில்லை. அவருடன் அல்லாஹ்வின் அன்பான நடைமுறையை நான் சுயமே கண்டுள்ளேன் என்று அன்னாரின் மனைவி கூறுகின்றார்கள்.

அவர் தனது ஒரு சம்பவத்தை எடுத்துரைத்துள்ளார். அவர் பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்தார். சுமார் 10 வருடங்களுக்கு முந்தைய விஷயமாகும். ஒரு முறை எனக்கு கடுமையான பசி ஏற்பட்டது. என்னிடத்தில் பணம் இல்லை. முழுவதும் தீர்ந்திருந்தது. நான் தொழுதேன். ஸலாம் கொடுத்த பிறகு படுக்கைக்கு கீழ் பத்து பவுண்டுகள் இருந்ததை நான் கண்டேன். அல்லாஹ் இந்த பணத்தை எனக்கு அனுப்பியுள்ளான் என்பதை எண்ணி நான் ஆச்சரியம் அடைந்தேன் என்று அவர் கூறினார்.

அவரிடத்தில் அதிகமான நம்பிக்கையும் இருந்தது. பொருளாதார ரீதியாக சில ஏற்பாடுகளை மக்கள் செய்து கொள்கிறார்கள் என்று நான் கூறினேன். ஆனால் அல்லாஹ் எனக்கு ரிஸ்கிற்கான ஏற்பாட்டைச் செய்து விடுவான் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. எனவே தேவையின்றி உலகத்திற்கு பின்னால் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. நான் எனது வக்ஃபை முழுமை செய்வேன் என்று என்னிடம் கூறினார்.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: நாங்கள் முதன் முதலில் வாடகை வீட்டில் இருந்தோம். அப்போது எங்களது வாடகை ஒப்பந்தம் முடிந்திருந்தது. மின்சார பில் தொடர்பாக கவுன்ஸில் இவ்வாறு எழுதியது. உங்களது கணக்கில் சற்று அதிகமாக பணம் உள்ளது. 200, 300 பவுண்ட்கள் உள்ளன என்று கவுன்ஸில் எழுதியது. அப்போது அவர் நான் ஜமாஅத்திற்கு இதனை திருப்பிச் செலுத்தி விடுவேன் என்று உடனடியாக கூறினார். ஆனால் இவ்வாறு நீங்கள் கண்டிப்புடன் நடந்து கொள்ள வேண்டும். பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று ஜமாஅத் ஒருபோதும் கூறியிருக்கவில்லை. ஆனால் அவரால் இதனை சகித்துக் கொள்ள முடியவில்லை. நான் ஜமாஅத்திற்கு இந்த பணத்தை திருப்பிக் கொடுத்து விடுவேன் என்று அவர் கூறினார். நான் ஜமாஅத்திற்கு சுமையாக ஆக விரும்பவில்லை என்று கூறினார். என்னால் முடிந்தால் நான் இவை அனைத்தையும் இலவசமாகவே செய்து கொள்வேன். ஜமாஅத்திற்கு சுமையை ஏற்றுவதோ அல்லது ஜமாஅத்திடமிருந்து ஒரு விஷயத்தை விண்ணப்பித்து பெறுவதோ அவருக்கு விருப்பமில்லாமல் இருந்தது. கடைசியாக நான் இவ்வளவு விலை உயர்ந்த ஜமாஅத்தின் பொருட்களை எடுத்துக் கொண்டு ஆஃப்ரிக்கா செல்கின்றேன். எவ்வாறு இதனை பாதுகாப்பேன் என்ற கவலையே அவரிடம் இருந்தது. தம்மைப் பற்றிய எந்த கவலையும் அவருக்கு இருந்திருக்கவில்லை.

மிகவும் விருந்து உபசரிப்பு செய்பவராக இருந்தார். தனது குடும்பத்தையும், எனது குடும்பத்தையும் மிகவும் கருத்தில் கொண்டு வந்தார். எப்போதும் எளிய ஆடைகளையே உடுத்தி வந்தார்.

அன்னாரின் மனைவி கூறுகின்றார்கள்: சில மக்கள் அவரை தவறாக புரிந்து வந்தனர். அல்லது இவரிடத்தில் ஆணவம் உள்ளது என்றோ அல்லது அதிகமாக பேசக்கூடியவர் என்றோ சிலர் எண்ணினர். ஆனால் அவர் மிகவும் நம்பிக்கையுடைய மனிதராக இருந்தார். மிக அன்புடன் அதுபோன்ற விஷயங்களை பேசி விட்டு கடந்து விடுவார். அவரிடத்தில் ஒருபோதும் முற்றிலும் பெயர் அளவில் கூட ஆணவம் இருந்தது கிடையாது. தாலிஃ மிகவும் மன்னிக்கக்கூடியவராக இருந்தார். எல்லாரின் குறைகளையும் திரையிட்டு வந்தார். ஒருபோதும் யாருக்கு எதிராகவும் உள்ளத்தில் விஷயத்தை வைத்தது கிடையாது.

அன்னாரின் தந்தையார் எழுதுகின்றார்கள்: அல்ஹம்துலில்லாஹ் எங்களது மகனை அல்லாஹ் சிறப்பான அருளாலும், கருணையாலும் ஷஹாதத்திற்காக தேர்ந்தெடுத்துக் கொண்டான். ஒரு கனவின் அடிப்படையில் நான் மனதளவில் எனது மனைவியையும், தாலிஃபையும் ஆயத்தப்படுத்தத் தொடங்கினேன். நான் தாலிஃ அவர்களிடம் இந்த கனவை கூறியபோது, தாங்கள் ஷஹீதானதாக கனவு கண்டுள்ளீர்களா? என்று அவர் கூறினார். அவர் கூறுகின்றார்: நான் மிகவும் ஆச்சரியம் அடைந்தேன். உனக்கு எப்படி தெரியும்? என்று அவரிடம் கேட்டேன். தாங்கள் ஷஹீதாகி விட்டதாக நானும் கனவில் கண்டேன் என்று அவர் கூறினார். ஆக எவ்வாறிருப்பினும் அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் ஒரு மகனிற்கு தனது தந்தையின் மீது எந்த அளவிற்கு அன்பு கொள்வதற்கு அனுமதி வழங்கியுள்ளானோ தாலிஃ அந்த அன்பு மற்றும் பாசத்தின் எல்லையை அடைந்திருந்தார். நான் கருதுகிறேன். இதன் காரணமாக அவர் இந்த துஆவை செய்திருக்கக்கூடும். அதாவது தந்தையின் ஷஹாதத்திற்குப் பகரமாக தனக்கு ஷஹாதத்தின் அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்று அவர் துஆ செய்திருப்பார். ஏனென்றால், அல்லாஹ் ஷஹாதத்தின் அந்தஸ்தை அவருக்கு வழங்குவதற்குரிய இடத்தில் அவர் இருந்தார். எனவே அல்லாஹ் அவருக்கே ஷஹாதத் வழங்கினான். நான் உயிருடன் இருந்தாலும் சரி; மரணித்து விட்டாலும் சரி. நான் எனது மிஷனை முழுமை செய்து விட்டேன் என்று குண்டு பாய்ந்த பிறகு மிஷனரி சாஹிபிடம் அவர் கூறியிருந்தார்.

அன்னாரின் தந்தையார் கூறுகின்றார்கள்: நான் உன்னை ஒரு குடும்பத்தில் பிறக்கச் செய்துள்ளேன். இனி அதன் பொறுப்பையும் புரிய வேண்டும். மேலும் அதன் பொறுப்புகளை முழுமை செய்யவும் வேண்டும். இனி உனது வாழ்க்கை உனது வாழ்க்கையாக இல்லை. அது என்னுடையதாகும். எனது கட்டளைகளின்படி வழி நடந்து நீ உனது முழு வாழ்க்கையையும் கழிக்க வேண்டும் என்று குழந்தைப்பருவம் முதலே அல்லாஹ் அவரது உள்ளத்தில் ஊதியிருந்தான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: தாலிஃ தனது வாழ்க்கை மற்றும் மரணத்தின் மூலம் அவன் அந்த பொறுப்புகளின் உரிமையை நிறைவேற்றி விட்டான் என்று முத்திரை பதித்துள்ளான். அவனது உள்ளத்தில் அல்லாஹ் தனது அன்பையும், தனது அன்பர்கள் மீதான நேசத்தையும் நிறைத்திருந்தான். குழந்தைப்பருவம் முதலே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயர் மற்றும் அன்னாரின் குறிப்பை அவரின் கபடமற்ற உதடுகள் உச்சரித்துக் கொண்டே இருந்தன. மேலும் கண்களில் கண்ணீர் வந்துவிடும். ஒரு பரிசுத்தமான உள்ளமாக இருந்தது. அதில் எந்தவொரு தீமையின் நிழலும் கூட இல்லாமல் இருந்தது. வெளிப்படையான மற்றும் மறைமுகமான அழகும் இருந்தது. ஒப்புமை வழங்க வேண்டுமென்றால் நான் ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களுடன் ஒப்புமை வழங்குவேன் என்று அன்னார் கூறுகின்றார்கள். ஒழுக்கத்திலும் இதேபோன்று உறுதியானவராக இருந்தார். அவரது ஆன்மா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான நேசத்தில் 1400 ஆண்டுகளுக்கு முந்தைய மக்கா மற்றும் மதீனாவின் தெருக்களில் வலம் வந்து கொண்டிருந்தது. அவரது உடல் நேசத்தால் நிறைந்திருந்தது. அவரது உடுப்பும், படுக்கையும், உணவும், குடித்தலும், சுவாசமும் அனைத்தும் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்காக இருந்தது.

அன்னாரின் தாயார் அம்மத்துஷ் ஷுகூர் சாஹிபா எழுதுகின்றார்கள்: அல்லாஹ் எனக்கு ஒரு மகத்துவமிக்க பிள்ளையை வழங்கியுள்ளான். நான் மிகவும் நற்பேறு பெற்றவள் ஆவேன். தாலிஃவுடன் 21 ஆண்டு கால வாழ்க்கை உலகத்தின் மாபெரும் அருட்கொடைகளில் ஒன்றாகும்.

அடுத்து அன்னார் ஒரு பெண்ணின் கனவைப் பற்றி குறிப்பிடுகின்றார்கள். அந்தப் பெண் கனவில் இவ்வாறு கண்டார்: ஒரு குழந்தை தொட்டிலில் உள்ளது. அவனது கரம் பேஸ்கடிலிருந்து வெளியே வருகிறது. குழந்தை அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறியதை கேட்டதாக அவர் கூறினார். அத்துடன் ஒரு நீல நிற Card இருந்தது. அதில் அரபியில் அல்லாஹ் என்று எழுதப்பட்டிருந்தது. மேலும்

அத்துடன் ஆங்கிலத்தில் God என்றும் எழுதப்பட்டிருந்தது. அந்தப் பெண்மணி கூறி வந்தார். எனது கருத்தின்படி நீல நிறத்தின் பொருள் சிறுவன் ஆவான். இது தாலிஃ பிறப்பதற்கு முன் ஒரு பெண்மணி கனவில் பார்த்ததாகும். மேலும் அந்தக் கனவு அவருக்கு கூறப்பட்டது. உனக்கு மகன் பிறப்பான். அவன் செல்லும் இடமெல்லாம் அமைதி மற்றும் பாதுகாப்பை பரப்புவான் என்று அந்தக் கனவைக் குறித்து வெளிப்படுத்தினார்கள்.

எவ்வாறிருப்பினும் அன்னாரின் தாயார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் எனக்கு மிகவும் அழகிய மற்றும் அன்பிற்குரிய பிள்ளையை வழங்கினான். நாங்கள் இருவரும் அதாவது அவன் 15 வயதில் இருந்தபோது 2005 ஆம் ஆண்டில் நாங்கள் இருவரும் ஒன்றாக வஸிய்யத் செய்திருந்தோம். மார்க்க விவகாரங்களில் மிகவும் புத்திசாலியாக இருந்தார். மூன்று வயதில் அவன் திருக்குர்ஆனின் சில சூராக்களை மனனம் செய்திருந்தான். தனது தாயாரிடம் கூறியபோது அவர் மிகவும் ஆச்சரியம் அடைந்தார்.

பின்னர் கூறுகின்றார்கள்: எனக்கு நினைவு உள்ளது. அவனது மூன்று வயதில் நான் அவனிடம் தப்லீக் விஷயங்களை பகிர்ந்து வந்தேன். மிகவும் உன்னிப்புடன் அந்த விஷயங்களை என்னுடன் அவர் பகிர்ந்து வந்தார். மேலும் பேசி வந்தார். படிப்பிலும் மிகவும் நல்ல நிலையில் இருந்தார். நல்ல மதிப்பெண்கள் பெற்று வந்தார். இவர் மருத்துவராக ஆக வேண்டும் என்பதே எனது ஆசையாக இருந்தது. ஆனால் அல்லாஹ்வின் திட்டம் வேறொன்றாக இருந்தது. Bio Medical Science–ன் துவக்க கல்வியை முழுமை செய்த பிறகு Journalism–ல் மாஸ்டர் செய்வதற்கு அல்லாஹ் அவருக்கு நற்பேறு வழங்கினான். மகன் மறைந்ததற்குப் பிறகு அவருக்கு தங்களுடன் எந்த அளவிற்கு அன்பு இருந்தது என்ற உணர்வு முன்பை விட அதிகமாக எனக்கு ஏற்பட்டுள்ளது. தாங்கள் MTA விற்காக வரலாற்று சிறப்புமிக்க ஆவணப்படம் தயாரிக்கும் பணியை அவனிடம் கொடுத்தீர்கள். அப்போது நிச்சயமாக நீங்கள் சுதந்திரமாக பணி செய்யுங்கள் என்று வழிகாட்டி இருந்தீர்கள். அதனால் அவன் மிகவும் தாக்கத்திற்குள்ளாகி இருந்தான். Inspired ஆகி இருந்தான்.

அன்னாரின் தாயார் தொடர்ந்து கூறுகின்றார்கள்: அவரின் மனைவி சுதூத் என்னிடம் இவ்வாறு கூறினார்: 2019 ஆம் ஆண்டு அவன் சுதூதிற்கு E-mail–லில் எட்டு நிகழ்ச்சியைப் பற்றிய ஒரு திட்டத்தை அனுப்பினான். மேலும் எனக்கு ஏதாவது ஆகிவிட்டால் அந்த நிகழ்ச்சிகளை முழுமை செய்து சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எட்ட வைத்து விட வேண்டும் என்றும் அவன் அதில் எழுதியிருந்தான்.

அன்னாரது சகோதரி நுஸ்ரத் கூறுகின்றார்கள்: தாலிஃவுடன் தங்கிய பிறகு ஜமாஅத்தின் பணிகளின் மீது அவரின் ஆர்வத்தை நான் அடையாளங்கண்டு கொண்டேன். மார்க்க பணிகளில் மும்முரமாக இருந்ததன் காரணத்தால் பெரும்பாலும் தாமதமாகவே வீட்டிற்கு திரும்புவார். நான் இங்கு பல்கலைக்கழகத்தில் படிப்பதற்காக வந்திருந்தேன். அப்போது அவருடைய வீட்டில் தங்கியிருந்தேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சில முறை இரவு 10 மணிக்குப் பிறகு நடு இரவில் வீடு திரும்புவதும், உணவு உண்பதும் பின்னர் பணியில் ஈடுபடுவதும் வழக்கமாக இருந்தது. விடுமுறை நாளன்றும் அவருக்கு உண்மையில் எந்த விடுமுறையும் இல்லாமல் இருந்தது. ஜமாஅத்தின் பணி முடிந்து விடாதவரை அவர் பணி செய்து கொண்டிருந்தார். எப்போதும் மிகுந்த மகிழ்ச்சியுடனும், உத்வேகத்துடனும் ஜமாஅத் பணிகளில் மும்முரமாக இருப்பார். ஓய்வு நேரத்தில் பெரும்பாலும் ஆவணப்படங்கள் மற்றும் ரேடியோக்களை கேட்டும், பார்த்தும் வருவார். நான் ஒருபோதும் வேறு எவரையும் ஒரு நிகழ்ச்சியை இந்த அளவிற்கு ஆழமாக பார்த்தும், ஆய்வு செய்தும் கண்டதில்லை. தாலிஃ செய்ததுபோன்று வேறு எவரும் ஆய்வு செய்ததில்லை. அவரிடத்தில் அது பற்றி விசாரித்தபோது தனது திறமையில் சிறப்பான வெற்றியை பெறுவதற்கு ஏராளமான ஆவணப்படங்களையும், வீடியோக்களையும் பார்க்க வேண்டியதுள்ளது என்று கூறுவார்.

ஜமாஅத்திற்காக கட்டுரைகளை தயார் செய்து அழகிய மற்றும் தரம்வாய்ந்த வரலாற்று ஆவணப்படங்களை தயார் செய்வதற்கான திறமை அவரிடம் மிக அதிகமாக இருந்தது. மார்க்க அறிவும் மிகவும் பரந்துபட்டதாக இருந்தது. இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் ஒரு நுட்பத்திலும் நுட்பமான அம்சம் குறித்து எனது மூளையில் ஏதாவது கேள்வி எழுந்தால் பெரும்பாலும் அது குறித்து அவரிடம் பேசுவதற்கே எனது எண்ணம் செல்லும். ஹதீஸ்களைப் பற்றிய ஆழமான அறிவு இருந்தது. ஏதாவதொரு ஹதீஸை எங்கேயாவது எடுத்து வைப்பார். அதனை பெரும்பாலான மக்கள் அறிந்திருக்க மாட்டார்கள். அத்துடன் அதன் ஆதாரத்தையும் கூறி விடுவார். பல்வேறு தலைப்புகளில் திருக்குர்ஆன் வசனங்களின் ஆதாரங்களையும் கொடுத்து விடுவார். எல்லா வகையான உரையாடல்களிலும் கலந்து கொள்வார். வாதத்தின்போது மிக ஆதாரத்துடன் தனது கருத்தை எடுத்துரைப்பார். எந்த அளவுக்கென்றால் மற்றவர்களுக்கு அதனை ஒப்புக் கொள்வதை தவிர்த்து எந்த வழியும் இருக்காது.

அரபி மொழியிலும் அறிவு பெற்றவராக இருந்தார். அதிலும் போதுமான புலமை பெறுவதற்கு அவர் முயற்சி செய்தார். அதன் இலக்கணத்தையும் அறிந்திருந்தார். ஏனென்றால் அல்லாஹ்வின் வேதத்தை அதன் அசல் மொழியில் புரிய விரும்பியிருந்தார். இந்த அளவிற்கு ஆழமாக அரபியை எவ்வாறு படித்தீர்கள்? என்று நான் அவரிடம் கேட்டேன். அப்போது அவர் பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கிய ஒரு சுருக்கமான பட்டியலை எனக்கு அனுப்பினார். மேலும் எனக்கு வழிகாட்டினான். இந்த பட்டியலில் 26 பாடங்களும், ஏராளமான கருத்துக்களும் தனித்தனியாக இருந்தன. ஏராளமான வழிமுறைகளும் இருந்தன. இந்த அனைத்து அறிவார்ந்த திறமைகளையும் இறை நெருக்கத்தை பெறுவதற்காகவும், ஜமாஅத்தின் தொண்டிற்காகவும் தாலிஃ பயன்படுத்தினார்.

அன்னாரின் சகோதரி தொடர்ந்து கூறுகின்றார்கள்: இரண்டு சிறப்பான கனவுகள் உள்ளன. அது பற்றி தாலிஃ என்னிடம் நேரடியாக கூறியிருந்தார்.

தாலிஃ தனது மகன் தலாலைப் பற்றி உரையாடியவாறு முதல் கனவை குறித்து கூறினார்: தாலிஃற்கு தமது பெற்றோர்களில் ஒருவர் இறந்து விடுவார் என்ற கடுமையான அச்சம் இருந்தது. அதற்குரிய காரணம் என்னவென்றால், சிறிய தந்தை காதிரின் ஷஹாதத்தைப் பற்றி அவர் அறிந்திருந்தார். இந்த விஷயத்தை கூறும்போது தாலிஃ மிகவும் கவலையடைந்தார். மேலும் தனது குரலை தாழ்த்திக் கொண்டார். இந்த கனவின் விளக்கம் எனது நினைவில் முழுமையாக வெளிப்படவில்லை. ஆனால் தாலிஃ கூறுகின்றார். இதில் ஒட்டுமொத்தமாக ஒரு செய்தி இருந்தது. அது என்னவென்றால், நான் எனது மாமனாரைப் போன்று சில சம்பவம் நடக்கும் என வாதம் செய்யவில்லை. ஆனால் நான் ஒரு கனவைக் கண்டுள்ளேன். அதில் அந்த சம்பவத்தோடு தொடர்புடைய ஒரு நிகழ்வு நடைபெறும் என்ற குறிப்பு கிடைக்கின்றது. தாலிஃ கனவில் இவ்வாறு கண்டார்: அவர் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஆடையை அணிந்திருக்கின்றார். கொடியை பிடித்தவாறு சொர்க்கத்தில் நுழைகின்றார். ஒவ்வொரு நபரும் மிர்ஸா குலாம் காதிர் வந்து விட்டார் என்று அவரது மாமனாரின் பெயரால் அவரை அழைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இரண்டாவது கனவு, ஒரு தூதுச் செய்தியின் வடிவில் என்னிடத்தில் பாதுகாப்பாக உள்ளது. நான் கர்ப்பிணியாக இருந்தபோது நோய்வாய்ப்பட்டேன். நிலைமை மிகவும் மோசமானது. பல முறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். அப்போது எனக்கு மீண்டும் மீண்டும் ஃபோன் செய்வார். எனது நிலைமையை விசாரிப்பார். மேலும் எனக்கு ஆறுதல் கூறுவார். அப்போது அவர் தனது ஒரு கனவை குறித்து என்னிடம் கூறினார். அவரது சகோதரிகள் அவரது மறைவிற்குப் பிறகும் உயிருடன் இருக்கின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கனவைக் கண்டதாக அவர் கூறினார். நான் சொர்க்கத்தில் நுழைகின்றேன். எனது உறவினர்கள் சார்பாக வரவேற்பு விருந்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (கனவில்) நான் மரணித்த உடன் மிகவும் ஆச்சரியப்படுகின்றேன். மேலும் எனது சிறிய சகோதரிகள் எனக்கு முன்பாக மரணித்து விடக்கூடாது என்று கவலை கொள்கின்றேன். எனவே நான் இங்கும் அங்கும் பார்த்தேன். அப்போது நான் அவர்களில் எவரையும் அங்கு காணவில்லை என்று தாலிஃ தனது இந்த கனவைப் பற்றி என்னிடம் கூறினார். அவர் தனது சகோதரியிடம் இந்த கனவு உண்மையென்றால் நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று கூறினார். மருத்துவர்கள் மிகவும் அபாயகரமான நிலைமை என்று கூறினார்கள். ஆனால் நீங்கள் கவலைப்பட வேண்டாம். எனது இந்த கனவு உண்மையென்றால் நீங்கள் சரியாகி விடுவீர்கள் என்று கூறினார். அல்லாஹ்வின் அருளால் அந்த அனைத்து பிரச்சனைகளும் சரியாகி விட்டது.

அவரது சகோதரி கூறுகின்றார்: தாலிஃ அவர்களின் நினைவாற்றலை எண்ணியும் நான் பெருமிதம் கொள்கிறேன். கிலாஃபத் மீதான அவரது நேசம் தன்னிகரற்றதாக இருந்தது.

அவரது சிறிய சகோதரி கூறுகின்றார்கள்: அவர் சிறந்த முன்னுதாரணமானவராக இருந்தார். அவரிடமிருந்து நிறைய விஷயங்களை கற்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. நான் 13, 14 வயது இருந்தபோது நான் எனக்கு விருப்பமான சூராவை ஓதிக்காட்ட வேண்டுமென்று ஒரு நாள் தாலிஃ விரும்பினார். எனவே அவர் எனக்கு சூரா யூஃசுபின் திலாவத்தை ஓதிக் காட்டினார். அதனை மிகவும் அழகிய முறையிலும், மிகவும் அழகிய குரலிலும் ஓதிக்காட்டினார். நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் தர்ஸுல் குர்ஆன் நிகழ்ச்சிகளை நான் கேட்டு வருகிறேன் என்றும் என்னிடம் கூறியிருந்தார். அலுவலகம் செல்லும்போதும், திரும்பும்போதும் இந்த தர்ஸை அவர் கேட்டு வந்தார்.

ஒருமுறை நான் ஒரு நகைச்சுவை ஒன்றை அவரிடம் கூறினேன். அதில் கிறிஸ்துவத்தைப் பற்றிய குறிப்பு ஒன்று இருந்தது. மார்க்கத்தின் காரணமாக அதில் சிறிது கிறிஸ்துவ மார்க்கம் ஏளனம்


**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்: 1800 103 2131**

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 14 Oct 2021 Issue No. 41

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

செய்யப்பட்டிருந்தது. அப்போது நாம் எந்த மார்க்கத்தையும் கேலி செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால் மக்களும் நமக்கு எதிராக பேசுவார்கள் என்றும் என்னிடம் அவர் கூறினார்.

தலைமையக Press Seceratary ஆபித் வஹீத் சாஹிப் அவரின் உறவினரும் ஆவார். மேலும் அவரின் மாமா ஆவார். அன்னார் கூறுகின்றார்கள்: தாலிஃவுடன் எனக்கு சிறப்பான உறவு இருந்தது. ஒரு பந்தமாக மட்டும் இருக்கவில்லை. மாறாக, ஏராளமான உறவுகளை உள்ளடக்கிய பந்தமாக இருந்தது. உறவின் அடிப்படையில் நான் அவரது மாமாவாக இருந்தேன். ஆனால் எங்களுக்கிடையில் வயதில் அதிக வித்தியாசம் இருந்திருக்கவில்லை. அவர் எனக்கு ஒரு சிறிய சகோதரராகவும், நண்பரைப் போன்றும் இருந்தார். வெறும் 7 வருடம் மட்டுமே வித்தியாசம் இருந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் தாலிஃ அவர்களிடம் எப்போதும் இந்த விஷயத்தை உணர்ந்துள்ளேன். மேலும் இதனை நான் அவரிடம் கண்டுள்ளேன். அதாவது அவருக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குடும்பத்துடன் எல்லையற்ற அன்பு இருந்தது. ஆயினும் குடும்பத்தினர் எவராவது எப்போதாவது ஏதாவது தவறான செயல் செய்தால் மிக அதிகமாக வேதனையும், துன்பத்தையும் உணர்ந்து வந்தார். ஏனென்றால் இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் காலத்தின் கலீஃபாவிற்கு அவப்பெயருக்குரிய விஷயமாக உள்ளது. அன்பு இருந்தது. எனினும் அவர்களிடம் கண்மூடித்தனமான அன்பு கொள்ளவில்லை.

அடுத்து துன்பமும், வலியும் இருந்து வந்தது. **குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயருக்கும், குடும்பத்தின் பெயருக்கும், காலத்தின் கலீஃபாவின் பெயருக்கும் இழுக்கு சேர்க்கும் செயலை செய்வதை அவர் ஒருபோதும் சகித்துக் கொள்ள மாட்டார்.** பெரும்பாலும் என்னுடன் இதுபோன்ற விவகாரங்கள் பற்றி பேசி வந்தார். அவரது குரலில் எப்போதும் வலி வெளிப்பட்டு வந்தது. அவருக்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹின் குடும்பத்தின் ஒரு உறுப்பினர் என்பதில் பெருமிதம் இருந்தபோதிலும் மற்றவருக்கு முன்னால் அதனை அறிவித்துக் கொண்டு நடப்பதும் அல்லது அதிலிருந்து ஆகுமற்ற பயன் பெறுவதற்கு முயற்சி செய்வதற்கும் அந்த கண்ணியத்தை பயன்படுத்திக் கொள்ள மாட்டார். ஏராளமான மக்கள் இந்த அடிப்படையில் அவரை அறிந்திருக்கவும் மாட்டார்கள். MTA NEWS இல் பணி செய்த சில மாதங்களுக்குப் பிறகு கூறுகின்றார்கள்: தாலிஃ என்னிடம் வந்தார். மேலும் MTA News மிக சாதாரண பிரிவாக பார்க்கப்படுவாதாக நான் உணர்கிறேன். MTA News பிரிவு மிகவும் பலவீனமான துறை என்பதை மக்கள் வெளிப்படையாகவோ அல்லது தனது நடத்தையின் மூலமாகவோ வெளிப்படுத்துவதாக நான் உணர்கின்றேன் என்று தாலிஃ கூறினார். ஆனால் தாலிஃ இந்த பலவீனத்தை தனது மிஷனாக ஆக்கிக் கொண்டார். மேலும் மிக நம்பிக்கையுடன் இவ்வாறு கூறினார். இன்ஷா அல்லாஹ் பணி முழுமையாகிவிடும்போது மக்கள் MTA News ஐ மிக ஆர்வத்துடன் பார்ப்பார்கள். மேலும் MTA வில் மிகச் சிறந்த நிகழ்ச்சி MTA News என்று அவர்கள் கூறுவார்கள். இது எனது சவாலாகும். இதனை நான் ஒப்புக் கொண்டு விட்டேன் என்று கூறினார். இதற்கு பிறகு தாலிஃ சில ஆவணப்படங்களை தயாரித்தார். மேலும் சில நிகழ்ச்சிகளை தொடங்கினார்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஆவணப்பட தயாரிப்பின்போது பெரும்பாலும் நான் பார்த்துள்ளேன். அவர் 18 அல்லது 19 மணி நேரம் பணி செய்து வந்தார். தற்போதைய ஆஃப்ரிக்க சுற்றுப்பயணமும் கூட அடிப்படையில் இந்த விஷயத்தின் காரணமாகவே அமைந்திருந்தது. அதாவது நான் அவருக்கு வழிகாட்டியிருந்தேன். அதனைக் கருத்தில் கொண்டு அவர் செயல்பட்டார். MTA News துறை நுஸ்ரத் ஜஹான் ஸ்கீம் ஆஃப்ரிக்கா குறித்து ஓர் ஆவணப்படத்தை தயாரிக்க வேண்டும் என்று வழிகாட்டி இருந்தேன். நிகழ்ச்சிக்கேற்ப முதலில் கானா செல்ல வேண்டியதிருந்தது. பின்னர் ஸிராலியோன், பின்னர் கேம்பியா செல்ல வேண்டியதிருந்தது. நுஸ்ரத் ஜஹான் திட்டத்தைப் பற்றி ஆவணப்படம் தயாரிக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஆயத்தமாகி சென்றிருந்தார். ஆஃப்ரிக்கா செல்வதற்கு முன்பு தாலிஃ முழுமையான ஏற்பாட்டுடன் எல்லா விஷயங்களையும் தயார்படுத்திக் கொண்டார். விரிவான சுற்றுப்பயண அட்டவணையை தயார் செய்தார். முழுமையான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி எந்த நேரமும் வீணாகிவிடாமல் இருக்கும் வகையில் தினசரி நிகழ்ச்சிகளை தயார் செய்திருந்தார். உண்மையில் அவர் மிகவும் கவனத்துடன் இதனை தயார் செய்திருந்தார்.

அன்னார் கூறுகின்றார்கள்: பெரும்பாலும் எனது கருத்திலும் தாலிஃ அவர்களின் கருத்திலும் முரண்பாடு ஏற்பட்டு வந்தது. எனக்கு அவருடன் விவாதம் செய்ய நான் தொடங்கியபோதெல்லாம் சில நிமிடத்திற்குப் பிறகு நான் தோல்வியை ஒப்புக் கொண்டு விடுவேன். ஏனென்றால் அவரது விஷயத்தை நான் ஒப்புக் கொள்ளாதவரை அவர் விவாதித்துக் கொண்டே இருப்பார். ஆதாரங்களை வழங்கிக் கொண்டே இருப்பார் என்பதை நான் அறிந்திருந்தேன். இருந்தபோதிலும் நான் கூறுகின்றேன்: நான் ஒரு விஷயத்தை அவரிடத்தில் பார்த்துள்ளேன். அதாவது அவரிடம் இது காலத்தின் கலீஃபாவின் கருத்து என்று கூறப்பட்டால் ஹுஸூர் அவர்களின் கருத்து எனது கருத்திலிருந்து சிறிதளவு வேறுபட்டிருந்தாலும் நான் அதனை முழு உள்ளத்துடன் ஒப்புக் கொள்வேன். என்னிடம் தான் தவறு உள்ளது என்று நான் ஒப்புக் கொள்வேன் என்று அவர் கூறி வந்தார். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்களை குறித்த ஆவணப்படத்தை அவர் தயாரித்துக் கொண்டிருந்தார். அப்போது ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்களின் கொள்ளுப்பேத்தியான அவரது கஸின் இவ்வாறு கூறினார்: அப்பா ஜானின் ஆவணப்படத்தையும் மிகச் சிறந்ததாக தயாரிக்க வேண்டும். தினம் தினம் தயாரிக்கப்படுவதில்லை. அப்போது அவ்வளவு சிறப்பாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால் அது நேரடியாக கலீஃபாவைப் பற்றியதாக இல்லை. ஆயினும் மக்கள் அதனை விரும்புவதற்கு அல்லாஹ் அருள் செய்வானாக என்று அவர் கூறினார். ஆக இது தான் அவருக்கு கிலாஃபத்துடன் இருந்த தொடர்பாகும்.

மிர்ஸா தல்ஹா அஹ்மது அவர்களும் எழுதியுள்ளார்கள்: சவுத்ரி ஜஃபருல்லாஹ் சாஹிப் அவர்களைக் குறித்து ஓர் ஆவணப்படம் தயாரிப்பதற்கும் அவர் எண்ணிக் கொண்டிருந்தார். அதற்காக அவர் என்னிடம் சில பணிகளை கொடுத்திருந்தார். அல்லாஹ்வின் அருளால் மிகச் சிறந்த ஆவணப்படங்களை தயாரித்து வந்தார். அவருக்கு Script writting மற்றும் Story Telling இல் புலமை இருந்தது.

ஆதம் வாக்கர் சாஹிப் எழுதுகின்றார்கள்: (அநேகமாக ஆதம் வாக்கர் சாஹிப் என்றே கருதுகின்றோம்). நான் குழந்தைப் பருவம் முதலே தாலிஃ அவர்களை அறிந்துள்ளேன். நாங்கள் ஒன்றாக குத்தாமுல் அஹ்மதிய்யாவிலும் அதன் பிறகு தலைமையக பிரஸ் அலுவலகத்திலும், MTA விலும் பணி செய்துள்ளோம். MTA வில் சம்பந்தப்பட்ட பணிகளில் குறிப்பாக அவரிடம் நான் ஒரு விஷயத்தை கவனித்துள்ளேன். எப்போதும் தாலிஃ மிகவும் நுட்பத்துடன் பணிகளை ஆய்வு செய்து வந்தார். மிக ஆழமாக சென்று விவகாரங்களை கவனித்து வந்தார். அவரது எண்ணத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்களின் பிரச்சாரம் அல்லது காலத்தின் கலீஃபாவின் வழிகாட்டுதல்களை மக்களுக்கு எட்ட வைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியிருந்தால் உடனடியாக அவர் என்னிடம் பேசுவார். மேலும் தனது எண்ணத்தை வெளிப்படுத்துவார். பல்வேறு Online வழிமுறைகள் மூலமாக எவ்வாறு மக்கள் வரை தூதுச் செய்தியை எட்ட வைக்க முடியும் என்று சிந்திப்பார். இதிலிருந்து தங்களின் வழிகாட்டுதல்களை ஆழம் வரைச் சென்று புரிந்திருந்தார் என்பதும், அதன்படி அமல் செய்வதற்கு முயற்சியும் செய்து வந்தார் என்பதும் தெரிய வருகின்றது. எப்போதும் உண்மையை பேசுவதற்கு முன்னுரிமை வழங்கி வந்தார். ஏதாவது ஆலோசனை கொடுக்க வேண்டுமென்றாலோ அல்லது தனது கருத்தை வெளிப்படுத்த வேண்டுமென்றாலோ எப்போதும் உண்மையுடன் விஷயத்தை எடுத்துரைப்பார். சொற்களில் ஒருபோதும் கலப்படம் இருந்ததில்லை. ஏனைய ஊழியர்களுடன் பணி செய்து வந்தபோதிலும் அவர்களுக்கு எப்போதும் உண்மையான Feedback கொடுத்து வந்தார்.

நஸீம் பாஜ்வா சாஹிப் எழுதுகின்றார்கள்: 2001 முதல் 2009 வரை பிரெட்ஃபோர்டில் நான் முபல்லிக்காக பணியமர்த்தப்பட்டிருந்தேன். அப்போது ஹார்ட்லேபூல் ஜமாஅத்திற்கு நான் சென்று வந்தேன். ஒரு திஃப்லாக மிகவும் ஆர்வத்துடன் நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று வந்ததை நான் பார்த்துள்ளேன். நேரத்தை பேணி வந்தார். மிகவும் கவனமுடையவராகவும், புத்திசாலியாகவும், மார்க்க அறிவை அதிகரித்துக் கொள்வதற்கு ஆர்வம் கொண்டவராகவும், தொழுகைகளை நிறுத்தி நிதானமாக தொழக் கூடியவராகவும், கட்டுப்பட்டவராகவும், விருந்து உபசரிப்பு செய்பவராகவும், பெரியவர்களை மதிக்கக்கூடியவராகவும், காலத்தின் கலீஃபாவின் மீது அன்பு கொள்ளக்கூடியவராகவும் மேலும் அவரது கூற்றுகளை ஆர்வத்துடன் கேட்கக்கூடியவராகவும், பொறுப்புகளை அழகிய முறையில் நிறைவேற்றக் கூடிய,

*(தொடர்ச்சி 9 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad